www.tamilarangam.net

# சமர்

இதழ் 4



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உள்ளே.....

(1) உங்களுடன் சமர்.....

(2) வாசகர்களும் நாங்களும்...

(3) தேசிய இனப்பிரச்சனையும் முஸ்லிம் மக்களும்

(4) துப்பாக்கி நானும் என்செய்வேன் ?

(5) சோவியத் பற்றிய சிறுகுறிப்பு

(6) ஸ்டாலின் பற்றிய பிரச்சனையின் மீது

(7) செங்கொடி அழிந்து விடுமா ? (புதிய ஜனநாயகம்)

(8) என்.எல்.எவ்.டி யின் வரலாறு

(9) தாய்

(10) கவிஞர் கட்டை தாசனுடன்...

(11) இலங்கை நிலைமைகள் (புதிய ஜனநாயகம்)

(12) மனிதாபிமானம் தொடர்பாக மார்க்ஸிம் கோர்க்கி...

www.tamilarangam.net

# உங்களுடன் சமர்...

## பிழைப்புவாதமும் - திரிபுகளும்

எமது தேசத்தின் இரத்த ஆற்றிலிருந்து மறுபடி ''பேச்சுவார்த்தை'' ''அரசியல் தீர்வு'' என்ற குரல்கள் ஒலிக்கின்றன. இரத்தமும், சதையும், எலும்பும் விளைவாக்கி விட்ட, ஆயுதக்கலாச்சாரமே தேசியமாகி விட்ட ஒரு தேசத்தில் இன்னுமொரு நாடகம் ஒத்திகை பார்க்கப்படுகின்றது. மக்களுடைய கைகளில் எதுவும் இல்லை. நிராயுதபாணிகளாக, துப்பாக்கிக்குழலுக்கு முன்னால் பட்டினியோடு கிடக்கும் எமது தேசத்து மக்கள், LTTE என்ற பாசிசக்கும்பலாலும், ஸ்ரீலங்கா இனவெறியர்களாலும் பந்தாடப்படுகின்றார்கள்! சீரழிந்து சிதைந்து போன எமது தேசவிடுதலைப் போராட்டம் LTTE என்ற தனிநபர் ஆயுதக்கும்பலிடமிருந்து பறிக்கப்பட்டு மக்களின் கைகளில் ஒப்படைக்கப்பட வேண்டும். எமது சூழலுக்கேற்ற சரியான தத்துவமொன்று, எமது சமூகத்தின் மீது செயல்படுத்தப்பட வேண்டும். ஒரு தேசவிடுதலையியக்கம், ஒரு கட்சி அல்லது அரசு என்பவை மக்களின் கண்காணிப்பிலிருந்து அந்நியப்படும் பொழுது அது அதுவாக இருக்க முடியாது. மக்களின் கைகளிலிருந்து கட்சி அதிகாரத்தை பறித்துக்கொண்ட போது சோவியத்சிதறிப்போய் விட்டது. ஒடுக்கப்பட்ட மக்களின் கைகளில் அதிகாரம் வழங்கப்பட வேண்டும். இதற்கான ஒரு திட்டம் தேவை !


கடந்த காலம் முழுமையுமே ஆழமாக அவசி ஆராயப்பட வேண்டும். சரணடைவுகளுக்கும், விட்டுக்கொடுப்புகளுக்கும் அப்பால், பிழைப்புவாத அரசியலின் திரிபுகளுக்கு எதிரான போராட்டம் இன்றுவொர் தவிர்க்கமுடியாத முன்தேவையாக உள்ளது. இந்தத்தேவையை முன்னிறுத்தி வலியுறுத்துகின்ற பொழுது, அது பிழைப்புவாதிகளுக்கு எரிச்சலூட்டு வதாகவும், ஆத்திரமூட்டுவதாகவும் இருக்கின்றது. எமது போராட்டம் தொடங்கிய இடத்திலிருந்தே, மீண்டும் தொடங்க வேண்டிய ஒரு துர்ப்பாக்கியமான சூழ்நிலையில்; எமக்கு முன்னுள்ள சமூகக்கடமை என்ன வென்பதை ஒவ்வொரு தேசப்பற்றுள்ள, சமூகவுணர்வுள்ள சக்திகளும் உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

தென்னாசியாவின் கொல்லைப்புறத்தில், சாவினுள் வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஒரு மக்கள் கூட்டத்தின்; அழுகுரல்களும், அவலங்களுமின்று தேசத்தின் எல்லையையும் கடந்து விட்டன. மனிதத்தை நேசிக்கின்ற, உணர்வுள்ள எந்த மனிதனும், இது குறித்து கவலைப்படாமல் இருக்க முடியாது. இந்த வகையிலேயே, இந்த நிகழ்வுகளின் பிரதிபலிப்பாக கவைவடிவங்களை நாம் காணமுடிகின்றது. ஐரோப்பாவில் வெளிவருகின்ற

www.tamilarangam.net

பொதுவான எல்லா தமிழ் சஞ்சிகைகளிலுமே, இதன் பிரதிபலிப்புகளை உணாமுடிகின்றது. இது தேவையானதே! இன்னுமிருக்கின்ற இந்தக்கலை, கலாச்சார வடிவங்களை, ஒரு ஆரோக்கியமான நிலைக்கு வளர்த்தெடுப்பதும், அதன் பாப்பை விரிவாக்குதலும் தேவையானதே! ஆனால், இது மட்டுமல்ல எமது பிரச்சனை! இதற்கு அப்பாலும் எமக்கு இருக்கின்ற அவசியங்களை உணாப்பட வேண்டும். ஒரு புரட்சிகாத் தத்துவமின்றி புரட்சிக்கட்சி இல்லை. ஒரு புரட்சிக்கட்சி இல்லையேல் புரட்சியுமில்லை. என்பது வாலாறறிந்த உண்மை. ஆனால் இந்தத் தேவை இன்று இரண்டாம் பட்சமாக புறக்கணிக்கப்பட்டிருக்கின்றது! எமது தேசவிடுதலைப்போாாட்டத்தின் ஆரம்பத்திலிருந்தே ஒரு தத்துவார்த்த வழிமுறை இருந்திருக்கவில்லை. எமது போாாட்டத்தின் தோல்விக்கான காாணமிதுவென உணாப்பட்ட பிறகுமின்று, மறுபடி மறுபடி உணர்ச்சிக்கொந்தளிப்புகளையும், உள்ளக்குமுறல்களையும் கொட்டித் தீர்த்துக்கொண்டிருப்பது மட்டும் தான் போாாட்டமல்ல என்பதே எமது நிலை.

**************************************



www.tamilarangam.net

## வாசகர்களும் நாங்களும்

இன்றுள்ள நிலையில் புலிக்கு எதிராக வெளிநாடுகளில் இருந்து வெறுமனே அம்பலப்படுத்தல்களை மட்டும் செய்தால் போதாது. புலியினை போராட்ட களத்தில் இருந்து அகற்றி புதிய தலைமையை மக்கள் முன் கொண்டுவா வேண்டுமாயின், முதலில் உலகம் பூராகவும் பரவிக்கிடக்கின்ற தேசபக்த சக்திகளிடையே சரியான விவாதங்களிற்கு ஊடாக பொதுவரசியல் வழியென்று கண்டுபிடிக்கப்படல் வேண்டும். இது பிரதானமானது. நான் இன்று பல போக்குகளை காண்கின்றேன்.

(1) வெறுமனே புலி எதிர்ப்பு

(2) பிழையான படுபிற்போக்கான அரசியல் கருத்துக்கள்

(3) சரியானதை தேடிக்கொண்டு இருப்பவர்கள் (இவர்களிடமும் பல தவறான கருத்துக்களும், மாறுபட்ட பார்வைகளும்)

நான் நினைக்கின்றேன், புலியை அம்பலப்படுத்தல் மட்டும் எமது தேச விடுதலையை பெற்றுத்தராது. ஏனென்றால் ஸ்ரீலங்கா இனவாத அரசின் தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைக்கு ஆயுத ரீதியில் புலிகள் மட்டுமே முகம் கொடுப்பதால், இந்த அம்பலப்படுத்தப்படும் உண்மைகள் மக்களிற்கு புரிந்தாலும் புலிகளின் போராட்டத்தலைமையை மக்கள் நிராகரிக்க முடியாதநிலை இன்று நாட்டில்....

எனவே எம்முன்னுள்ள உடனடிப்பணி ஒருவர் கருத்துக்கு, மற்றவர்கள் மதிப்பளித்து ஊன்றிக்கவனித்து பலத்த விவாதங்கள் ஊடாக முதலில் சரியான அரசியல் மார்க்கம் கண்டுபிடிக்கப்படல் வேண்டும்; அதற்கு முதலில் தோழர்களே மற்றவர்களின் கருத்துக்களுக்கு உதாசீனம் செய்யாது, சொற்பதங்களை கேலியாக குறிப்பிடாமலும், அவைபற்றிய விவாதங்களை தேச விடுதலைப் போராட்டத்தில் உண்மையான விசுவாசம் இருந்தால் நடத்துவது இன்று அவசியமானது.

அதன்பின் பொதுவான உடன்பாடு உடையவர்கள் தத்தமது அரசியல் கருத்துக்களின் கீழ் அமைப்பாக திரண்டு எதிர்காலத்தில் உண்மையான மக்கள் விடுதலை இயக்கம் ஒன்றிற்காக தொடர்ந்தும் விவாதிப்பதுடன், தனித்தனியாக, நட்புரீதியாக ஆயுதமேந்தி புலி + ஸ்ரீலங்கா அரசிற்கு எதிராக போராடலாம்.

இன்றைய போராட்டத்தில் (தமிழீழ தேசிய விடுதலைப் போரில்) நீங்களும், நானும் விரும்பியோ விரும்பாமலோ புலி தான் தமிழ் மக்களின் தேசிய இனவடிப்படையை கட்டிக்காக்கும் போரில் ஈடுபட்டுள்ளது. புலி இன்னமும் அரசுடன் சமாசத்திற்கு போகலாம் என்ற நிலையுள்ள போதும், இல்லை என்றுமில்லை. ஆனால் தமிழ் பிரதேசம், சுயநிர்ணய உரிமை என்பவற்றை

www.tamilarangam.net

இன்னமும் கைவிடக்கூடிய நிலையில் இருப்பதாகவில்லை. புலிகள் மக்களில் தங்கியில்லாமல், துப்பாக்கியிலும் புதிய புதிய ஆயுதங்களின் வருகையிலும் பழிக்குப்பழி, சிங்களப்பிரதேசத்தில் குண்டுவெடிப்பு, சில தலைவர்களை கொன்றால் பிரச்சனையை வெல்லமுடியும் என்ற பிற்போக்கு அரசியலை கொண்டுள்ளவரை, தமிழ் மக்களின் விடுதலைப்போருக்கு தலைமை தாங்கும் திராணி இல்லை. ஆனால் தமிழ் மக்களின் தேசியத்தனமை;

(1) பாரம்பரிய பிரதேசம் பறிப்பதற்கு எதிராகவும்

(2)தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு பதில், பம்மாத்து மாகாணசபைக்கு எதிராகவும்

இப்படிப்பல. குறிப்பாக, தமிழ் மக்களை கொன்று குவிப்பதற்கு எதிராகவும் ஒரு தற்காப்பு யுத்தத்தை மட்டும் பலமாக இன்று நடத்திக்கொண்டிருக்க முடியும்.

<u>மேலும் நீங்கள் இதழில் எழுதியது, சி.ஐ.ஏ புலிகளிற்கு உதவுகின்றது. புலி சி.ஐ.ஏ யின் பிரதிநிதி. அமெரிக்காவின் கைக்கூலி.</u>

தமிழீழப்போராட்டத்தில் தோன்றிய அனைத்து இயக்கங்களுமே குட்டி பூர்ஷ்வா இயக்கங்கள் தான் என்பது என் கருத்து. அதில் சில இயக்கங்கள் பாட்டாளி மக்களின் விடுதலை தான் உண்மையான விடுதலையை முழுமக்களுக்கும் பெற்றுத்தரும் என்றுவுணர்ந்து பாட்டாளிவர்க்க கட்சியான கம்யூனிஸ்ட் கட்சியை கட்டும் நோக்கில் வேலைசெய்தாலும், அவற்றிடையே சரியான தத்துவார்த்த அறிவின்மை, வேலைமுறை இன்மை காரணமாக அவையும்; குட்டிபூர்ஷ்வா இயக்கத்திற்கு மேல் வளர்ந்து பாட்டாளி வர்க்க கட்சியாக முடியாமல் சிதைந்து போயின. சில இந்திய கைக்கூலியாயின.
புலி முதலில் குட்டிபூர்ஷ்வா இயக்கமாக தோன்றினாலும் பின் அது பூர்ஷ்வா வர்க்க இயக்கமாக வளர்ந்து வந்தது. (தேசிய முதலாளியா, தமிழ் தரகு முதலாளியா என்பது விவாதத்துக்கு உரியது) அது தமிழினத்தின் தேசிய விடுதலைப்போராட்டத்தில் தன் தலைமையை வலிந்து ஆயுதத்தினால் திணித்துக்கொண்டது. பூர்ஷ்வா இயக்கம் மக்கள் அரசியல் மயப்படுவதை எப்பொழுதும் அங்கீகரித்ததுமில்லை. புலியும் அதற்கு விதிவிலக்கல்ல. எனவே அது தமிழ் தேசிய எழுச்சியடைந்த இளைஞர்களைக்கொண்டு ஒரு இராணுவத்தை கட்டிக்கொண்டு தமிழீழத்தின் ஆட்சியதிகாரத்தை தன்கையில் எடுப்பதற்காக போராடிக்கொண்டு வருகின்றது. இன்று நடக்கின்ற பிரதான தமிழீழம் என்கின்ற போரில் புலிகள் (பூர்ஷ்வா) தமிழ்மக்கள் சார்பில் போராடுகின்ற ஒரு அமைப்பு என்பதனை யாருமே நிராகரிக்க முடியாது.

அப்படி நிராகரிப்பின், தமிழ் மக்களின் மத்தியில் பல வர்க்கங்கள் உண்டு என்பதனை நிராகரிப்பதாகவே அமையும்.

www.tamilarangam.net

எனவே இன்று நடக்கும் இந்த விடுதலை யுத்தத்தில் புலிகள் போராட்டத்தின் ஒரு நேச அணி.
ஆனால் இந்தப்புலிகள் ஆட்சியதிகாரத்திற்கு வர எந்த பிற்போக்கு கும்பலிடமும் உதவி பெறுவார்கள். இது அவர்களின் வர்க்க குணாம்சம்.

மேலும் தமது அரசியலில் குழம்பிக்கொண்டு இருப்பார்கள், எதனையும் தெளிவாக முன் வைக்கமாட்டார்கள்.
இன்று 3ம் உலக நாடுகள் பூராகவும் மக்கள் விடுதலை யுத்தங்களை ஏகாதிபத்திய கூலி அரசுகளிற்கு எதிராக நடத்திக்கொண்டிருக்கின்றனர். உலகில் ஒரு கம்யூனிச நாடும் இன்று இல்லாமையால்; சரியான திசைவழி இன்றியும், கம்யூனிசம் பற்றிய தெளிவின்மையாலும் இப்போராட்டங்கள் திசை இலக்கு இன்றி போய்க்கொண்டுள்ளன. இது ஏகாதிபத்தியத்திற்கு நல்ல வாய்ப்பாக உள்ளது. அது இரு வழிகளை கைக்கொள்கிறது.
(1) அரசிற்கு சகல உதவிகளையும் செய்து போராட்டத்தை நசுக்க முயல்கிறது.
(2) போராடும் சக்தியில், மக்களை தங்கியிராத சக்திகளை பல வழியிலும் வளர்த்தெடுத்து ;
புரட்சிகர அமைப்புகளை அழித்தொழிப்பது
சில சமயம் போராட்டம் வெல்லப்படுமானால் ஆட்சியதிகாரத்திற்கு வருபவர்களாக இவர்களை வளர்ப்பது.
உ + ம் :- எரித்திரியா

எமது தேசத்தில் நானும், நீங்களும் விரும்புகின்ற கம்யூனிச அமைப்பு தோன்றுவதற்கு ;
தமிழீழம் முன்நிபந்தனையாக உள்ளது. அதன் பின் ஜனநாயக அரசு ஒன்று ஆட்சிக்கு வந்து, அது பாந்துபட்ட மக்களின் ஜனநாயக உரிமைக்காக போராட்டம் நடத்த வேண்டும் (இது தான் பாட்டாளி வர்க்க ஜனநாயகம் என்று கருதுகின்றேன்). அதன் பின் சோசலிசப்போராட்டம், இப்படியே தொடர்ந்து கம்யூனிசப் போராட்டம் வரை செல்லுமென்பது என் கருதுகோள்.

முன்விபந்தனையான தமிழீழம் என்பதில் பல வர்க்க அமைப்பும் போராடுவது தவிர்க்க இயலாதது. இதில் ஏகாதிபத்தியம் தன் சார்பு நிலை எடுக்கக்கூடிய அமைப்பை பலம் பொருந்தியதாக வளர்த்து விடுவது தவிர்க்க முடியாதது.

எனவே நாம் வெறுமனே கூச்சலிட்டுப்பயன் இல்லை. மாறாக உலகப்புரட்சிகா அமைப்புக்களுடன் நட்புறவுகளைப்பேணி ஆழமான

விவாதங்கள் படிப்புக்களை நட்புசக்தி, போர்வழி, மார்க்கம் என்பவற்றை முன்வைத்து பல மடங்கு கஷ்டப்பட்டு வேலை செய்யவேண்டும்.
எனவே முதலில் பிரதான பணியாக :
(1) போராட்டம் பிரதானமாக என்ன முரண்பாட்டைக்கொண்டுள்ளது.
(2) யார் (எந்த வர்க்கம்) எதிரிகள், நண்பர்கள்.
(3) ஆயுதப்போராட்டமா ? இல்லையா ?
(4) எமது அரசியல் கோட்பாடு, முழக்கம், வேலைமுறைகள் என்ன!
என்பது பற்றிய விடைகளைக்காண அனைத்து சஞ்சிகைகளும் ; தமது முழு வேலையாக கருதி செயல்பட வேண்டும். அதனைவிட்டு நான்கு சிறுகதைகள், இருகவிதைகள், ஒரு மொழிபெயர்ப்பு கதை எழுதி வெளியிடுவதால், எமது போராட்டம் முன்நோக்கி செல்ல மாட்டாது.

மேலுள்ளவை பிழை என்று கூறவில்லை. சரியான அரசியல் மார்க்கமின்றி; இந்த கலை, கலாச்சாரம், இலக்கியம் வளா மாட்டாது. அவை வாசிக்க நல்லவையாகவே இருக்கும். மக்களிற்கு பயன் படமாட்டாது.

இந்த தேக்கம் உடைக்கப்பட்டால், அடுத்து நாம் ; பாந்துபட்ட மக்களின் தலைமையை போராட்டத்தில் நிறுவ, புலிகளை நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கலாம். அதனை அங்கீகரிக்காத பட்சத்தில் அவர்கள் மீது ஆயுத யுத்தம் புரிந்து கொள்ள வேண்டியிருக்கும்.

இன்றுள்ள நிலையில் பிரதான பணியான, சரியான அரசியல் வழி, வேலைமுறையின்றி எவர் வேலை செய்ய முற்பட்டாலும்; ரமணியின் பரிதாபகரமான முடிவை நாட வேண்டியிருக்கும்.

*எனவே உங்கள் சமர் புலிகளை அம்பலப்படுத்துவதையே பிரதானமாக கொண்டிராமல்; எமது தேசத்தின் விடுதலை யுத்தத்தில், பாந்துபட்ட மக்களின் நலன்களை கட்டிக்காக்கக்கூடிய பாட்டாளிவர்க்க அரசியல் மார்க்கத்தை கண்டு பிடிக்கும் பணியில், தன்னை முழுமையாக ஈடுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.*

குகன் -- இலண்டன்

இன்று ஈழவிடுதலைப்போராட்டத்தின் திசை வழியைத்தீர்மானிப்பதில், புலிகள பற்றியவொரு பார்வை தவிர்க்க முடியாததாகின்றது. இது ஒரு முன் நிபந்தனையாக இல்லையெனினும் ; இவ்விடயத்திற்கு ஒரு தவிர்க்க முடியாத முக்கியத்துவமுண்டு. சமர் 2, 1 , தூண்டில் ஆகியவற்றில் வெளிவந்த விவாதங்களை வாசித்திருப்பீர்கள் என நம்புகின்றோம். 20ம் நூற்றாண்டின ஆரம்பத்திலிருந்த உலக ஒருங்கமைவும், 2ம் உலக

www.tamilarangam.net

யுத்தத்தின் சற்று பின்னர் இருந்த ஒழுங்கமைவும் இப்போதில்லை. நாளாந்தம் உலக மக்களை ஒடுக்குவதற்கான வழிமுறைகள் தொடர்பாக ஆளும்வர்க்கங்களும், ஏகாதிபத்தியங்களும் புதிய புதிய வழி முறைகளைக்கையாளுகின்றன. வறிய நாடுகளில் எழுகின்ற தேசவிடுதலை யுத்தங்களை அடக்குவதிலும், தமது சந்தைகளை தொடர்ந்து பேணுவதிலும், ஏகாதிபத்தியங்களின் பழைய வழிமுறைகள் சாத்திய மற்றவை யாகிவிட்டன. இப்போது, முற்றிலும் புதிய வழிமுறைகள் கையாளப்படுகின்றன. இந்த நிலையில் 50ஆண்டுகளுக்கு முன்னைய நிலையைப்போல நாம் சிந்திக்க முடியாது. இதனால் ஏற்பட்ட குழப்பத்தின் விளைவாகவே, உங்கள் கடிதத்திலும் முரண்பட்ட கருத்துக்களை காணக்கூடியதாக இருக்கின்றது.

(1) புலி ஒரு தேசிய விடுதலை இயக்கம், ஆனால் தரகு முதலாளித்துவ சக்தியா என்பது விவாதத்திற்குரியது என்ற கருத்து.
(2) புலி எந்த சக்தியிடமும் உதவி பெறுமென்பதும், அரசுடன் சமாசத்திற்கு போகலாமென்பதும்.
முதலில் ஒரு ஏகாதிபத்தியம் புலிக்கு உதவி செய்யவும், புலி உதவி பெறவும் முடியுமானால், ஒன்றில் ஏகாதிபத்திய வாதிகள் முட்டாள் களாகவோ அல்லது புலி தரகு முதலாளித்துவ சக்தி யாகவோ தான் இருக்க முடியும்.

தவிர, தரகு முதலாளித்துவமென்பது, அதிகாரத்திலுள்ள ஒரு வர்க்கம். இது போராடுகின்ற சக்தியல்ல. ஏகாதிபத்தியங்களின் சார்பில் நின்று ; மக்களை அடக்குகின்ற, இந்த வர்க்கத்திற்கென்று எந்தப்புரட்சிகாமான பாத்திரமுமில்லை. ரஷ்யாவின் நிலப்பிரபுத்துவ ஜார் அரசினைப்போலவும், சீனாவின் அரைநிலப்பிராபுத்துவ அரசைப்போலவுமாகும். இதுவே போராட்டத்தில் முதல் எதிரியான வர்க்கம். இதற்கென்று ஒரு தேசியவாதம் கிடையாது. இந்த அடிப்படையிலேயே இந்திய இராணுவத்துடன் (மாகாணசபையில் அதிகாரம் கேட்டு) LTTE நடத்திய பேரமும், சுயநிர்ணய உரிமைக்கோரிக்கையை சில அற்ப சலுகைகளுக்காக விட்டுக்கொடுக்கத் தயாராக இருந்தமையையும் பார்க்கலாம். இது தொடர்பாக 2வது இதழில் குறிப்பிட்டிருந்தோம்.

தவிர, நீங்கள் குறிப்பிடுவது போன்று, மாகாணசபைக்குஎதிராக LTTE தன்

நலனிலிருந்தே போராட முற்படுகின்றது. சொந்த நலனென்பது: எந்த வர்க்கத்தின் பக்கத்திலானது ? இது தொடர்பாக இன்னொரு சந்தர்ப்பத்தில் ஆராய்வோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆனால் இருக்கின்ற போராட்டச்சூழலில், ஏகாதிபத்தியங்களுக்கு எதிரான வர்க்கங்கள் வெற்றி பெறாமலிருப்பதற்காக, ஏகாதிபத்தி யங்களினாலேயே போராட்ட அமைப்புக்கள் பயன்படுத்தப்படுகின்றன. நீங்கள் குறிப்பிட்டது போன்று குட்டிமுதலாளித்துவ அமைப்புக்கள் இலகுவில் இவ்வாறு பயன் படுத்தப்படுகின்றன. இந்த வகையில் நீங்கள் குறிப்பிட்டது போலவே :

போராடும் சக்தியில் மக்களை தங்கியிராத சக்திகளை பல வழியிலும் வளர்த்தெடுத்து ; புரட்சிகர அமைப்புகளை அழித்து ஒழிப்பது. சிலசமயம் போராட்டம் வெல்லப்படுமானால் ஆட்சியதிகாரத்திற்கு வருபவர்களாக இவர்களை வளர்ப்பது.

*புலிகள் ஆட்சியதிகாரத்திற்கு வர எந்த பிற்போக்கு கும்பலிடமும் உதவி பெறுவார்கள். இது அவர்களது வர்க்க குணாம்சம். மேலும் தமது அரசியலில் குழம்பிக் கொண்டு இருப்பார்கள். எதனையும் தெளிவாக முன் வைக்கமாட்டார்கள்.*

என்ற கருத்தே புலிகள் தொடர்பான எமது கருத்தும். இது தொடர்பாக விரிவாக பிறிதொரு கட்டுரையில் விவாதிப்போம். இது தவிர ஏனைய விடயங்கள் தொடர்பாக எமக்கிடையே ஒத்த கருத்துக்களே உள்ளன !

**– ஆசிரியர் குழு –**

## சமர் இதழ் 2 பற்றி...

*(1) சதித்திட்டமா ? (2) 3வது நிலைபற்றி (3) ராஜீவின் கொலை (4) தேசவிடுதலைப்போராட்டமும் தேசிய சக்திகளும் (5) பெண் என்ற அடிப்படையில் எனது கருத்துக்களை முன் வைக்கின்றேன்.*

### (1) சதித்திட்டமா ?

இலங்கையின் அவலநிலை சரியாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.இளம் சமுதாயத்தின் இந்த அழிவுகள் ஈழப் பிரதேசத்தில் புரட்சியை மழுங்கடிக்கும் மேலாதிக்கசக்திகளின் நீண்டகால கூட்டுச்சதித்திட்டமா? என்ற கேள்விக்கு நமது போராட்டத்தின் அனுபவம் பதில் கூறிவிட்டது. தமிழ் தேசிய சுயநிர்ணய உரிமைப்போரில் தவறான தத்துவார்த்த அரசியல் வழிமுறைகளின் காரணமாக மார்க்சிய தத்துவ வழியிலிருந்து விலகி முதலாளித்துவவர்க்க குழுநலன் அரசியல் மேலோங்கியதன் விளைவாக எமது போராட்டம் சீரழிந்து போகி விட்டது, காட்டிக்கொடுக்கப்பட்டது. போராட்ட சக்திகளின் பலவீனத்தின் நிமித்தம் ஏகாதிபத்திய,பிராந்திய

www.tamilarangam.net

ஆதிக்கசக்திகள் தங்களது காங்களை இலகுவாக நகர்த்தி வெற்றி யடைகின்றன. இதனால் நமது தேசமும், மக்களும் சீரழிக்கப்படுகின்றனர். LTTE அதற்கேயுரிய வர்க்க அடிப்படையில் சென்று இன்று முழுக்கமுழுக்க தனது குழுநலனை முன்னுயர்த்தி அதற்காக எதையும் செய்கின்றார்கள். பிரச்சனை இதுதான். மற்றையபடி ஆரம்பம் முதல் கொண்டே LTTE யோ, மற்றைய இயக்கங்களோ திட்டமிட்டே போராட்டத்தில் ஈடுபட்டு ஏகாதிபத்தியங்களுடனோ, பிராந்திய ஆதிக்க சக்திகளுடனோ சேர்ந்து போராட்டத்தை சிதைக்கவில்லை. இன்று உள்ள நிலமை தவறான தத்து வார்த்த அரசியல் வழிகளின் ஆணி அடித்த சின்னங்கள்.

**(2) 3வது நிலை**

நான் தூண்டிலில் வந்த 3வது நிலைபற்றி சென்ற கட்டுரை படிக்கவில்லை. சமர் 1இல் வந்த கருத்தும் படிக்கவில்லை. இந்த கட்டுரையில் எனக்குள்ள கருத்தை மட்டும் எழுதுகின்றேன்.

3வது நிலைபற்றிய விடயத்தில் உங்கள் கருத்தின் அடிப்படையில் மாறுபடுகின்றேன். ஈழப்பிரச்சனையைப் பொறுத்தவரையில் இது ஒட்டுமொத்த இலங்கைப்புரட்சியுடன் தீர்க்க வேண்டியதாகவே நான் கருதுகின்றேன். ஒட்டு மொத்த இலங்கைப் புரட்சியில் தமிழ்த்தேசிய இனப்பிரச்சனை ஒரு குறிப்பான திட்டத்தின் மூலம் தீர்க்கப்பட வேண்டும். இது தொடர்ந்து நமது கருத்து பரிமாற்றங்களினூடாக தீர்க்க வேண்டியதாகும்.

இன்று இலங்கையிலிருந்து புரட்சிப்பணியாற்றுபவர்கள், மதிப்புக் குரியவர்களே! அங்கு இன்றுள்ள அப் பட்டமான பாசிசசூழலில் அமைப்பு ரீதியான இயக்கங்கள் பெரும்பாலும் சாத்தியமற்றதாகவே உள்ளது. அமைப்பு ரீதியான செயற்பாடல்லாத செயற்பாடுகள் நமது இந்த நோக்கத்தை அடைய உதவா என்பது வெளிப்படை. தீர்க்க வேண்டிய பிரச்சனை அமைப்பு ரீதியாக செயற்படமுடியுமா இல்லையா என்பதுதான். இன்றுள்ள இலங்கை சூழலில், குறிப்பிட்ட சூழலுடன் ஒட்டி வாழ்ந்து பிரச்சனையை தீர்ப்பதென்பதைவிட அதற்கு வெளியே இலங்கை சூழல் பற்றிய அறிவைப்பெற்றுக்கொண்டு தத்துவார்த்த அரசியல் அமைப்பு விடயங்களில் ஒரு முடிவை அடைந்து இயங்குவதென்பதே சாதகமானதும், துரிதமானதுமாகும். ஏற்கனவே நாம் தத்துவார்த்த அரசியல் அமைப்பு பிரச்சனையைத் தொடுத்து தீர்த்திருந்தோமெயானால் பிரச்சனை இல்லை. நடைமுறையும் சில புதிய பிரச்சனைகளும் தான் ஏற்படும். ஆனால் இன்று அனைத்தும் செய்தாக வேண்டும். ஆனால் சூழலோ ஆளைக் கண்டாலே கொன்றுவிடும் நிலையிலுள்ளது. பிரச்சனைகளைத் தொடுத்துக் கொண்டால் அன்றுள்ள சூழலிற்கேற்ப வேலைசெய்யத்தொடங்கலாம். ஆகவே, மூன்றாவது நிலை தேவை என்பது விவாதத்திற்கு அப்பாற்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்றைய இலங்கைச் சூழலில் அமைப்பு ரீதியான செயற்பாடுகள் மிகுந்த கடினமானவை. சூழலிற்கேற்ப (பாசிச கருத்து சுதந்திர சூழல்) முறைகளை கையாண்டு இயங்க வேண்டும்.

**(3) ராஜீவின் கொலை**

கட்டுரை இந்திய ஆளும்வர்க்கங்களின் ஆதிக்க விஸ்தரிப்புவாத நோக்கங்களை தெளிவு படுத்தியுள்ளதுடன் தொடர்ந்த அதன் தேசிய இன ஒடுக்குமுறையையும் விளக்கியுள்ளது.

ராஜீவ் கொல்லப்பட்டதென்பது வெறும் பழிவாங்கல் நடவடிக்கையல்ல. அதேநேரம் இக்கொலையை செய்தது LTTE தான் என்று நீங்கள் எப்படிக்கூறுகின்றீர்களெனப் புரியவில்லை. நான் இதைப்பற்றி ஒரு முடிவுக்கும் வாமுடியாத நிலையிலேயே இருக்கின்றேன். நீங்கள் எழுதும் போது தகுந்த ஆதாரங்களுடன் எழுதுவது அவசியமானதாகும். ராஜீவைக் கொன்றது LTTE யோ, அமெரிக்காவோ, பாகிஸ்தானோ, இஸ்ரேலோ யாராக இருந்தாலும் அதற்கு ஒரு அரசியல் நோக்கம் இருக்க வேண்டும். இதுவே, கொலை செய்தது வெறும் தனிமனிதனாக இருந்தால் விடயம் வேறு. ஆனால் ராஜீவின் கொலை என்பது, ஒரு அரசியல் தலைவனை ஒரு அமைப்போ, நாடோ கொன்றதாகவே தெரிகின்றது. அதுவும் இந்தியாவில் தேர்தல் நடந்து ஒரு அரசியல் சூழ்நிலை மாறக்கூடிய கட்டத்தில் நடந்திருக்கின்றது.

இந்திய தேசியத்தை கட்டிக் காத்து வரும் நேரு பாரம்பரையடன் இறுதிநாயகன், தெற்காசிய பிராந்தியத்தின் கவர்ச்சி மிகுந்த தலைவன், இவரைக் கொல்வதன் மூலம் இந்திய தேசியத்தையும், தெற்காசியாவில் இந்தியாவின் உறுதியான ஆதிக்கத்தையும் குலைக்க முடியும். அதே நேரம் குறிப்பாக இலங்கை மீதான இந்தியாவின் பிடியும் தளரும். ராஜீவின் பாத்திரம், எதிரான சக்திகள் என்பன பரிசீலிக்கப்பட்டு முடிவெடுக்கப்பட வேண்டும். என்னைப்பொறுத்தவரை தெற்காசியப் பிராந்திய பிராந்தியத்தில் இந்தியாவின் ஆதிக்கத்தை தளர்த்துவது, இந்திய தேசியத்தை குலைப்பது என்பவற்றில் ஏதோ ஒன்றையோ அல்லது அனைத்தையுமோ நோக்கமாக கொண்ட ஏதோ ஒரு சக்தியே ராஜீவைக் கொன்றிருக்கின்றது. யார் என்பதற்கு இதுவரை ஆதாரம் கிடைக்கவில்லை.

மேலும் ராஜீவ்காந்தி கொலைக்கு பின் தமிழகத்தில் போராளிகள், அகதிகள் மற்றும் தமிழக சனநாயக மற்றும் புரட்சிகா சக்திகள் மீதான திட்டமிட்ட தாக்குதலுக்கு சில நோக்கங்கள் உண்டு.

www.tamilarangam.net

(1) ஈழ விடுதலைப்போரினாலும் குறிப்பாக ஈழத்தில் இந்திய இராணுவத்தின் தோல்வியாலும், இந்தியாவிலும் குறிப்பாக தமிழகத்தில் தோன்றியுள்ள போராட்ட உணர்வுகளையும் சக்திகளையும் அழிப்பது. ஏனெனில் இது இந்திய ஆளும் வர்க்கங்களின் இருப்பிற்கே ஆபத்தானதாகும். தமிழக மக்கள் மீது ஏற்பட்டுள்ள உணர்வென்பது இந்திய இராணுவம் பற்றிய பிரமை அகன்றிருப்பதுடன், மக்கள் ஆயுதம் ஏந்தி அரசை வீழ்த்த முடியும் என்ற நம்பிக்கையைத் தோற்றுவித்துள்ளது.

(2) IPKF இன் தோல்வியானது இந்திய ஆளும் வர்க்கத்தின் தெற்காசியப் பிராந்திய ஆதிக்க விஸ்தரிப்பு நோக்கத்திற்கு பேரடியாகும். எனவே LTTE யையும், ஈழமக்களையும் இழிவுபடுத்தி பயங்கரவாதிகள் ஆகவும், கடத்தல்காரர்களாகவும், சீரழித்தவர்களாகவும் காட்டி ராஜீவையும், CBI யையும், IPKF ஐயும் உயர்த்தி காட்டியது. இதன் மூலம் இந்திய அரசை புனிதமானதாக காட்ட நினைத்தது.

(3) ஈழப்போராட்டத்தை ஒடுக்குவது, அதாவது ராஜீவை கொன்றது தான் என்று கூறி LTTE ஐ முழுமையாக தமிழகத்தில் ஒழிப்பது, ஈழ அகதிகளை தமிழகத்திலிருந்து அகற்றி தமிழ் நாட்டிலிருந்து தூண்டிப்பது, ஈழமக்களை சிதறடிப்பது, போராட்டத்தில் நம்பிக்கை இழக்கச் செய்வது என்பவற்றை திட்டமிட்டுச் செய்தது.

மேற்கண்ட மூன்று நோக்கங்களுக்காகவே இந்திய அரசு அனைத்து ஒடுக்குமுறைகள், பிரச்சாரங்கள், சதிகள் என்பவற்றை மேற்கொண்டது. மேலும் கட்டுரையில் ''தென்கிழக்காசிய விடுதலையை நோக்கி நகர்த்துவது'' என்று குறிப்பிட்டதற்கு அர்த்தம் புரியவில்லை. இது குறிப்பான நாடுகளை உள்ளடக்கிய ஒரு விடுதலையா? இதற்கான திட்டம் என்ன?

### (4) தேசவிடுதலைப்போராட்டமும் தேசிய சக்திகளும்

கட்டுரை கூறவரும் பிரதான கருத்துடன் மாறுபாடில்லை. LTTE ஒரு தேசிய சக்தியல்ல. வெறும் குழுநலனை மட்டும் கொண்ட ஒரு பாசிச கும்பலாகும்.

கட்டுரையில் எனக்குள்ள மாறுபட்ட கருத்துக்கள்

(1) LTTE இன் வர்க்கத்தன்மை (2) இலங்கைப்புரட்சியின் கட்டம் (3) LTTE யை என்னவாக வைப்பது? (4) தரகு முதலாளிகளை வரையறுப்பது எப்படி? (5) இலங்கை அரசிற்கும், LTTE இற்கும் இருக்கும் உறவின் தன்மை (6) ஈழதேச விடுதலைப்போரின் தலைமை சக்திகள் பற்றி?

கட்டுரையின் அடிப்படையாக இருக்கின்ற தேசவிடுதலைப்போர் என்கிற ஈழப்பிரச்சனைக்கான தீர்வில் எனக்கு மாறுபாடு இருக்கின்றது. இதை நான் மூன்றாவது நிலைபற்றிய கருத்திலேயே குறிப்பிட்டுள்ளேன். இதை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இக்கடிதத்தில்லேயே விவாதித்து முடித்து விட முடியாது என்று கருதுகின்றேன். எனவே நமது கருத்துப்பரிமாறலை ஒரு ஒழுங்குமுறை வகுத்துக்கொண்டு தொடங்கலாம் என்று கருதுகின்றேன். இதற்கான ஒழுங்குமுறையை இக்கருத்துக்குக்கீழ் எழுதுகின்றேன். மேலும் மற்றைய அனைத்தும் பிரச்சனைகளும் கூட ஒரு ஒழுங்கமைந்த விவாதத்தினூடு முடிப்பிற்கு வருவது என்பதே முறையானதாக இருக்கும். கட்டுரை பற்றி கருத்தெழுத தொடங்கும் பொழுது முதலாவது தவிர மிகுதி அனைத்தையும் பற்றி எழுதலாம் என்று தான் தொடங்கினேன், எழுதும் போக்கிலேயே ஒழுங்கு படுத்தி விவாதிக்கலாம் என்ற முடிவுக்கு வந்தேன்.

**(5) பெண்**

பெண் அடிமைத்தனம் என்பது சமூக ஒடுக்குமுறைகளில் முக்கியவிடத்தை வகிக்கின்றது என்பது பற்றியும் இது சமூக உற்பத்தி மாற்றத்துடன் எப்படி பல வடிவங்களில் மாறிவருகின்றது என்பது பற்றியும் ஒரு புரிதல் இருக்கின்றது. வர்க்கம், சமூகப்பிரிவு, தட்டுக்கள் என்ற அடிப்படையில் உள்ள சமூகத்தில் பெண்கள் ஒரு சமூகப்பிரிவாக இருப்பதுடன் இப்பிரச்சனை ஒரு புரட்சிகர கட்சியின் தலைமையில் கட்டப்படும் ஒரு முன்னணி அமைப்பில் பெண்கள் அணி திரட்டப் பட்டு அவர்களுக்கான குறிப்பான பிரச்சனைகளை தீர்ப்பதற்கான போராட்டங்கள் கட்டமைக்கப் பட்டு ஒட்டுமொத்த சமூகமாற்றத்துடன் இணைக்கப்பட வேண்டும் என்ற அளவுக்கு இப்பிரச்சனையை கடந்தகாலத்தில் பார்த்திருக்கின்றேன். மனிதம், தூண்டில், சமர் இதழ்கள் படித்த பின்பு தான் இப்பிரச்சனையில் எனது புரிதல் மிகமிக மேலோட்டமாகவும், அதிகவிசயங்களை புரிந்து கொண்ட நிலையிலும் இருக்கின்றது என்பதை உணர்ந்தேன். சமர் இதழ் கட்டுரை சமூக உற்பத்தியுடன் பெண்ணடிமைத்தனம் எப்படி வடிவங்களை மாற்றி தொடர்கின்றது என்பதை குறிப்பாக புரியவைத்தது. கட்டுரையில் குறிப்பிட்டுள்ள புரட்சிகர ஸ்தாபனத்திற்கும் பெண்கள் அமைப்புக்குமிடையிலான உறவு பற்றிய விடயத்திற்கு நான் சில விடையங்களைப்புரிந்து கொண்ட பின்பு கருத்து தெரிவிக்கின்றேன். (கட்டுரை ஈழவிடுதலை இயக்கங்களில் பெண்களும், பெண்கள் அமைப்புக்களும் எவ்வகையில் நடத்தப்பட்டன என்பது பற்றி புரிந்து கொள்ள உதவியது)

அசோக – இந்தியா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ராஜீவ் கொல்லப்பட்டது வெறும் பழிவாங்கல் நடவடிக்கையல்ல. அதே நேரம் அந்த கொலையை செய்தது LTTE தான் என்று நீங்கள் எப்படி கூறுகின்றீர்கள் எனப்புரியவில்லை? என்று குறிப்பிட்டுள்ளீர்கள். இக்கொலை தொடர்பாக இந்திய ஆளும்வர்க்கத்தின் முதலாளித்துவ சாதனங்களினூடாகவே பொதுவான தகவல்கள் வெளிவந்த போதிலும், LTTE தான் இக் கொலையைச்செய்திருக்கின்றது என்பதற்கு நம்பத்தகுந்த ஆதாரங்கள் பல தற்பொழுது இந்தியாவில் வெளியாகியிருக்கின்றன. இங்கு கொல்லப்பட்ட ராஜீவ் காந்தியும், கொலையாளியும் ஆயிரக்கணக்கான மக்களை கொலை செய்தும், அவர்களின் ஆதிக்கத்திற்கு கீழ் உள்ள மக்களை மரணத்திற்கு தள்ளி தாம் ஏகபோகத்தை அனுபவித்தார்கள். ராஜீவைக்கொலை செய்தது LTTE தான் என்பதை வே.பிரபாகரன் உரிமை கோரினால் தான் ஏற்றுக்கொள்ளலாம் என்பதில்லை. ராஜீவ் காந்தியை கொலை செய்ய வி.பி.சிங்கின் தேர்தல் பிரச்சார கூட்டத்திலேயே சிவராசன் ஒத்திகை பார்த்தையும் ராஜீவ் கொலை செய்யப்பட்ட இடத்தில், பிரச்சார மேடையருகில் LTTE சிவராசனும், அவனது சாகாக்களும் நின்றதும், குண்டுவெடித்ததும், இந்தியப்புலனாய்வுத்துறையால் வெளியிடப்பட்ட தகவல்களும், இறுதியாக கொலையாளிகளின் மறைவிடம் பெங்களூரில் முற்றுகைக்கு உள்ளான போது அவர்கள் தற்கொலை செய்து கொண்டதும் உண்மை! ஏன், விடுதலை புலிகளின் தலைமைப்பீடம் ராஜீவ் காந்தியை கொன்றது தாங்கள் இல்லை என்று அறிவித்ததும் உண்மைதான். ஆனால் கொலையை செய்து முடித்த சிவராசன், சுபா போன்றோர் தமது அமைப்பு இல்லை என்று எந்த சந்தர்ப்பத்திலும் பாலசிங்கமோ, பிரபாகரனோ குறிப்பிடவில்லை.

ராஜீவ் கொலைக்கு அரசியல் காரணம் இருக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளீர்கள் ! விடுதலைப்புலிகள் என்ற தரகுமுதலாளித்துவ பாசிசக்கும்பலுக்கும், ராஜீவ்காந்திக்கும் இடையிலான முரண்பாடு என்பது பல்வேறு அரசியல், பூகோள, இராணுவ நலன்களுக்கு உட்பட்டதே! இலங்கை–இந்தியா, இந்தியா–பாகிஸ்தான் ஆகியவற்றிற்கிடையிலான முரண்பாடுகளுடைய அரசியல் அடிப்படையும், விடுதலைப்புலிகள்–இந்திய அரசு ஆகியவற்றின் நலன்களுக்கு இடையிலான அரசியல் அடிப்படையும், ஒரே பிரச்சனைத்தளத்திலிருந்தே பார்க்கப்பட முடியும். இது தவிர புலிகளின் இராணுவநலன்களும் இதற்கு உட்பட்டதே! இந்தியாவின் பிராந்திய வல்லரசு மனோபாவமும், ஏகாதிபத்தியங்களுடனான இந்தியாவிற்கு இருந்த சுயாதீனமுள்ள உறவும், இந்திய–புலிகள் முரண்பாட்டிற்கு மேலும் வலுவுள்ள காரணங்களாக அமைந்திருந்தன. இது தவிர, ராஜீவ் கொலையினூடாக சாதிக்கக்கூடியதாக இருந்ததும் குறிப்பிட தக்கது.

இந்திய தேசியத்தை கட்டிகாத்து வரும் நேரு பாம்பரையின் இறுதி நாயகன் தெற்காசிய தேசியத்தின் கவர்ச்சி மிருந்த தலைவன், இவரை கொலை செய்வதன் மூலம் மேலும் இந்திய தேசியத்தையும், தெற்காசியாவில் இந்தியாவின் உறுதியான ஆதிக்கத்தையும் குலைக்க முடியும்... உங்களது இந்தக்கூற்றை சரியென்று கூறினால் துரோகத்தனம் பிழையென்று கூறினால் வாட்டுத்தனம். இந்தியாவானது, தனது தேவைக்கு அதிகமான சந்தையை கொண்டுள்ள ஒரு நாடு. இந்த ஒரே காரணம், இந்தியாவிற்கு வலுவையும்,

www.tamilarangam.net

சுயாதீனத்தையும் கொடுத்துள்ளது. இந்திய தாகு முதலாளித்துவம் ஏனைய மூன்றாம் உலக நாடுகளிலுள்ள தாகு முதலாளித்துவத்தை விட சற்று வித்தியாசமான இயல்புகளை, இதன் அடிப்படையிலேயே கொண்டுள்ளது. ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான உள்முரண்பாடுகளை தனது நலன்களுக்குச்சாதகமாக இந்திய தாகு முதலாளித்துவம் பாவித்துக் கொள்கின்றது. எந்த ஏகாதிபத்தியம் இந்திய தாகுமுதலாளித்துவத்தின் நலன் களைக்கட்டுப்படுத்த முயல்கிறதோ, தாகு முதலாளித்துவம் இன்னொரு ஏகாதிபத்தியத்துடன் குறித்த ஏகாதிபத்தியத்திற்கு எதிராக உறவை வளர்த்துக்கொள்கின்றது. இது இந்திய ஆளும் வர்க்கத்திற்கு ஒரு சுயாதீனம் இருப்பதைப்போன்று வெளித்தோன்றல் ஒன்றை கொடுக்கின்றதே ஒழிய உண்மையில் இந்த ஆளும் வர்க்கம் இந்திய தேசியத்திற்கு எதிரானதே! இந்தியாவிற்கு இருக்கின்ற இந்த சுயாதீனத்தின் அடிப்படையில் இருந்து எழுகின்ற பிராந்திய வல்லாசு மனோபாவமும், தெற்காசியாவின் மொத்த நலனுக்கும் எதிரானது. இதுவே எமது கருத்து.

30 கோடி மக்களின் வாழ்வுடன் விளையாடியவர்கள் நேருபாம்பரையினர். தமிழகத்தில் பிரிவினைவாதம் வளர காரணமாக இருந்தவர்கள். தெலுங்கான மக்களின் சுயநிர்ணய உரிமையை நசுக்கியவர்கள். கஷ்மீர் மக்களை யுத்த நிலைக்கு தள்ளியவர்கள். பஞ்சாப்பில் காங்கிரஸ் என்றாலே காறி உமிழ்கின்ற அளவுக்கு காங்கிரசின் தேசியத்தன்மை வளர்ந்து உள்ளது. அசாமில் தோன்றியுள்ள பதட்ட நிலை. வடகிழக்கிந்தியாவில் தோன்றியுள்ள பிரிவினைவாத போக்கு. இவற்றை எல்லாம் நோக்கும் போது, இந்திய தேசியம் என்றால் என்ன கேட்கத்தோன்றுகின்றது? தென்கிழக்கு ஆசியாவில் பாகிஸ்தானுடன் மூன்று யுத்தத்தை நாடாத்தியது. சீனாவுடன் யுத்தம் நடாத்தி தோல்வியை கண்டது. பங்களாதேசத்தினை சூறையாடியது. ஈழமக்களை கொன்று குதறியது. பூட்டான் மீது ஏற்படுத்தும் நெருக்கடி. நேபாளத்திற்கு எதிரான பொருளாதார தடை. இதையெல்லாம் நோக்கும் பொழுது தென்கிழக்காசியாவில் இந்திய விஸ்தரிப்பு நோக்கம் கொண்ட ஒரு பேட்டை ரௌடியாக பரிணமிப்பதை பார்க்கலாம்.

✢ எமது கட்டுரையில் தென்கிழக்காசியா விடுதலையை நோக்கி..... என்று குறிப்பிட்டிருப்பது தொடர்பாக ; ஈழ தேச விடுதலைப்போராட்டம் என்பது உலகப்புரட்சியின் ஒரு பகுதியே. இது உடனடித்தேவையாக தென்கிழக்காசிய விடுதலையுடன் தவிர்க்க முடியாமல் பிணைக்கப்பட்டுள்ளது.

✢✲ எந்த அடிப்படையில் பிரச்சனையைத்தீர்ப்பது என்பது குறித்த உங்கள் கருத்து தொடர்பான சகல பிரச்சனைகளுமே ஆழமான கருத்து விவாதங்களுக்கு உட்படுத்த வேண்டிய உடனடிப்பிரச்சனைகளாகும்.

*- ஆசிரியர் குழு -*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேசிய இனப்பிரச்சனையும் முஸ்லிம் மக்களும்

ஸ்ரீலங்காவின் தமிழ்பேசும் மக்கள் தொகையில் 20 சதவீதத்திற்கும் சற்று அதிகமான தமிழ்பேசும் முஸ்லிம்கள் இன்று ஸ்ரீலங்கா பேரினவாத பாசிச அரசாலும், LTTE என்ற சமூகவிரோத பாசிசக்கும்பலாலும், தமது பாரம்பரிய (பாரம்பரை) பிரதேசங்களை விட்டுத்துரத்தப்பட்டுள்ளனர். LTTE , ஜிகாத், இராணுவமென்றும் அனைத்து மேலாதிக்க கும்பல்களும், முஸ்லிம் தேசிய இனத்துக்கெதிரான காடைத்தனங்களை கட்டவிழ்த்து விட்டுள்ளன. ஒரு சர்வதேசிய கலாச்சார இணைப்பைக்கொண்டுள்ள, இந்த முஸ்லிம் தேசிய இனத்தின் பிரச்சனை தொடர்பாக சமூகவுணர்வுள்ள, தேசப்பற்றுள்ள, அனைத்து சக்திகளும் அக்கறை கொள்ள வேண்டிய தேவை இன்று எம்முன்னுள்ளது. இந்த அடிப்படையிலேயே LTTE இற்கும், ஸ்ரீலங்கா அரசுக்கும் எதிரான முஸ்லிம் மக்களின் தேசவிடுதலைப்போராட்டமானது கட்டியெழுப்பப்பட முடியும்.

தமிழ்பேசும் மக்களில் ஒரு பகுதியினரான இந்த முஸ்லிம் தமிழர்களது வரலாற்றின் இன்றைய கட்டத்துக்குரிய நிலை தான் என்ன ?, முஸ்லிம் மக்கள் தனியான ஓர் தேசிய இனமா ? இல்லையா ? இக்கேள்விகளுக்கு விடை கண்டாக வேண்டும். இந்த அடிப்படையிலேயே மொத்த ஸ்ரீலங்காவினதும், ஒடுக்கப்பட்ட தமிழ்பேசும் மக்களது விடுதலை என்பது சாத்தியமாக்கப்பட முடியும்.

இங்கே இனம் RACE என்பது மக்கள் கூட்டங்களை உருவ அமைப்பினூடாக வேறுபடுத்துகின்ற முறையாகும். மூன்று வேறுபட்ட இனங்களை கூர்ப்புக் கோட்பாடு எங்களுக்கு காட்டுகின்றது. ஆனால் உலகில் ஒரு இனத்துக்குள்ளேயே பல தேசிய இனங்கள் இருப்பதை, தேசிய இனக்கோட்பாடு விளக்குகின்றது.

தேசிய இனம் என்பது ஒரு வரலாற்று வகைப்பட்ட மக்கள் கூட்டமாகும். அதுவும் வரலாற்றின் குறித்த கால கட்டத்துக்குரிய ஒரு மக்கள் கூட்டமாகும். முதலாளித்துவத்திற்கு முன்னைய காலகட்டங்களில் தேசிய இனம் இருந்ததில்லை. இந்தத்தேசிய இனம் என்பது அடிப்படையில் தன்னை மற்றைய தேசிய இனத்திலிருந்து வேறுபடுத்திக்காட்டுவதற்குரிய குறியீடாகவே கருதப்படுகின்றது. குறித்தவிதிகளின் அடிப்படையில் மக்கள் கூட்டங்களாக இணைக்கும் ஒரு அமைப்பே இது. நிலப்பிரபுத்துவ காலகட்டத்தில் இவ்வாறு மக்களை கூட்டங்களாக இணைக்கும் அமைப்பாக மன்னனும், போரசுக்களுமே இருந்தன. இந்த கூட்டத்தின் அமைப்பு விரிந்து சுருங்கக்கூடியதாக இருந்தது. மன்னன் யுத்தங்களின் வெற்றி தோல்விகளின் அடிப்படையில், தனது எல்லையை மாற்றிக்கொண்ட போது மக்களும் அதற்கு ஒத்திசைவாக மாறிக்கொண்டனர். மக்களுடைய ஆதரவுடன் கூடவே ஒரு நாட்டு மன்னன் இன்னொரு நாட்டை ஆண்டிருக்கின்றான். ஆனால் தேசிய இனம் என்ற ''தேசிய'' உணர்வின் அடிப்படையில் மக்களை இணைக்கும் இந்த அமைப்பானது; ஒரு குறித்த எல்லைக்குட்பட்டது. இதுவே தேசிய இனத்திற்குரிய பிரதேசம் எனப்படுகின்றது.

www.tamilarangam.net

நிலப்பிரபுத்துவக்காலகட்டத்தில் தனியே மொழி அடிப்படையில் அரசுகள் மக்களை இணைத்திருக்கவில்லை. ஆனால் தேசிய இனம் மொழியின் அடிப்படையில் மக்களை இணைக்கின்றது.


நிலப்பிரபுத்துவ காலகட்டத்தில், குறித்த அரசுகளை அல்லது இராச்சியங்களை நோக்கியே மக்களுடைய பொருளாதார வாழ்வு பிணைக்கப்பட்டிருந்தது. அரசுகள் மாற்றமடையும் போது, அந்தப்பொருளாதார வாழ்வும் மாற்றமடைந்தது. இதனால் ஒரு பொதுவான பொருளாதாரத்தை கொண்டிருக்கவில்லை. ஆனால் முதலாளித்துவம் உருவான பொழுது, இது குறித்த சந்தையை நோக்கியும், அதனைக்கட்டுப்படுத்தும் அரசை நோக்கியும் பொருளாதார வாழ்வு மையப்படுத்தப்பட்டது. எனவே பொதுவான பொருளாதார வாழ்வு ஒன்று மக்களிடையே உருவானது.

இதனடிப்படையிலேயே முதலாளித்துவத்தின் உருவாக்கத்தோடு சேர்ந்தே உருவான தேசிய இனம் என்ற மக்களை இணைக்கும் அமைப்பு உருவானது. மேற்குறித்த அடிப்படையில் தேசிய இனம் பின்வரும் விதிகளுக்கு உட்பட்டதாக அமையும் என ஸ்டாலினால் விஞ்ஞான பூர்வமாக விளக்கப்பட்டுள்ளது.
**ஒரு தேசிய இனம் என்பது பொதுவான மொழி, பிரதேசம் (ஆட்சிப்பகுதி), பொதுவான பொருளாதார வாழ்வு, ஒரு கலாச்சாரத்தைத்தாக்கூடிய மன இயல்பு ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு வரலாற்று ரீதியாக உருவான மக்கள் சமூகமாகும்.**

இவ்வகையில், குறித்த மக்கள் கூட்டத்தைக்கொண்ட சமுதாயங்கள், முதலாளித்துவத்தின் உருவாக்கத்தோடு உருவாயின. இந்த சமுதாயப் பகுதியையே தேசம் என்கின்றோம். இந்த தேசம் என்பது, இன, நிற வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டது. பிரஞ்சு தேசம் ***FRANCE*** காலியர்கள், ரோமானியர்கள், பிரிட்டானியர்கள், டியூட்டோனியர்கள் போன்றவர் களிடமிருந்து உருவானது. ஒரு நூற்றாண்டுகளுக்கு முன்னர் கூட பிரான்சில் பிரஞ்சுமொழி மட்டும் பேசப்படவில்லை. பல மொழிகள் பேசப்பட்டன. முதலாளித்துவத்தின் வளர்ச்சி என்பது பல்வேறு தேசிய இனங்களை ஒன்றோடு ஒன்று இறுக்கமாகப்பிணைத்தது. மக்கள் தொகை, உற்பத்திச்சாதனங்கள், சொத்து இவற்றின் சிதறுண்ட நிலைக்கு முதலாளித்துவ வர்க்கம் முடிவு கட்டியது. மக்களைத்திரட்சி பெறச்செய்தது. கிராமத்தவர்களை நகரங்களை நோக்கி தூத்திற்று. இதனால் தேசிய இனங்கள் படிப்படியாக அழிந்து போயின.

பல்வேறு தேசிய இனங்களைக்கொண்ட நாடானது ஒரே தேசிய இனமாய் உருவெடுத்தது. இன்று பிரஞ்சு தேசம் முழுவதுமே பிரஞ்சுமொழி மட்டுமே பேசப்படுகின்றது. முற்றாக வளர்ச்சியடையாத இலங்கை போன்ற நாடுகளில், ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளாக உருவெடுத்தன. முதலில் முதலாளித்துவமானது நிலப்பிரபுத்துவத்தை ஒழித்து வளர்ந்து வந்த காலத்தில், மக்கள் தேசங்களாக இணைந்து அமையப்பெற்றார்கள். இந்த காலகட்டத்தில் ஒரு நாட்டினுள் பல தேசங்கள் உருவாயின. இந்த வளர்ச்சி முற்றாக நிலப்பிரபுத்துவத்தை வெற்றி கொண்ட போது, பல தேசங்களைக் கொண்ட ஒரு நாடே ஒரு தேசமாக உருவெடுத்தது. இலங்கை, இந்தியா போன்ற ஆசிய நாடுகளில், முற்றாக

www.tamilarangam.net




முதலாளித்துவம் வளர்ச்சியடையாத குறித்த நிகழ்ச்சிப்போக்கானது. ஒரு குறித்த எல்லைக்கு மேலாக மக்களைத்திரளச்செய்யவில்லை. இந்த எல்லை என்பது தான் வேறு வேறு தேசிய இனங்களை உருவாக்கிற்று.

ஒவ்வொரு சமுதாய அமைப்பும் மக்களுடைய சமூகப்பொருளாதார தேவைகளைப்பூர்த்தி செய்ய முடியாமல் போகும் பொழுது, புதிய சமூக அமைப்பை உருவாக்க மக்களைத்தூண்டுகின்றன. இவ்வாறே முதலாளித்துவ சமூக அமைப்பானது நிலப்பிரபுத்துவத்தை உடைத்தெறிந்து உருவானது. இந்த முதலாளித்துவத்தின் வளர்ச்சியின் ஒரு குறித்த கட்டத்தின் ஒரு தனிவகையான சமுதாயமே தேசிய இனங்களாகும்.

பிரான்ஸ் தனியான தேசமாக அமையப்பெற்ற பின்பு, இப்போது பிரஞ்சுமொழி என்பதே தேசிய மொழி. மக்களிடையே அன்றாடத்தொடர்பு மொழியும் அதுவே. ஆனால் இலங்கையும், இந்தியாவும் அப்படியானவையல்ல ! தமிழ் தேசிய இனம், தமிழ் மொழியைப்பொதுமொழியாக கொண்டுள்ளது. சிங்கள தேசிய இனம் சிங்கள மொழியைப்பொதுமொழியாக கொண்டுள்ளது. எனவே தேசிய இனம் என்பது ஒரே மொழியைப்பேசும் மக்களிடையே காணப்படுவதாகும். வேறு வேறு மொழியைப்பேசுகின்ற மக்கள் கூட்டங்கள் ஒரே தேசிய இன்மாக இருக்க முடியாது. எனவே ஒரு நிலையான சமுதாயம் தேசிய இனமாக அமைவதற்கு பொதுமொழி என்பது பிரதான அம்சமாகின்றது.

www.tamilarangam.net

ஆனால் ஒரு மக்கள் கூட்டம் தேசிய இனம் என்றவொரு குறித்த காலத்திற்குரிய நிலையான சமுதாயமாக அமைவதற்கு, மொழி என்பது மட்டும் போதுமான அம்சமல்ல. ஒரே மொழியைப்பேசுகின்ற வேறு வேறு தேசிய இனங்களையையும், தேசங்களையும் நாம் பார்க்கலாம் அமெரிக்காவும், இங்கிலாந்தும்; முஸ்லிம் தேசிய இனமும், மலையகத்தமிழ் தேசிய இனமும்,பூர்வீகத்தமிழ் தேசிய இனமும் தமிழைப்பொதுமொழியாக கொண்ட வேறு வேறு தேசிய இனங்களாகும்: அயர்லாந்தும், இங்கிலாந்தும்; என்று பல உதாரணங்களைக்காணலாம்.

தேசம் என்பது, நிலப்பிரபுத்துவ காலகட்டத்தில், மன்னனுக்குக்கீழ் இராச்சியங்களாக பிணைக்கப்பட்டிருந்த மக்கள் அதனை உடைத்துக்கொண்டு முதலாளித்துவத்தின் மூலதனச்சங்கிலியால் பிணைக்கப்பட்ட போது தேசிய இனம் என்ற புதிய தொடர்பு முறை உருவானது. இத்தொடர்பு முறைக்கு மொழி என்பது அவசியமானது ஆனால் இது மட்டும் போதுமானதல்ல! அமெரிக்காவையும், இங்கிலாந்தையும் எடுத்துக்கொண்டால், இது வேறு வேறு அரசின் எல்லைகளுக்கு உட்பட்ட பிரதேசங்களாகும். எனவே வேறு வேறு அரசின் எல்லைகளுக்கு உட்பட்ட பிரதேசங்கள், வேறு வேறு தேசிய இனங்களாகவே அமையும். பிரஞ்சு மொழியிலிருந்து முற்றிலுமாக வேறுபட்ட பல மொழிகளைப்பேசுகின்ற சுவிஸ், ஜேர்மன் எல்லைகளில் வாழ்ந்த மக்களும் பிரஞ்சு தேசமாக உருவெடுத்த பொழுது பிரான்சுடன் இணைந்து கொண்டு பிரஞ்சு மொழியை பேசுகின்றார்கள். எனவே தேசம் எனப்படும் போது, முதலாளித்துவத்திற்கு பிறகு ஒரு குறித்த அரசின் எல்லைக்கு உட்பட்ட பிரதேசமாக இருப்பது என்பது அவசியமானது. மேலும் இந்த பிரதேசம், மக்கள் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து அதன் முலம் ஏற்படும் நீண்ட நெடிய முறையான கலப்பின் மூலம் தேசிய இனங்கள் உருவாவதற்கு அவசியமானதாகும்.அமெரிக்காவும், இங்கிலாந்தும் வேறு வேறு தேசங்கள். ஆனால் அமெரிக்கர்கள் முன்னர் இங்கிலாந்துக்காரர்களே. (இது பின்னர் அயர்லாந்து, இங்கிலாந்து, ஜேர்மன், பிரான்சு, ஒல்லாந்து, இத்தாலி போன்ற நாடுகளிலிருந்து சென்ற பெருந்தொகையானோரின் கலப்பிற்குட்பட்டது) ஆனால் அமெரிக்காவும், இங்கிலாந்தும் ஒரே தேசமல்ல என்பதற்கு வேறுபட்ட அரசுகள் காரணமாகின்றன. தென்னிந்தியரும், இலங்கையின் பூர்வீகத்தமிழ் மக்களும் தமிழ் பேசும் மக்களே. ஆனால் அவர்கள் வேறு வேறு தேசிய இனங்களே. இவர்களை இணைக்க ஒரு பொதுவான பகுதி இருந்தும், தென்னிந்தியாவிற்கும், இலங்கைத்தமிழர்களுக்கும் காலனியாதிக்கத்திற்கு முந்திய காலத்தில் பலமான தொடர்புகள் இருந்தும், இவ்விரு இனங்களும் வேறு வேறு தேசிய இனங்களே. முதலாளித்துவம் உருவான பின்பிருந்த அரசின் எல்லைகளே இவ்விரு தேசிய இனங்களையும் வேறு வேறு தேசிய இனங்களாக இனம் காட்டின. எனவே பிரதேசம் எனப்படும் பொழுது :

(1) முதலாளித்துவ காலகட்டத்திற்கு பிறகு ஒரே அரசின் எல்லைக்குட்பட்ட பிரதேசமாக இருத்தல் வேண்டும்.
(2) மக்கள் செறிவாக அடர்ந்து வாழுகின்ற பிரதேசங்களாக இருத்தல் வேண்டும்.

(தொடரும்)

www.tamilarangam.net

## துப்பாக்கி நானும் என்செய்வேன் ?

''துவக்குக்குண்மை தெரியாதா !
தெரிந்தால் நீயும் சுடுவாயா !
துரோகம் உனக்குப்புரியாதா !
புரிந்தால் நீயும் வெடிப்பாயா ! ''
என்று என்மேல் கேள்விக்கணை
தொடுத்தால் நானும் என்செய்வேன் ?
உண்மை எனக்கும் தெரிகிறது
உணர்வினைச்சொல்ல உதடில்லை
துரோகம் எனக்குப்புரிகிறது
துப்பாக்கி நானும் என்செய்வேன் ?

உதடிருந்தும் ஊமைகளாய்
உரிமை இழந்தே திரிகின்றீர்
உண்மை கூறத்துணிவின்றி
உயிரைக்காக்க நிற்கின்றீர்
ஒருவர் இருவர் நீதி தேடி
ஓடி வந்தால் விடிவுண்டோ ?
மிகுதி இருக்கும் மனிதரையும்
மிரட்டிடுவார் என்முனையால்
துரோகி கையில் சிறையானேன்
துப்பாக்கி நானும் என்செய்வேன் ?

ஜனநாயகமும் இங்கில்லை
ஜனங்களுக்கும் துணிவில்லை
அமைதியாக இருந்துவிட்டால்
அவலம் உம்மைச்சூழ்ந்திடுமே
கொடுமை பலவும் நாம்பட்டுக்
கொடுமை அழிக்க உருவானேன்
துட்டன் கையில் அகப்பட்டேன்
துப்பாக்கி நானும் என்செய்வேன்.

விமல் (இலங்கை)

www.tamilarangam.net



யெல்சின் ஆர்ப்பாட்டமாக ஆட்சிக்கு வந்தார். மேற்கத்தைய அரசுக்களும், அரைகுறை மாக்சியமூலாம் பூசிய பிதற்றல்களும் கம்யூனிசம் தோல்வியடைந்து விட்டதென வான்கிழிய முழக்க மிட்டனர். யெல்சின் ''ஜனநாயகத்தின் காவலன்'' என பாராட்டுக்கள் ஒருபுறம் நடைபெற, யெல்சின் ஆட்சியில் இருக்கும் வரை சில படங்களையாவது எடுத்துவிட வேண்டுமென்ற துடிப்புடன் புகைப்பட பிடிப்பாளருக்கும், தொலைக்காட்சிக்கும் பல்வேறு தோற்றத்தில் தன்னை பிரபல்யப்படுத்த முயல்கின்றார்.

சமூகத்திலிருக்கும் முரண்பாடுகளைத்தீர்ப்பேன் என வாய்ச்சவாலடித்த யெல்சின் கம்யூனிசத்தின் போலியாக இருந்த குருச்சேவ், பிரஸ்னேவ்..... கொர்ப்பச்சேவ் ஆகியோரிடமிருந்து, எந்த அரசியல் மாற்றமுமின்றி ஆட்சியமைத்ததுடன் ; மேலும் தீவிரமாக கம்யூனிசத்தின் அடிப்படைகளை தகர்த்து முதலாளித்துவத்தை செயற்படுத்த முயன்றார்.

மக்கள் மீண்டும் உண்மையை உணரத்தலைப்பட்டனர். இன்று கம்யூனிசக்கட்சியின் தலைமையில் நாளாந்தம் போராட்டம் தொடர்கின்றது. மக்கள் தெளிவாகவும், விரைவாகவும் உண்மையை இனங் காணத்தொடங்கியுள்ளனர். லெனின், ஸ்டாலின் ஆகியோரின் படங்களைத்தூக்கியபடி மக்கள் வீதிக்கு வருவதை மேற்கத்தைய நாடுகள் மறைக்க முயன்றும் சிலவற்றை மறைக்க முடியாமல் வெளியிட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். யெல்சினை பன்றியாக சித்தரித்ததுடன் ஒரு மாபியாவாகவும், விபச்சாரத்தின் தலைவனாகவும் காட்டும் பல கேலிச்சித்திரங்களுடன் தொடரும் ஊர்வலங்கள், யெல்சின் மிகவிரைவில் தூக்கி எறியப்படப்போகும் நிகழ்வைக் காட்டுகின்றன.

ஒரு குறுகிய காலத்தில் மீண்டும் போராட்டம் தொடருமளவுக்கு மக்கள் யெல்சினையும், ஸ்டாலினுக்குப்பிறகு வந்த போலிக் கம்யூனிஸ்டுக்களையும் இனம் கண்டுள்ளனர். மக்களின் தெளிவான நிலையையும், சரியான ஒரு கட்சியின் தலைமையையும் இன்று சோவியத் கொண்டுள்ளது.

நாளாந்தம் நடைபெறும் ஊர்வலங்களை மேற்கத்தையநாடுகள் வெளியிடாமல் மறைத்த பொழுதும், ஒரு சில போராட்டங்கள் சர்வதேசரீதியில் தாக்கத்தை ஏற்படுத்தியதால் மேற்கத்தைய தொலைக்காட்சிகளில் வெளியிட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன. அவைகளையே ஆதாரமாக வைத்து அவை நடந்த திகதிகளை உங்கள் முன் வைக்கின்றோம்.....

(1) 07/11/91இல் அக்டோபர் புரட்சியின் நினைவாக ஆயிரக்கணக்கானோர் யெல்சினுக்கும், முதலாளித்துவத்துக்கும் எதிராக ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடாத்தினர்.
(2) 22/12/91இல் மீண்டும் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்ட ஊர்வலம் நடைபெற்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(3) 12/01/92இல் ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்ட ஊர்வலம் நடைபெற்றது.
(4) 09/02/92இல் முன்கூட்டியே அறிவிக்கப்பட்ட ஊர்வலத்திற்கு எதிராக யெல்சின் ஊர்வலத்தை நடாத்தினார். இரு ஊர்வலங்களும் தமது பலத்தை காட்டும் வகையில் அமைந்தது. மேற்கத்தைய புள்ளிவிபரப்படி 10 ஆயிரம் பேர் யெல்சினை ஆதரித்து ஊர்வலத்தில் பங்கு கொண்டதுடன், மதச்சிலுவைகள்,ஜார்மன்னனின் படங்களுடன் காணப்பட்டனர். இதற்கு எதிராக நடந்த கம்யூனிச கட்சியின் ஊர்வலத்தில் 30 ஆயிரம் பேர் பங்கேற்றதுடன் லெனின், ஸ்டாலின் படங்களுடன் காணப்பட்டனர்.
(5) 23/02/92இல் பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்ட ஊர்வலம் நடைபெற்றது.
(6) 15/03/92இல் ஊர்வலம் நடைபெற்றதுடன், ''பிராவ்தா'' பத்திரிகை மீண்டும் வெளியிடப்பட்டது. (அன்று 1 1/2 கோடி பத்திரிகைகள் வெளிவந்தது)
(7) 17/03/92, 20/03/92 ஆகிய தினங்களிலும் ஊர்வலங்கள் நடைபெற்றன.

இவைகளையே மேற்கத்தைய தொலைக்காட்சிகள் காட்டியது மட்டுமே. தினம் தினம் கிராமம் கிராமமாக நடைபெறும் சம்பவங்கள் பற்றி சரியான தகவல்கள் எடுக்கமுடியாமையால், அவைகளை முன்வைக்க முடியவில்லை.

இவ்வூர்வலங்களை விட மக்களின் அன்றாட வாழ்க்கையையொட்டி தொலைக்காட்சிகளில் வெளிவந்தவை, அவைகளில் சில.....

(1) ஒரு பெண் கிரம்ளனில் உள்ளவர்கள் கிரிமினல்கள் என சொன்ன பொழுது பத்திரிகையாளர்கள் யெல்சினுமா என கேட்கையில் முதலாவதுகிரிமினல் எனச்சொன்னார்.
(2) ஒரு கடையில் பொருட்களை வாங்க நின்ற கூட்டத்தில் பொருட்கள் இருந்தும் வாங்க முடியாத அளவுக்கு பணமில்லாமையும், தங்கள் கையிலுள்ள பணத்தை எண்ணிப்பார்க்கும் பரிதாப நிலையைப்பார்க்க முடிகின்றது. அந்தளவுக்கு பொருட்களின் விலை 5-15 மடங்கு உயர்ந்துள்ளது. இது பணக்காரர்க்குரிய கடை என அங்கு நின்ற மக்கள் பத்திரிகையாளருக்கு பேட்டியளித்தனர்.
(3) ஆயிரக்கணக்கானோர் யெல்சின் ஆட்சியமைந்த பின் வீதிகளில் கொட்டும் பனிகளில் படுப்பதையும், அவர்களின் அவஸ்தைகளையும் தொலைக்காட்சிகளில் பார்க்க முடிகின்றது.
(4) கொர்ப்பச்சேவ்வின் ஆட்சி காலத்தில் சிறைக்கூடத்தில் முடமாக்கப்பட்ட ஒருவன் தன் நெஞ்சின் ஒரு பக்கத்தில் லெனின் மறுபக்கத்தில் ஸ்டாலின் படங்களை பச்சைகுத்தி இருந்ததை பார்க்க முடிந்தது.
(5) ஒரு பத்திரிகையாளர் ஒரு குடும்பத்தை 4மணி நேரம் கடந்த காலம்,நிகழ்காலம் தொடர்பாக பேட்டியெடுத்த பொழுது அக்குடும்பத்தலைவன் கம்யூனிஸ்டாக ஸ்டாலின் காலத்தில் இருந்தவர். அவர் ஸ்டாலின் காலத்தில் கைது செய்யப்பட்டு சிறைகளில் இருந்தவர். அவரின் கைது ஸ்டாலினின் தவறுகள் பக்கத்துக்குள் அடக்கப்படலாம். அவர் ஸ்டாலின் பற்றி கூறும்

www.tamilarangam.net

பொழுது அவர் சில தவறுகள் விட்டார் எனவும், ஆனால் ஸ்டாலின் சரியாக இருந்தவர் எனவும் கூறிய அவர் குருசேவ்வும், குருசேவ்வுக்கு பின் வந்த அனைவரையும் நிராகரித்தார். அதன் பின் இருந்த கம்யூனிசக்கட்சியில் அவர் இருக்கவுமில்லை.

(6) அண்மையில் சோவியத் இராணுவத்தின் ஒரு பிரிவு லெனின் சிலைக்கு அஞ்சலி செலுத்திய ஒரு வைபவம் நடைபெற்றது.

(7) நாளந்தம் மக்கள் முண்டியடித்தபடி ஒவ்வொரு கடைகளிலும் பொருட்கள் வாங்க கூட்டமாக கூடும் மக்கள் கடைகள் திறந்தவுடன் அங்கு எதுவுமில்லாத நிலையில் யெல்சினையும் அவர் கூட்டத்தையும் கிரிமினல்கள் என சொல்வதை தொலைக்காட்சிகளே காட்டுகின்றன.

இப்படி சில நிகழ்வுகளை தொலைக்காட்சிகள் காட்டியதன் அடிப்படை. இதை நாம் எழுதும் பொழுது இவைகளை விட, அங்கு நாளந்தம் நடக்கும் நிகழ்வுகள் வெளிவாமலும் உள்ளன. மேலும் அங்கிருந்து வரும் தகவல்கள் புரட்சியின் தவிர்க்க முடியாத நிலைமையை கோடிட்டு காட்டுகின்றது. இனிவரும் சோவியத் புரட்சியானது முதலாளித்துவவாதிகள் , அரைகுறை மாக்சிஸ்டுகளின் வாய்ச்சவாடல்களுக்கு மீண்டும் ஒரு பேரிடியை மிக விரைவில் கொடுக்கும்.



www.tamilarangam.net

# ஸ்டாலின் பற்றிய பிரச்சினையின் மீது

ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின்
பகிரங்க கடிதத்தின் மீதான சீனக்
கம்யூனிஸ்ட் கட்சியின் இரண்டாவது விமர்சனம்

'மக்கள் தினசரி', 'செங்கொடி' பத்திரிகைகளின்
ஆசிரியர் குழுக்கள் (செப். 13, 1963)

ஸ்டாலின் பற்றிய பிரச்சினை உலகளாவிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளில் ஒன்றாக இருக்கிறது. அது ஒவ்வொரு நாட்டிலும் அனைத்து வர்க்கங்களிடையேயும் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ள பிரச்சினையாகும். பல்வேறு வர்க்கங்களும் அவற்றின் அரசியல் கட்சிகளும் குழுக்களும் வெவ்வேறு கண்ணோட்டங்களில் இன்றைக்கு பெரும் விவாதத்திற்குள்ளாகியிருக்கிற ஒரு விசயமாக அது இருக்கிறது. இந்தப் பிரச்சினைக்கு இறுதி முடிவு இந்த நூற்றாண்டில் அடைய இயலாது எனத் தோன்றுகிறது. ஆனால் இப்பிரச்சினையில் சர்வதேச உழைக்கும் வர்க்கம் மற்றும் புரட்சிகர மக்களின் பெரும்பான்மையினரிடையே கிட்டத்தட்ட ஒரு ஏகோபித்த உடன்பாடு இருக்கிறது. அதாவது, அவர்கள் ஸ்டாலினை முழுவதுமாக மறுப்பதை அங்கீகரிக்கவில்லை. மாறாக மேலும் மேலும் அவரது நினைவை போற்றிப் பேணி வளர்த்து வருகின்றனர். ரசிய நாட்டின் விசயத்திலும் கூட இதுவே உண்மை. ரசிய கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர்களுடனான எங்களது கருத்துவேறுபாடுஎன்பது மக்களின் ஒரு பகுதியினருடனானதாகும். புரட்சிகர இலட்சியத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக அவர்களையும் இக்கருத்துக்கு இணங்கச் செய்துவிட

www.tamilarangam.net

முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். இந்தக் கட்டுரையை எழுதுவதன் நோக்கம் இதுவே.

''தனி நபர் வழிபாட்டை எதிர்ப்பது'' என்ற சாக்கில் தோழர் குருச்சேவ், ஸ்டாலினை முழுவதுமாக மறுத்தபோது, அவர் (குருச்சேவ்) மிகவும் தவறாகவும், உள்நோக்கம் கொண்டவராகவும் இருந்தார் என்று சீனக் கம்யூனிஸ்ட் கட்சி எப்போதும் கருதி வந்திருக்கிறது.

இந்த 'தனிநபர் வழிபாட்டை எதிர்த்த போராட்டம்' என்பது, தலைவர்கள், கட்சி, வர்க்கம், பொதுமக்கள் ஆகியோருக்கிடையிலான பரஸ்பர உறவு பற்றிய முழுமைபெற்ற லெனின் போதனைகளை மீறுவதாகும் என்றும், ஜனநாயக மத்தியத்துவம் என்ற கம்யூனிசக் கொள்கையின் அடிப்படைகளையே அழிப்பதாகும் என்றும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டி ஜூன் 14 தேதியிட்டு எழுதிய தனது கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளது.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பகிரங்கக் கடிதம் கொள்கை வழிப்பட்ட எங்கள் வாதங்களுக்கு பதில் எதுவும் சொல்வதைத் தவிர்க்கிறது; ஆனால் வெறுமனே சீனக் கம்யூனிஸ்ட் கட்சியை 'தனி நபர் வழிபாட்டின் ஆதரவாளர்கள்', 'ஸ்டாலினுடைய தவறான கருத்துக்களைக் கூவி விற்பவர்கள்' என்று முத்திரை குத்துகிறது.

மென்ஷ்விக்குகளை எதிர்த்துப் போராடியபோது, லெனின் சொன்னார், ''கொள்கை ரீதியான பிரச்சினையில் எதிராளியினுடைய ஒரு வாதத்திற்கு பதில் சொல்லாமல் அவன் மீது 'இரக்கம்' காட்டுவதாகச் சொல்லது விவாதிப்பதாகப் பொருளாகாது மாறாக அவதூறு செய்ய முயல்வது ஆகும்''[1] ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டி தனது பகிரங்கக் கடிதத்தில் காட்டியுள்ள மனப்பான்மையானது மென்ஷ்விக்குகளுடைய மனப்பான்மையுடன் துல்லியமாகப் பொருந்துவதாகும்.

பகிரங்கக் கடிதமானது விவாதத்திற்குப் பதிலாக அவதூறு செய்வதை மேற்கொண்ட போதிலும், நாங்கள் கொள்கை ரீதியான விவரங்கள் மூலமாகவும் மறுக்க முடியாத உண்மைகள் மூலமாகவுமே அதற்கு பதிலளிக்க விரும்புகிறோம்.

மாபெரும் ரசிய நாடு பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தின் முதல் அரசாக இருந்தது. துவக்கத்தில் இந்த நாட்டின் அரசாங்கம் மற்றும்

---

1. வி. இ. லெனின், ''பி. மாஸ்லோவின் பதில் மீதான சில குறிப்புகள்'' தொகுப்பு நூல்கள். ஆங்கிலப் பதிப்பு. அயல் மொழிப் பதிப்பகம். மாஸ்கோ 1963, தொகுதி 15, பக்கம் 265.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கட்சியின் தலைசிறந்த தலைவராக லெனின் இருந்தார். லெனினுடைய மறைவிற்குப் பிறகு, ஸ்டாலின் அவ்வாறிருந்தார்.

லெனினுடைய மறைவுக்குப் பிறகு, ஸ்டாலின் ரசிய நாட்டின் கட்சி மற்றும் அரசாங்கத்தின் தலைவராக ஆனது மட்டுமல்லாமல், சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட தலைவராகவும் ஆனார்.

அக்டோபர் புரட்சியினால் தொடங்கி வைக்கப்பட்ட முதல் சோசலிச அரசு தோன்றி 46 ஆண்டுகள்தான் ஆகின்றன. இதில் கிட்டத்தட்ட முப்பது ஆண்டுகள் இந்த அரசின் தலைசிறந்த தலைவராக ஸ்டாலின் இருந்தார். பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தின் வரலாற்றிலும் சரி, சர்வதேச கம்யூனிச இயக்க வரலாற்றிலும் சரி ஸ்டாலினுடைய செயல் பாடுகள் மிகவும் முக்கியமான இடத்தை வகிக்கின்றன.

ஸ்டாலினை எவ்வாறு மதிப்பிடுவது, ஸ்டாலினைப் பற்றி என்ன அணுகுமுறையை மேற்கொள்வது என்பது ஸ்டாலினை மட்டுமே மதிப் பிடும் ஒன்றல்ல; மிக முக்கியமாக, லெனின் மறைவிலிருந்து சர்வதேச கம்யூனிச இயக்கம் மற்றும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வர லாற்று அனுபவங்களை எவ்வாறு தொகுப்பது என்ற பிரச்சினையாகும் என்ற நிலையை சீனக் கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து மேற்கொண்டு வந்துள்ளது.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது பேராயத்தில் தோழர் குருச்சேவ் ஸ்டாலினை முழுவதும் மறுதலித்தார். சர்வதேச கம்யூனிச இயக்கம் முழுவதையும் பாதிக்கக்கூடிய இந்த கொள்கைரீதியான பிரச்சினையைப்பற்றி அவர் முன்கூட்டியே சகோதரக் கட்சிகளிடம் கலந் தாலோசிக்கத் தவறினார். ஆனால் பிறகு அக்கட்சிகளின் மீது 'ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்ட' ஒன்றைத் திணிக்க முயற்சி செய்தார். ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையின் கருத்திலிருந்து மாறுபட்ட வகையில் ஸ்டாலின் பற்றிய மதிப்பீட்டுக்கு வந்தவர்களை ''தனிநபர் வழிபாட்டின் பாதுகாவலர்கள்'' என்றும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் உள் விவகாரங்களில் ''தலையிடுபவர்கள்'' என்றும் வர்ணிக்கப்பட்ட னர். ஆனால் முதல் பாட்டாளி வர்க்க சர்வாதிகார அரசின் வரலாற்று அனுபவத்தின் சர்வதேச முக்கியத்துவத்தையோ அல்லது சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் தலைவராக ஸ்டாலின் இருந்தார் என்ற வரலாற்று உண்மையையோ யாரும் மறுக்கமுடியாது. இதன் விளைவாக ஸ்டாலின் பற்றிய மதிப்பீடு சர்வதேச கம்யூனிச இயக்கம் முழுவதையும் பாதிக்கக்கூடிய ஒரு முக்கியகொள்கை பிரச்சினையாகும் என்பதை யாரும் மறுக்கமுடியாது. அப்படியானால் பிற சகோதரக் கட்சிகள் ஸ்டாலினைப் பற்றிய யதார்த்தமான ஆய்வையும், மதிப்பீட்டையும் மேற்கொள்வதை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் எந்த அடிப்படையில் அனுமதிக்க மறுக்கிறார்கள்?

ஸ்டாலினுடைய சிறப்பு அம்சங்களையும், குறைபாடுகளையும் பற்றி முழுமையான விஞ்ஞானரீதியான ஆய்வை வரலாற்றுப் பொருள்முதல்வாத அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும் என்று, தொடர்ந்து வலியுறுத்திவந்ததோடு, ஸ்டாலினை முழுவதுமாக மறுதலிக்கக்கூடிய அகவயமான, பண்பாடற்ற கருத்து முதல்வாத வரலாற்று ஆய்வு முறையையும், தான்தோன்றித்தனமான வரலாற்று புரட்டலையும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து எதிர்த்து வந்துள்ளது.

ஸ்டாலின் சித்தாந்த மற்றும் சமூக, வரலாற்று வேர்களைக் கொண்ட தவறுகளைச் செய்தார் என்பதை சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் இடைவிடாது கூறிவந்துள்ளது.ஸ்டாலின் உண்மையாகவே புரிந்த தவறுகளை விமர்சிப்பது அவசியம்; அடிப்படையில்லாமல் அவர்மீது சுமத்தப்பட்ட குற்றங்களை அல்ல; மேலும் ஒரு சரியான நிலைபாட்டிலிருந்து சரியான முறைகளில் அது செய்யப்பட வேண்டும்; ஆனால் நாங்கள் ஸ்டாலின் பற்றிய முறையற்ற விமர்சனத்தையும், தவறான நிலைபாட்டிலிருந்தும் தவறான முறைகளிலும் செய்யப்படும் விமர்சனத்தையும் இடைவிடாது எதிர்த்து வந்துள்ளோம்.

லெனினுடைய வாழ்க்கைக் காலத்தில் ஸ்டாலின் ஜாரிசத்தை எதிர்த்துப் போராடினார். மார்க்சியத்தை பிரச்சாரம் செய்தார்; லெனின் தலைமையிலான போல்ஷ்விக் கட்சியின் மத்திய கமிட்டியின் உறுப்பினர் ஆன பிறகு 1917 புரட்சிக்கு வழிவகுத்த போராட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டார். அக்டோபர் புரட்சிக்குப் பிறகு அவர் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் பலன்களை பாதுகாக்க போராடினார்.

லெனின் மறைவுக்கு பிறகு உள்நாட்டு வெளிநாட்டு எதிரிகளை எதிர்த்து தீர்மானகரமாகப் போராடுவதிலும், உலகின் முதல் சோசலிச அரசை பாதுகாப்பதிலும், உறுதிப்படுத்துவதிலும், ரசிய கம்யூனிஸ்ட் கட்சியையும் ரசிய மக்களையும் அவர் வழி நடத்தினார்.

சோசலிச தொழில் மயமாக்கல் பாதை, விவசாயக் கூட்டுப்பண்ணை முறை ஆகியவற்றை உயர்த்திப் பிடிப்பதிலும், சோசலிச மாற்றம் சோசலிச கட்டுமானம் ஆகியவற்றில் பெரும் வெற்றிகளை ஈட்டுவதிலும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியையும் ரசிய மக்களையும் அவர் வழி நடத்திச் சென்றார்.

பாசிச எதிர்ப்பு யுத்தத்தின் மாபெரும் வெற்றிக்கான கடுமையான நெடிய போராட்டத்தில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியையும் ரசிய மக்களையும் ரசிய இராணுவத்தையும் அவர் வழி நடத்திச் சென்றார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பல்வேறுவகை சந்தர்ப்பவாதத்திற்கு எதிராகவும், டிராட்ஸ்கியவாதிகள், ஜீனோவாதிகள், புகாரின்வாதிகள் மற்றும் பிற முதலாளித்துவ ஏஜெண்டுகள் ஆகிய லெனினிய விரோதிகளுக்கு எதிராகவும் நடந்த போராட்டத்தில் ஸ்டாலின், மார்க்சிய—லெனினியத்தைப் பாதுகாத்து வளர்த்தார்.

அழிக்க முடியாத மார்க்சிய—லெனினிய படைப்புக்களாக விளங்கும் ஏராளமான கோட்பாட்டு ரீதியான படைப்புகள் மூலமாக ஸ்டாலின் சர்வதேச கம்யூனிச இயக்கத்திற்கு நிரந்தரமான பங்களிப்பை செய்துள்ளார்.

சீன மக்கள் உள்பட அனைத்து மக்களின் புரட்சிகரப் போராட்டங்களுக்கு பெருமளவு உதவக்கூடிய, பாட்டாளி வர்க்க சர்வதேசியத்துக்கு முற்றிலும் பொருந்திய அயலுறவுக் கொள்கையைக் கடைபிடிப்பதிலும் ரசிய கட்சி மற்றும் அரசாங்கத்தை ஸ்டாலின் வழி நடத்தினார்.

ஏகாதிபத்தியவாதிகள் மற்றும் அனைத்து எதிர்புரட்சியாளர்களின் இணக்கமற்ற எதிரியான ஸ்டாலின் அவர்களுக்கெதிரானபோராட்டத்தை வழி நடத்திச் செல்வதில் வரலாற்றுப் பேரலைகளின் முன்னணியில் நின்றார்.

ஸ்டாலினுடைய நடவடிக்கைகள் மாபெரும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின், மாபெரும் ரசிய மக்களின் போராட்டங்களுடன் மிக நெருக்கமாகவும், உலக முழுவதிலுமுள்ள மக்களின் புரட்சிகரப் போராட்டங்களுடன் பிரிக்க முடியாத வகையிலும் பிணைக்கப்பட்டிருக்கின்றன.

ஸ்டாலினுடைய வாழ்க்கை ஒரு மாபெரும் மார்க்சிய—லெனினிய வாதியின் வாழ்க்கையாகும்; ஒரு மாபெரும் பாட்டாளி வர்க்க புரட்சியாளரின் வாழ்க்கையாகும்.

ஒரு மாபெரும் மார்க்சிய-லெனினியவாதியும்,பாட்டாளிவர்க்க புரட்சியாளருமாகிய ஸ்டாலின் ரசிய மக்களுக்கும், சர்வதேச கம்யூனிச இயக்கத்திற்கும் மகத்தான பணிபுரிந்துள்ள அதே வேளையில் சில தவறுகளையும் செய்துள்ளார் என்பது உண்மையே. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் தனக்கு முன்னுதாரணமாக பின்பற்றிச் செல்ல எதுவும் இல்லாத காலத்தில் ஸ்டாலின் இழைத்த சில தவறுகள் கொள்கை ரீதியானவை; ஒருசில தவறுகள் நடைமுறை பணிகளின் போக்கில் இழைக்கப்பட்டவை; சில தவிர்க்கப்பட்டிருக்கக்கூடியவை; சில மிக அரிதாகவே தவிர்க்கப்பட்டிருக்க முடியும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தனது சிந்தனை முறையில் ஸ்டாலின் ஒருசில பிரச்சினைகளில் இயக்கவியல் பொருள்முதல்வாதத்திலிருந்து விலகி இயக்க மறுப்பியல் மற்றும் அகநிலைப் போக்கிற்கு இறையானார். அதன் விளைவாக சில சமயங்களில் யதார்த்தத்திலிருந்தும் மக்களிடமிருந்தும் விலகிச் சென்றார்; கட்சியின் உள்ளேயும், வெளியேயும் நடந்த போராட்டங்களில் ஒரு சில சமயங்களில் ஒரு சில பிரச்சினைகளில் இயல்பாகவே மாறுபட்டுள்ள இரண்டுவகையான முரண்பாடுகளை-அதாவது நமக்கும் எதிரிக்கும் உள்ள முரண்பாட்டையும், மக்களுக்கிடையே உள்ள முரண்பாட்டையும்-அவர் போட்டு குழப்பிவிட்டார். மேலும் அவற்றை கையாள்வதில் தேவைப்படும் வேறுபட்ட முறைகளையும் குழப்பிக்கொண்டார். ஸ்டாலின், எதிர்ப்புரட்சியை நசுக்குவதில் ஈடுபட்டபோது தண்டிக்கப்படவேண்டிய பல எதிர்புரட்சியாளர்கள் உரிய தண்டனையைப் பெற்றார்கள் அதே சமயத்தில் சில நிரபராதிகளும் தவறாக தண்டிக்கப்பட்டார்கள். 1937லும் 1938லும் எதிர்ப் புரட்சியாளர்களை நசுக்குவதை பெருமளவில் விரிவாக்கும் தவறு நிகழ்ந்தது. கட்சி மற்றும் அரசு அமைப்புகள் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் அவர் பாட்டாளி வர்க்க ஜனநாயக மத்தியத்துவத்தை முழுமையாக கடைபிடிக்கவில்லை. ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அதை அவர் மீறினார். சகோதரக் கட்சிகள் மற்றும் நாடுகளது உறவுகளை கையாள்வதில் அவர் சில தவறுகள் புரிந்தார். சர்வதேச கம்யூனிச இயக்கத்திலும் அவர் சில மோசமான ஆலோசனைகளை வழங்கினார். இத்தவறுகள் சர்வதேச கம்யூனிச இயக்கத்துக்கும் ரசிய நாட்டுக்கும் சில இழப்புகளை ஏற்படுத்தின.

ஸ்டாலினுடைய தகுதிகளும், தவறுகளும் வரலாற்று ரீதியான புறநிலை யதார்த்த வகைப்பட்டவை; இரண்டையும் ஒப்பிடும்போது அவருடைய நிறைகள் அவருடைய தவறுகளை காட்டிலும் மிகுதியானவை என்பதைக் காணமுடிகிறது. அவர் பிரதானமாக சரியானவராக இருந்தார். அவருடைய தவறுகள் இரண்டாம் பட்சமானவையாகவே இருந்தன. ஸ்டாலினுடைய சிந்தனைகளையும் பணிகளையும் ஒட்டு மொத்தமாக தொகுத்து பார்க்கும்போது ஒவ்வொரு நேர்மையான கம்யூனிஸ்டும் சந்தேகத்திற்கு இடமின்றி வரலாற்றுக்கு மதிப்புக்கொடுத்து ஸ்டாலினிடம் இருந்த பிரதானமானவற்றை முதலில் கவனிப்பான். எனவே ஸ்டாலினுடைய தவறுகள் சரியானவகையில் மதிப்பிடப்பட்டு, விமர்சிக்கப்பட்டு களையப்படும்போது ஸ்டாலினுடைய வாழ்க்கையில் பிரதானமாக இருந்தவற்றை பாதுகாப்பதும், அவர் பாதுகாத்து வளர்த்த மார்க்சிய-லெனினியத்தைப் பாதுகாப்பதும் அவசியமாகும்.

இரண்டாம் பட்சமானவையாக மட்டுமே இருந்த ஸ்டாலினுடைய தவறுகள் வரலாற்றுப் படிப்பினையாக எடுத்துக் கொள்ளப்படுமாயின் அது பயனுள்ளதாக இருக்கும். ரசியா மற்றும் பிற நாடுகளது கம்யூ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

னிஸ்டுகள் அந்த தவறுகளை மீண்டும் இழைக்காமலிருப்பதற்கு அல்லது தவறுகளைக் குறைத்துக்கொள்வதற்கு இந்தப்படிப்பினைகள் எச்சரிக்கையாகப் பயன்படும். நேர்மறை மற்றும் எதிர்மறையான வரலாற்றுப் படிப்பினைகள், அவை வரலாற்று உண்மைகளைத் திரித்துப் புரட்டாமலும், சரியாகத் தொகுத்தும், உறுதி செய்யப்பட்டும் இருப்பின் அவை அனைத்து கம்யூஸ்னிடுகளுக்கும் பயனுள்ளவையாக இருக்கும்.

பல தவறுகள் இருப்பினும் மாபெரும் பாட்டாளி வர்க்கப் புரட்சியாளராக இருந்த பெபல், ரோசாலுக்சம்பர்க் போன்றவர்களுடன் மார்க்சியவாதிகளின் அணுகுமுறை, இரண்டாவது அகிலத்தின் திரிபுவாதிகளுடனான அணுகுமுறையிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாக இருக்கும் என்று லெனின் பல சமயங்களில் சுட்டிக் காட்டினார். மார்க்சியவாதிகள் இவர்களுடைய தவறுகளை மறைக்கவில்லை. மாறாக அத்தகைய உதாரணங்கள் மூலமாக ''அவற்றை எவ்வாறு தவிர்ப்பது, புரட்சிகர மார்க்சியத்தின் கடும் தேவைகளுக்கு எவ்வாறு ஈடுகொடுப்பது''[1] என்பதை கற்றுக்கொண்டார்கள். அதற்கு மாறாக திரிபுவாதிகள், பெபல் மற்றும் ரோசாலுக்சம்பர்க்கின் தவறுகளைப் பற்றி ''கூவினார்கள்'' ''கொக்கரித்தார்கள்''. திரிபுவாதிகளைக் கேலி செய்த லெனின் இந்தவிசயத்தில் ஒரு ரசிய பழங்கட்டுக்கதையை மேற்கோள் காட்டினார். ''சில சமயங்களில் கழுகுகள் கோழிகளைக் காட்டிலும் தாழ்வாக பறக்கலாம், ஆனால் கோழிகள் ஒருபோதும் கழுகுகளின் உயரத்திற்கு பறக்க முடியாது''[2] பெபலும், ரோசாலுக்சம்பர்க்கும் ''மாபெரும் கம்யூனிஸ்டுகள்'' மேலும் அவர்களுடைய தவறுகளுக்கு பின்பும் ''கழுகுகளாக''வே திகழ்ந்தார்கள். அதே சமயத்தில், திரிபுவாதிகள் ''உழைக்கும் வர்க்க இயக்கத்தின் கொல்லைப்புற சாணக் குவியலிடையே'' ''கோழிகளின்'' கூட்டமாக இருந்தனர்.[3]

பெபல் மற்றும் ரோசாலுக்சம்பர்க்கின் வரலாற்றுப் பாத்திரங்கள் எந்த வழியிலும் ஸ்டாலினுடைய பாத்திரத்துடன் ஒப்பிடப்பட முடியாதவை. ஸ்டாலின் ஒரு வரலாற்று சகாப்தம் முழுவதும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் மற்றும் சர்வதேச கம்யூனிச இயக்கத்தின்மாபெரும்

---

1. வி. இ. லெனின், ''தொழிற்சங்கங்கள் மீதான கட்சியின் மனப்பான்மை பற்றி வய்னாவ் (ஏ.வி.லூனாச்சார்ஸ்கி) எழுதிய பிரசுரத்திற்கான முன்னுரை'' ஆங்கிலப் பதிப்பு. அயல் மொழிப் பதிப்பகம், மாஸ்கோ 1962, தொகுதி 13, பக்கம் 165.

2. வி. இ. லெனின் '' பத்திரிகையாளனின் குறிப்புகள்'' தேர்வு நூல்கள், ஆங்கிலப் பதிப்பு இண்டர் நேசனல் பப்ளிசர்ஸ், நியூயார்க் 1943 தொகுதி 13, பக்கம் 312.

3. மேற்கண்ட நூலின் பக்கம் 313.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தலைவராக இருந்தார். அவரைப் பற்றி மதிப்பிடும்போது அதிகக் கவனம் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

ஸ்டாலினைப் 'பாதுகாப்பதாக' சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மீது ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் குற்றம் சாட்டுகிறார்கள். ஆம், நாங்கள் ஸ்டாலினைப் பாதுகாக்கவே செய்கிறோம். குருச்சேவ், வரலாற்றை திரித்து ஸ்டாலினை முழுவதுமாக மறுதலிக்கும்போது இயல்பாகவே நாங்கள் சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் நலன்களையொட்டி ஸ்டாலினைப் பாதுகாக்க வேண்டிய தவிர்க்க முடியாத வரலாற்றுக் கடமையை ஏற்றுள்ளோம்.

ஸ்டாலினை ஆதரிக்கும்போது சீனக் கம்யூனிஸ்ட் கட்சி அவருடைய சரியான பகுதியை ஆதரிக்கிறது. அக்டோபர் புரட்சியால் உருவாக்கப் பட்ட முதல் பட்டாளி வர்க்க அரசின் புகழ்மிக்க வரலாற்றுப் போராட்டத்தை ஆதரிக்கிறது; ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் போராட்டத்தின் புகழ்மிக்க வரலாற்றை ஆதரிக்கிறது. உலக முழுவதிலுமுள்ள உழைக்கும் மக்களிடையே சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் மதிப்பை பாதுகாக்கிறது. சுருங்கக் கூறின், அது மார்க்சிய-லெனினியக் கொள்கையையும், நடைமுறைகளையும் ஆதரிக்கிறது. சீனக் கம்யூனிஸ்டுகள் மட்டும் இதைச் செய்து கொண்டிருக்கவில்லை. மார்க்சிய—லெனினியத்தின் மீது பற்றுறுதி கொண்ட அனைத்து கம்யூனிஸ்டுகளும், அனைத்து உறுதிமிக்க புரட்சியாளர்களும், அனைத்து நேர்மையான உள்ளம் கொண்ட மக்களும் இதையே செய்து வருகிறார்கள்.

ஸ்டாலினை ஆதரிக்கும் வேளையில், நாங்கள் அவருடைய தவறுகளை ஆதரிக்கவில்லை. நீண்ட காலத்துக்கு முன்பே சீனக் கம்யூனிஸ்டுகள் ஸ்டாலினுடைய தவறுகளில் சிலவற்றின் நேரடி அனுபவத்தைப் பெற்றிருக்கிறார்கள். ஒருசமயத்திலோ அல்லது மற்றொரு சமயத்திலோ சீனக் கம்யூனிஸ்ட் கட்சியில் எழுந்த தவறான 'இடது' மற்றும் 'வலது' சந்தர்ப்பவாதப் பாதைகளில் சில, ஸ்டாலினுடைய ஒரு சில தவறுகளின் தாக்கத்தினால் எழுந்தவை என்பது அப்பாதைகள் தோன்றுவதற்கான சர்வதேச அடிப்படைகள் ஆகும். 1920-ம் ஆண்டுகளின் பிற்பகுதியிலும் 30-ம் ஆண்டுகளிலும், 40-ம் ஆண்டுகளின் துவக்கத்திலும், மத்தியிலும் தோழர்கள் மாசேதுங், லியோசோஷி ஆகியோர்களால் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்ட, சீன மார்க்சிய-லெனினியவாதிகள், ஸ்டாலினுடைய தவறுகளின் செல்வாக்கை எதிர்த்தனர். அவர்கள் படிப்படியாக 'இடது' மற்றும் 'வலது' சந்தர்ப்பவாதப் பாதைகளைக் களைந்து இறுதியில் சீனப் புரட்சியை வெற்றிக்கு இட்டுச் சென்றனர்.

ஆனால் ஸ்டாலினால் முன் வைக்கப்பட்ட சில தவறான கருத்துக்கள் சீனத் தோழர்கள் சிலரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு கையாளப்பட்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தற்கான பொறுப்பினை சீனர்களாகிய நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். எனவே, 'இடது' மற்றும் 'வலது' சந்தர்ப்பவாதத்திற்கெதிரான தனது போராட்டத்தில் எங்களது கட்சி தவறிழைத்த தனது சொந்த தோழர்களைத்தான் விமர்சித்ததே தவிர ஒருபோதும் ஸ்டாலின் மீது பழியைப் போடவில்லை. தவறையும், சரியையும் பிரித்துப் பார்ப்பதும், தகுந்த படிப்பினைகளைக் கற்றுக் கொள்வதும், புரட்சிகர இலட்சியத்தை முன்னெடுத்துச் செல்வதும்தான் எங்கள் விமர்சனத்தின் நோக்கமாக இருந்தது. நாங்கள், தவறிழைத்த தோழர்களைத் தங்கள் தவறுகளை திருத்திக் கொள்ள வேண்டும் என்று மட்டும்தான் கேட்டுக் கொண்டோம். அவர்கள் அவ்வாறு செய்யத் தவறினால் அவர்கள் தங்கள் ஒளிவுமறைவான, சீர்குலைவு நடவடிக்கைகளுக்காக ரகசிய குழுக்களை கட்டியமைக்கவில்லையெனில் தங்கள் சொந்த நடைமுறை அனுபவத்தால் படிப்படியாக கற்றுக் கொள்ளும்வரை காத்திருந்தோம். எங்கள் முறையே உட்கட்சி விமர்சனம் மற்றும் சுய விமர்சனத்தின் சரியான முறையாகும். நாங்கள் அய்க்கியத்திற்கான விருப்பத்திலிருந்து தொடங்கி விமர்சனம் மற்றும்போராட்டங்களின் வழியாக ஒரு புதிய அடிப்படையிலான ஒரு புதிய அய்க்கியத்தை வந்தடைந்தோம். இவ்வாறு நல்ல விளைவுகள் பெறப்பட்டன. இந்த முரண்பாடுகளுக்கிடையிலான மக்கள் முரண்பாடுகளே, எதிரிகளுக்கும் நமக்கும் உள்ள முரண்பாடுகள் அல்ல என்று நாங்கள் கருதினோம். எனவே மேற்கூறிய முறையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று நாங்கள் கூறினோம்.

தோழர் குருச்சேவும் பிற ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரசிலிருந்து ஸ்டாலினைப் பற்றி எத்தகைய மனப்பான்மையைப் பெற்றிருக்கிறார்கள்?

அவர்கள் ஸ்டாலின் வாழ்க்கையைப்பற்றியும், பணிகளைப் பற்றியும் ஒட்டு மொத்த வரலாற்று ரீதியான மற்றும் விஞ்ஞான ரீதியான பகுப்பாய்வினைச் செய்யாமல் சரி, தவறுகளை வேறுபடுத்திப் பார்க்காமல் அவரை முழுவதுமாக மறுதலித்துள்ளார்கள்; அவர்கள் ஸ்டாலினை ஒரு தோழராக மதிக்கவில்லை, மாறாக ஒரு எதிரியாகப் பார்க்கிறார்கள்.

அனுபவங்களைத் தொகுப்பதற்கு அவர்கள் விமர்சன, சுய விமர்சன முறையைக் கடைப்பிடிக்கவில்லை. மாறாக அனைத்து தவறுகளுக்கும் ஸ்டாலின் மீதுகுற்றம் சாட்டினார்கள். அல்லது தாங்கள் ஒருதலைப் பட்சமாகக் கண்டுபிடித்த 'தவறுகளுக்கு' ஸ்டாலினைக் காரணமாக குறிப்பிட்டார்கள்.

அவர்கள் உண்மைகளையோ, ஆதாரப்பூர்வமானவற்றையோ முன் வைக்கவில்லை. மாறாக, ஸ்டாலினுக்கு எதிராக மக்கள் மனதை நச்சுப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படுத்தும் பொருட்டு அவர் மீது கீழ்த்தரமான, தனிப்பட்ட தாக்குதல்களைத் தொடுத்தார்கள்.

குருச்சேவ், ஸ்டாலினை ஒரு 'கொலைகாரன்' என்றும் ''ஒரு குற்றவாளி' (criminal) என்றும் ஒரு கொள்ளைக்காரன்''[1] என்றும் ஒரு ''சூதாடி'' என்றும் ''பயங்கர இவான் போன்ற ஒரு கொடுங்கோலன்'' என்றும் ''ரசிய வரலாற்றிலேயே மிகப் பெரிய சர்வாதிகாரி'' என்றும் ஒரு ''மடையன்''[2] என்றும் ஒரு ''முட்டாள்''[3] என்றும் இன்ன பிற சொற்களால் அவதூறு செய்தார். இத்தகைய அசிங்கமான, அவக்கேடான, வன்மம் மிக்க வார்த்தைகளை நாங்கள் சுட்டிக்காட்ட நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கும் அதே சமயம், இது எங்கள் தாளையும், பேனாவையும் அசிங்கப்படுத்தி விடுமோ என்று நாங்கள் அஞ்சுகிறோம். குருச்சேவ், ஸ்டாலினை ''ரசிய வரலாற்றிலேயே மிகப் பெரிய சர்வாதிகாரி'' என்று அவதூறு செய்துள்ளார். அப்படியானால் ரசிய மக்கள் முப்பதாண்டு காலம் ''ரசிய வரலாற்றிலேயே மிகப் பெரிய சர்வாதிகாரியின்'' ''கொடுங்கோன்மையின்'' கீழ் வாழ்ந்தார்கள், சோசலிச அமைப்பு முறையின் கீழ் அல்ல என்று இது பொருள்படவில்லையா? மாபெரும் ரசிய மக்களும் உலக முழுவதுமுள்ள புரட்சிகர மக்களும் இந்தப் பழிச் சொல்லை முற்றிலும் மறுக்கிறார்கள்.

குருச்சேவ், ஸ்டாலினை ''பயங்கர இவான் போன்ற ஒரு கொடுங்கோலன்'' என்று அவதூறு செய்துள்ளார். இது மாபெரும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியும், மாபெரும் ரசிய மக்களும் உலக முழுவதுமுள்ள மக்களுக்கு முப்பதாண்டு காலமாக வழங்கி வந்த அனுபவம், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் அனுபவமல்ல மாறாக ஒரு நிலபிரபுத்துவக் ''கொடுங்கோலன்'' ஆட்சியில் பெற்ற அனுபவம் என்று பொருள்படவில்லையா? மாபெரும் ரசிய மக்களும், ரசிய கம்யூனிஸ்டுகளும் உலக முழுவதுமுள்ள மார்க்சிய—லெனினியர்களும் இந்தப் பழிச் சொல்லை முற்றிலும் மறுக்கிறார்கள்.

குருச்சேவ், ஸ்டாலினை ஒரு 'கொள்ளைக்காரன்' என்று அவதூறு செய்துள்ளார். இது உலகின் முதலாவது சோவியத் அரசு ஒரு நீண்டகால அளவுக்கு ஒரு ''கொள்ளைக்காரனால்'' தலைமை தாங்கப்பட்டு வந்தது என்று பொருள்படவில்லையா? மாபெரும் ரசிய மக்களும்

1. என். எஸ். குருச்சேவ், சீனக் கம்யூனிஸ்ட் கட்சி பிரதிநிதிகளுடன் உரையாடல் அக்டோபர் 22, 1961.
2. என். எஸ். குருச்சேவ், சோவியத் அரசாங்கத்தால் 1962-ல் கொடுக்கப்பட்ட மே தின வரவேற்பில் ஆற்றிய உரை.
3. என். எஸ் குருச்சேவ், சீனக் கம்யூனிஸ்ட் கட்சி பிரதிநிதிகளுடன் உரையாடல், அக்டோபர் 22, 1961.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உலக முழுவதுமுள்ள புரட்சிகர மக்களும் இந்தப் பழிச்சொல்லை மறுக்கிறார்கள்.

குருச்சேவ், ஸ்டாலினை ஒரு ''மடையன்'' என்று அவதூறு செய்துள்ளார். வீரமிக்க புரட்சிகரப் போராட்டங்களை நடத்தியுள்ள ரசிய கம்யூனிஸ்ட் கட்சி கடந்த பல பத்தாண்டுகளாக ஒரு ''மடையனை'' தனது தலைவராகக் கொண்டிருந்தது என்று இதனால் பொருள் படவில்லையா? ரசிய கம்யூனிஸ்டுகளும் உலகமுழுவதிலுமுள்ள மார்க்சிய-லெனினியர்களும் இந்த அவதூறை முற்றிலும் மறுக்கிறார்கள்.

குருச்சேவ், ஸ்டாலினை ஒரு ''முட்டாள்'' என்று அவதூறு செய்துள்ளார். இது பாசிச எதிர்ப்பு யுத்தத்தில் வெற்றியீட்டிய மாபெரும் ரசிய இராணுவம் ஒரு ''முட்டாளைத்'' தனது தலைமைத் தளபதியாகக் கொண்டிருந்தது என்று பொருள்படவில்லையா? புகழ்பெற்ற ரசிய கமாண்டர்களும், படை வீரர்களும், உலகின் பாசிச எதிர்ப்பு வீரர்கள் அனைவரும் இந்த அவதூறை முற்றிலும் மறுக்கிறார்கள்.

குருச்சேவ், ஸ்டாலினை ஒரு ''கொலைகாரன்'' என்று அவதூறு செய்துள்ளார். இது சர்வதேச கம்யூனிச இயக்கம் ஒரு ''கொலைகாரனை'' பல பத்தாண்டுகளுக்கு தனது ஆசானாகக் கொண்டிருந்தது என்று பொருள்படவில்லையா? ரசிய கம்யூனிஸ்டுகள் உட்பட உலக முழுவதுமுள்ள கம்யூனிஸ்டுகள் அனைவரும் இந்த அவதூறை முற்றிலும் மறுக்கிறார்கள்.

குருச்சேவ், ஸ்டாலினை ஒரு ''சூதாடி'' என்று அவதூறு செய்துள்ளார். இது புரட்சிகர மக்கள் ஏகாதிபத்தியத்திற்கெதிராகவும், எதிர்ப் புரட்சிக்கெதிராகவும் நடந்த போராட்டங்களில் ஒரு ''சூதாடியை'' முன்னணியாளனாகக் கொண்டிருந்தார்கள் என்று பொருள்படவில்லையா? ரசிய மக்கள் உட்பட உலகின் அனைத்து புரட்சிகர மக்களும் இந்த அவதூறை முற்றிலுமாக மறுக்கிறார்கள்.

ஸ்டாலின் மீதான குருச்சேவின் இந்த அவதூறு மாபெரும் ரசிய மக்களை ஒட்டு மொத்தமாக அவமதிப்பதாகும்; ரசிய கம்யூனிஸ்ட் கட்சியை ஒட்டு மொத்தமாக அவமதிப்பதாகும்; ரசிய இராணுவத்திற்கும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கும், சோசலிச அமைப்புமுறைக்கும், சர்வதேச கம்யூனிச இயக்கத்திற்கும், உலக முழுவதிலுமுள்ள புரட்சிகர மக்களுக்கும், மார்க்சிய-லெனினியத்துக்கும் ஒட்டுமொத்தமான அவமதிப்பாகும்.

இப்போது அழுது புலம்பிக் கொண்டு மேசையைக் குத்தி தனது உச்சஸ்தாயியில் ஸ்டாலின் மீது அவதூறு பொழிந்து கூப்பாடு போடும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குருச்சேவ், ஸ்டாலின் காலத்தில் அரசு மற்றும் கட்சியின் தலைமையில் அங்கம் வகித்தாரே. அப்படியானால் அவர் தனக்கு என்ன தகுதியை வழங்கிக்கொள்கிறார், ஒரு ''கொலைகாரனின்'' அல்லது ''கொள்ளைக்காரனின்'' கூட்டாளி என்ற தகுதியையா? அல்லது ''மடையன்'' அல்லது ''முட்டாள்'' என்ற அதே தகுதியையா?

ஸ்டாலின்மீதான குருச்சேவின் இத்தகைய அவதூறுகளுக்கும், ஏகாதிபத்தியவாதிகள், பல்வேறு நாடுகளில் உள்ள எதிர்ப்புரட்சியாளர்கள், கம்யூனிச கொள்கையைவிட்டு ஓடிப்போனவர்கள் ஆகியோருடைய அவதூறுகளுக்கும் என்ன வேறுபாடு இருக்கிறது? ஸ்டாலின் மீது ஏன் இத்தகைய கண்மூடித்தனமான வெறுப்பு? நீங்கள் ஏன் எதிரியை தாக்குவதைவிட மூர்க்கத்தனமாக அவரைத் தாக்குகிறீர்கள்?

ஸ்டாலினை அவதூறு செய்வதன் மூலம் குருச்சேவ் உண்மையிலேயே சோவியத் அமைப்பு முறையையும் அரசையும் காட்டுத்தனமாக தூற்றுகிறார். இந்த விசயத்தில் அவரது வார்த்தைகள் எந்த வகையிலும் பலவீனமானவையல்ல, மாறாக காவுட்ஸ்கி, டிராட்ஸ்கி, டிட்டோ, ஜிலாஸ் போன்ற ஓடுகாலிகளுடையதைக் காட்டிலும் உண்மையிலேயே கடுமையானவையாக இருக்கின்றன.

ருசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பகிரங்கக் கடிதத்தின் கீழ்க்கண்ட பகுதியை மேற்கோள் காட்டி மக்கள் குருச்சேவைக் கேட்க வேண்டும்: மாபெரும் லெனினுடைய கட்சியைப் பற்றி, சோசலிசத்தின் தாயகத்தைப் பற்றி, ஒரு சோசலிசப் புரட்சியை நிறைவேற்றுவதில் உலகில் முதலாவதாக இருந்த மக்களைப் பற்றி, சர்வதேச ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும் உள்நாட்டு எதிர்ப்புரட்சிக்கு எதிராகவும் நடந்த போராட்டங்களில் அதன் மாபெரும் சாதனைகளை உயர்த்திப் பிடித்த மக்களைப் பற்றி, கம்யூனிசத்தை கட்டமைக்கும் முயற்சியில் வீரசாகச அற்புதங்களை நிகழ்த்திக் கொண்டும் அர்ப்பணிப்பைக் காட்டிக் கொண்டும் இருக்கின்ற மக்களைப் பற்றி, உலக உழைக்கும் மக்களுக்கான தங்களின் சர்வதேசக் கடமையை நம்பிக்கையுடன் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்ற மக்களைப் பற்றி எப்படி அவர்கள் இவ்வாறு சொல்ல முடியும்?''

'அவதூறின் அரசியல் முக்கியத்துவம்' என்ற கட்டுரையில் லெனின் கூறினார், ''அரசியலில் அவதூறு பல சமயங்களில் சித்தாந்த ஓட்டாண்டித்தனத்தையும், நிர்க்கதியையும், பேடித்தனத்தையும், அவதூறு கூறுபவனின் எரிச்சலூட்டும் பேடித்தனத்தையும் மூடிமறைத்து விடுகிறது'' ஸ்டாலினுடைய ஆவியினால் இடையறாது அலைக்கழிக்கப்படும் உணர்வைக் கொண்டிருக்கிற, ஸ்டாலினை அவமதிப்பதன் மூலம் தங்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எது கொள்கை ஒட்டாண்டித்தனத்தையும்,எரிச்சல்தரும் பேடித்தனத்தை யும் நிர்க்கதியான நிலையையும் மூடி மறைத்துக் கொள்ள முயற்சிக்கிற, ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுக்கு இது பொருந்தாதா?

ரசிய மக்களில் மிகப் பெரும்பான்மையினர் ஸ்டாலினை இவ்வாறு அவமதிப்பதை அங்கீகரிக்கவில்லை. அவர்கள் மேலும் மேலும் ஸ்டாலி னுடைய நினைவைப் போற்றுகிறார்கள். ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் மக்களிடமிருந்து தங்களை மிக மோசமாக தனிமைப் படுத்திக் கொண்டு விட்டார்கள். அவர்கள், தாங்கள் ஸ்டாலினுடைய அலைக்கழிக்கிற ஆவியினால் பயமுறுத்தப்பட்டுக் கொண்டிருப்பதாக உணருகிறார்கள். உண்மையில் அது ஸ்டாலினை முழுவதுமாக மறுக் கும் செயல் மீது பெரும் அதிருப்தி கொண்டுள்ள பரந்துபட்ட மக்களின் பயமுறுத்தலாக இருக்கிறது. ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது பேராயத்தில் முன்வைக்கப்பட்ட, ஸ்டாலினை முழுவதுமாக மறுக்கும் ரகசிய அறிக்கையை இதுவரை ரசிய மக்களும் சோசலிச முகாமிலுள்ள பிற மக்களும் தெரிந்து கொள்வதற்காக வெளியிடும் துணிவு இல்லை. ஏனெனில் அது உண்மையின் வெளிச்சத்தை தாங்கமுடியாத, மக்களைத் தீவிரமாக அந்நியப்படுத்திவிடக் கூடிய அறிக்கையாகும்.

சாத்தியப்பட்ட ஒவ்வொரு வழியிலும் ஸ்டாலினை இழிவுபடுத்தும் அதே வேளையில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் அய்சனோவர், கென்னடி மற்றும் இவர்களைப் போன்றவர்களை "நம்பிக்கையுடனும் மரியாதையுடனும்"[1] போற்றுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கதா கும். அவர்கள் ஸ்டாலினை "பயங்கர இவானைப் போன்ற ஒரு கொடுங்கோலன்" என்றும் "ரசிய வரலாற்றிலேயே மிகப் பெரிய சர்வாதிகாரி" என்றும் இழிவுபடுத்துகிறார்கள். ஆனால் அய்சனோவரை யும், கென்னடியையும் "அமெரிக்க மக்களின் அறுதிப்பெரும்பான்மை ஆதரவைப் பெற்றவர்கள்"[2] என்று பாராட்டுகிறார்கள். அவர்கள் ஸ்டாலினை ஒரு "மடையன்" என்று இழிவுபடுத்துகிறார்கள். ஆனால் அய்சனோவரையும் கென்னடியையும் "விவேகமானவர்கள்" என்று புகழ் கிறார்கள். ஒருபுறம், ஒரு மாபெரும் மார்க்சிய-லெனினியவாதியை, ஒரு மாபெரும் பாட்டாளி வர்க்க புரட்சியாளனை, சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் ஒரு மாபெரும் தலைவனை, அவர்கள் கீழ்த்தரமான முறையில் தாக்குகிறார்கள். மறுபுறம் ஏகாதிபத்தியத்தின் தலைவர்

---

1. என். எஸ். குருச்சேவ். ஜெ. எப். கென்னடிக்கு பதில் கடிதம், அக்டோபர் 28, 1962.

2. என். எஸ். குருச்சேவ், பிராவ்தா. இஸ்வெஸ்தியா பத்திரிகை களின் தலைமை ஆசிரியர்களின் கேள்விகளுக்கு பிராவ்தாவில் அளிக்கப்பட்ட பதில்கள்.ஜுன் 15, 1963.

(46ம் பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிதைத்தாலும் எரித்தாலும் செங்கொடி அழிந்து விடுமா?



சோவியத் ஒன்றியம் சிதைந்து, ரஷிய மாநிலம் தனியே பிரிந்து சென்றதும் அதன் அதிபர் யேல்ட்சின் புதுவேகம் புது மோகத்தோடு முதலாளித்துவ சந்தைப் பொருளாதாரத்தை நிலைநாட்டக் கிளம்பினார். அதன்படி கடந்த ஜனவரி 2-ம் தேதி முதலாக அனைத்துப் பொருட்களின் விலையையும் கிடுகிடுவென உயர்த்தி, தனியார் முதலாளித்துவக் கொள்ளையைத் தீவிரப்படுத்தியது யேல்ட்சின் கும்பல். அதன் விளைவாக பால், ரொட்டி முதலான அத்தியாவசியப் பொருட்களின் விலை திடீரென 5 முதல் 10 மடங்கு உயர்ந்தது. மானிய விலையில் ரேஷனில் உணவுப் பொருட்களை வழங்குவதையும் யேல்ட்சின் கும்பல் நிறுத்திவிட்டதால், உழைக்கும் மக்கள் கைக்குழந்தைகளுடன் பட்டினியால் பரிதவித்தனர். குப்பைத் தொட்டியில் ரொட்டியைத் தேடி அலையும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

ஏற்கனவே கோர்பச்சேவின் முதலாளித்துவ மறு சீரமைப்புக் கொள்கையால் அவதிப்பட்ட மக்கள் இப்போதைய திடீர் விலையேற்றத் தாக்குதலைக் கண்டு ஆத்திரமடைந்து போராட்டத்தில் இறங்கத் தொடங்கியுள்ளனர். கடந்த ஜனவரி முதல் வாரத்தில் வடபகுதியிலுள்ள வோர்குதா சுரங்கத் தொழிலாளர்கள் முதலாளித்துவ ஆட்சியாளர்களை எதிர்த்து வேலை நிறுத்தத்தில் இறங்கினர். கரேலியா பிராந்தியத்தில் உள்ள தனியார் முதலாளித்துவ நிறுவனங்களையும் கடைகளையும் மக்கள் தன்னெழுச்சியாகத் திரண்டு தாக்கி தமது வெறுப்பை வெளிப்படுத்தினர். ரஷியாவிலுள்ள அனைத்து தொழிற் சங்கங்களும் விலையேற்றத்துக்கு ஏற்ப ஊதிய உயர்வு கோரி ஆர்ப்பாட்டம் செய்யப் போவதாக எச்சரித்துள்ளன.

கடந்த ஜனவரி 12-ந் தேதியன்று தலைநகர் மாஸ்கோவிலுள்ள கிரெம்ளின் சதுக்கத்தில் ஏறத்தாழ 3 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் அணிதிரண்டு யேல்ட்சின் கும்பலுக்கு எதிராக மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடத்தியுள்ளனர். செங்கொடிகளுடனும் லெனின், ஸ்டாலின் உருவப் படங்களுடனும் பாட்டாளி வர்க்க சர்வதேசிய கீதத்தை இசைத்துக்கொண்டு ஊர்வலமாகச் சென்ற மக்கள், "முதலாளித்துவம் ஒழிக! சோசலிசம் வாழ்க!" என்று முழங்கினர். அமெரிக்க கைக்கூலி யேல்ட்சின் ஒழிக! சோவியத் ஒன்றியத்தைப் பிளவுபடுத்தாதே! இனவெறியைத் தூண்டி உழைக்கும் மக்களை மோதவிடாதே! உழைக்கும் மக்களைப் பட்டினிச் சாவுக்குத் தள்ளிய முதலாளித்துவ கும்பலே, பதவியிலிருந்து விலகு! என்கிற முழக்க அட்டைகளுடனும், கோர்பி-யேல்ட்சின் ஆகியோரை பன்றியாகச் சித்தரித்து கேலிச் சித்திரங்களுடனும் கடுங் குளிரையும் பொருட்படுத்தாமல் கோபம் கொப்பளிக்க இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தியுள்ளனர். அடுத்த கட்டமாக பிப்ரவரி 9ந் தேதியன்று ரஷ்ய நாடாளுமன்றத்தை முற்றுகையிடப் போவதாகவும் அறிவித்துள்ளனர். இதேபோல செயிண்ட் பீட்டர்ஸ்பர்க் (லெனின் கிராடு), உல்லியனோவ்ஸ், விளாதிமீர், கிராவ், டாடார்ஸ்தான், குஸ்பாஸ் முதலான நகரங்களிலும் யேல்ட்சின் கும்பலுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் நடந்துள்ளன.

ரஷியாவில் கம்யூனிசத்துக்கு எதிராக மாபெரும் கிளர்ச்சியில் இறங்கி அந்நாட்டு மக்களே அத்தத்துவத்தையும் மார்க்சிய ஆசான்களையும் குப்பைத் தொட்டியில் வீசி எறிந்து விட்டார்கள் என்று எக்காளமிட்ட ஏகாதிபத்தியவாதிகளே, இப்போது என்ன சொல்கிறீர்கள்? செங்கொடியையும் பாட்டாளி வர்க்கத் தலைவர்களின் சிலைகளையும் சிதைத்த முதலாளித்துவ முட்டாள்களே, இப்போது மூண்டெழும் போராட்டங்களைக் கண்டு விழிபிதுங்கி நிற்பது ஏன்?

நன்றி புதிய ஜனநாயகம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# NLFT இன் வரலாறு

ஈழ விடுதலைப்போராட்டம் தீவிரமடைந்த நோத்தில், NLFT ஆரம்பம் முதலே ஒரு இடதுசாரி கருத்தை முன்வைத்து இருந்த போதிலும் NLFT இப் போராட்டத்துக்கு தலைமை தாங்க முடியாமல் போனது ஏன் என ஆராய்வது அவசியம் என்ற அடிப்படையில் இக்கட்டுரையை வெளியிடுகின்றோம்.
--- சமர் ஆசிரியர் குழு ---

NLFT இன் கடந்த காலம் பற்றிய ஆய்வு வருங்காலப்போராட்டத்தின் ஒவ்வொரு அடிக்கும் மிகமிக அவசியமானது. தேசிய எழுச்சிக்காலத்தில் 30க்கு மேற்பட்ட இயக்கங்கள் தோன்றியிருந்தன. அவைகளுக்குள் தோன்றிய இடதுசாரி இயக்கங்களுக்குள், ஆரம்பத்திலிருந்தே NLFT உறுதியான இடதுசாரிப்போக்கை கடைப்பிடித்தது. இதைத்தவிர PLFT , தீப்பொறி, பாசறை என்பன 1985க்கு பிந்திய ஆண்டுகளில் உருவாகியருந்தன. இவை தவிர பாதுகாப்பு பேரவை, RELO என்பன குறிப்பிடத்தக்கது. இதில் PLFT என்ற அமைப்பு NLFT யிலிருந்து பிரிந்தது குறிப்பிடத்தக்கது. தீப்பொறி PLOT லிருந்து தப்பி வந்த பொழுது NLFT பாதுகாப்பு வழங்கியதுடன் தீப்பொறியின் ஆரம்ப வளர்ச்சிக்கும் NLFT உதவியது. ஜனநாயகத்திற்காக குரல் கொடுத்த NLFT அரசியல் ரீதியில் வளர்ச்சி பெற்று, அரசியல் அதிகாரத்தை பெறாமல் போனதுடன், ஒரு சிறு அமைப்பாக கூட மண்ணில் இன்று இல்லாமல் போயுள்ளது. இதற்கான காரணம் என்ன என்பதை ஆரய்வதுடன், அதன் படிப்பனைகளை ஆராய்வது மீண்டும் NLFT விட்ட தவறுகளை வருங்காலத்தில் வேறொரு அமைப்பும் விடாமலிருக்க உதவும். அவ்வகையில் இவ்வாலாற்று கட்டுரை அமையும்.

கடந்த கால போராட்டத்தில் NLFT இன் அரசியல் வழிகளுக்கு அப்பால் தனிநபர்களின் பாத்திரங்கள், அவர்களின் ஆளுமைகள் எப்படி காலத்திற்கு காலம் இயக்கத்தை மாற்றி சென்றது. அவை தொடர்பான ஒரு பார்வையும் தனிநபர்களின் குணநலன்களுடன் எப்படி சம்பந்தப்பட்டது என்பதை இக்கட்டுரை ஆராயும். இங்கு தனிநபர்களை புனைப்பெயராகவும், இறந்தவர்களின் பெயர்களை சொந்தப்பெயர்களிலும் இக்கட்டுரையை வரைகின்றோம். இக்கட்டுரை எழுதும் பொழுது கட்டுரையாளர்களின் அபிப்பிராயத்தை விட்டு, நிகழ்வுகளையும் சம்பவங்களையும் முழுமையாக தர முயற்சிக்கின்றோம். நினைவுக்குட்பட்டவை யாவும் முழுமையாக தொகுக்க முனையும் எமது முயற்சியில் சம்பவங்கள் சில விடுபட வாய்ப்பு உண்டு.
NLFT யின் அரசியல் கோஷங்கள், முழுமையான அரசியல் திட்டம் என்பன இக் கட்டுரையில் முன்வைக்க முடியவில்லை. அவை தொடர்பாக வெளிவந்த வெளியீடுகள் இல்லாமையே. இருந்த பொழுதும் ஒரு பார்வையை பார்க்கும் வகையில் கருத்துக்களை இக்கட்டுரை கொண்டிருக்கும். இக்கட்டுரை அதி கூடிய பாதுகாப்பு உணர்வுக்கும், எதிர்காலத்தில் இதிலிருந்த நபர்களை பாதிக்காத வகையிலும், போராட்டத்திற்கு பங்கம் ஏற்படாத வகையிலும் எழுதப்படுகின்றது.

www.tamilarangam.net

1981 முதல் NLFT யின் வரலாற்றை ஆய்வுக்கு முன்னெடுத்துள்ளோம். அதற்கு முந்திய ஆய்வு தொடர்பானவை முன் வைக்க முடியாதுள்ளது. அவை பற்றி முழுமையான தகவல் இல்லாமையே. தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி என்ற பெயரில் 1981, 1982, 1983இல் இயங்கிய இவ்வியக்கம் 1983இன் இறுதியில் NLFT (தமிழீழ தேசிய விடுதலை முன்னணி) என பெயர் மாற்றப்பட்டது. 1981இல் ஒரு மத்திய குழுவையும், ஒரு பிரதேசக்குழுவையும் இவ்வியக்கம் கொண்டிருந்தது. மத்திய குழுவிலிருந்த பலர் இடதுசாரி இயக்கத்தின் களைந்து போன உறுப்பினர்கள் ஆகி முற்றாக செயல்படாத நபர்களாக இருந்தனர். எப்பொழுதாவது கூட்டப்படும், கூட்டப்படாத மத்திய குழு வெறும் பொழுது போக்கு இயக்கமாகவே இருந்தது. மத்திய குழுவிலிருந்த விசுவானந்ததேவன் மட்டுமே சுயாதீனமாக செயல்படும் ஒரு உறுப்பினராக இருந்தார்.

அவர் சுயாதீனமாக இயங்கி பல புதிய தொடர்புகளை ஏற்படுத்தினார். அவர் தீவிர இயங்கு சக்தியாக செயல்பட்ட முழுநேர உறுப்பினர். இவர் காங்கேசன் துறை சீமெந்து தொழிற்சாலையில் பொறியியலாளராக கடமையாற்றியவர். இவர் தமிழ் தேசிய எழுச்சியில் மேலெழுந்து வந்த இளைஞர்களை வென்றெடுத்தார். இந்த வகையில் அவரின் கருத்துக்களை கவர்ந்தவர்களை கொண்டு ஒரு பிரதேச கமிட்டியை உருவாக்கினார். இதில் ஐவர் இருந்தார்கள். அவர்கள் குமான், ஜோச், ராகவன், நிமால் (கட்டுரையாளர்கள் கொடுத்த பெயர்) அன்ரான் ஆகியோரே. இக்குழுவே அரசியல் வேலையை செய்து வந்தது. இதில் தீவிர அரசியல் செயல்பாட்டை விசுவானந்ததேவனும், குமானும், ஜோச்சும் செய்தனர். இவர்களே அரசியல் வகுப்புக்களையும் எடுத்து வந்தனர்.

1982இல் சுந்தரம் படுகொலை தொடர்பாக ஒட்டப்பட்ட சுவரொட்டி அக்காலத்தில் பலரை பாதித்தது. அச்சுவரொட்டி உரிமை கோராமல் ஒட்டப்பட்டிருந்தது. அச்சுவரொட்டியை ஒட்டியவர்கள் யார் எனத்தெரியாத நிலையில் அதிலிருந்த சொற்தொடர்களை வைத்து பிழையான சக்திகள் வளர வழி வகுத்தது. அதன்பின் PLOT க்கு சென்ற பலரில் அச்சுவரொட்டியின் தாக்கத்திற்கு உட்பட்டவர்கள் பலர் இருந்தனர். ஏன் NLFT யிலிணைந்த சிலருக்கு கூட அச்சுவரொட்டியின் தாக்கம் PLOT மீது ஒரு மயக்கம் இருந்தது. இச்சுவரொட்டியை NLFT யே அன்று ஒட்டியிருந்தது. ஒரு கொலையை அம்பலப்படுத்தல் சரியானதேயாகும். ஆனால் கொலை செய்யப்பட்டவரின் அரசியல், அவர் இருந்த இயக்கத்தின் தன்மையை அச்சுவரொட்டியில் அம்பலப்படுத்தியிருப்பின் , அச்சுவரொட்டி சரியான சக்திகளை வளர வழிவகுத்திருக்கும்.

1981, 1982, 1983களில் விசுவானந்ததேவனின் அனுசரணையுடன் அளவெட்டியில் ஒரு கலைக்குழு செயற்பட்டது. இக்குழு ''திருவிழா'' என்ற நாடகத்தை மேடையேற்றியது. இத் ''திருவிழா'' நாடகம் அன்று தமிழர் விடுதலை கூட்டணியையும் ( TULF ) அம்பலப்படுத்துவதில் பெரும் பங்களிப்பை செய்தது. சிங்கள, தமிழ் இனவாதத்தை அம்பலப்படுத்தியது. இந்நாடகம் 30க்கு மேற்பட்ட தடவை மேடையேறியது. இக்கலைக்குழுவில் 15க்கு மேற்பட்டோர் இயங்கு சக்தியாக இருந்தனர். இதில் பலர் NLFT

www.tamilarangam.net

என தம்மைத்தாமே அல்லது விசுவால் இனம் காட்டப்பட்டனர். இக்குழுவுக்கு PLOT இனால் சுட்டுக்கொல்லப்பட்ட இறைகுமாரன், உமைகுமாரன் ஆகியோர் உதவி வந்தனர். தெல்லிப்பழையில் ''திருவிழா'' நாடகத்தை கூட்டணியினர் திட்டமிட்டு குழப்பும் முயற்சியிலிடுபட்டனர். இதில் முன்னணியில் நின்ற நபர் பின் TULF இன் இராணுவ அமைப்பான TENA (தமிழீழ தேசிய இராணுவம்) வின் முக்கிய உறுப்பினர். இந்நிகழ்வைத்தொடர்ந்து சிவமகாராஜா, எம்.பி.யோகேஸ்வரன் தலையிட்டு பேச்சுவார்த்தை செய்து நாடகத்தை நிறுத்த முயன்றனர். பின் மிரட்டியும் பார்த்தனர். இது போன்று வடமாராட்சியில் நாடகத்தை குழப்ப முயன்றனர்.

இந்நாடகக்குழு உறுப்பினர்களில் சிலரை NLFT உறுப்பினர்களென விசு வரையறுத்திருந்தார். அதில் சிலர் NLFT வகுப்புக்கள் எடுத்தனர். அன்று புதிதாக இணைந்தவர்களின் அரசியல் இன்மையும், இவர்களின் வாய் சவாடல்களும் மொத்தத்தில் எந்த அரசியல் வளர்ச்சியையும் ஏற்படுத்தவில்லை. இதிலிருந்த சில நபர்கள் வாய்சவாடல்கள் மட்டுமின்றி பிரமுகர்களாக இருந்ததுடன், மிக மோசமான நபர்களாகவும் இருந்தனர். ஒரு முறை வவுனியாவிற்கு நாடகம் மேடையேற்றவென வானில் சென்ற இக்குழு காங்கேசன்துறை சந்தியில், ஒரு விபச்சாரப்பெண்ணை கண்டு அவளை வானில் ஏற்றி யாழ் வரை கொண்டு சென்றனர். அப்பெண்ணுடன் தகாத முறையிலும் நடந்து கொண்டனர். பின்னொரு முறை அந்நாடகக்குழுவிலிருந்த ஒருவர், ஒரு பெண்ணை கூட்டி வந்த போது அப்பெண்ணுடன் ஏழு பேர் தொடர்பு கொண்டனர். இந்நிகழ்வுகள் NLFT கோ, விசுவானந்ததேவனுக்கோ தெரிந்திருக்கவில்லை. இச்சம்பவங்கள் பின் சிறீ என்பவரால் கண்டறியப்பட்டு அம்பலப்படுத்தப்பட்டது. இவர்களின் மாக்சீச வாய்சவாடல்கள், இலக்கியம், கவிதைகள், புதுசு இலக்கியச்சஞ்சிகை, ''திருவிழா'' நாடகம் ஆகியவற்றின் மூலம் தம்மை புரட்சியாளர்களாக காட்டி நாடகமாடினர். NLFT இல் ஆதிக்கம் செலுத்தும் அளவுக்கு வளர்ந்திருந்தனர்.

1981இல் விசுவானந்த தேவன் சீமெந்து தொழிற்சாலையில் வேலை செய்த காலத்தில் சிறீ என்பவருடன் தொடர்பு கொண்டு இருந்தார். சிறீ மாக்சீய அறிவு எதுவுமில்லாத நிலையில் மாக்சீசத்தின் மீதான பற்று அடிப்படையாக இருந்தது. சிறீயிடம் PLOT பற்றிய மயக்கம் காணப்பட்டது. முன்பு சுந்தரம் பற்றி ஒட்டிய சுவரொட்டியின் பாதிப்பு முக்கிய மானது. இது தொடர்பாக விசுவானந்த தேவன் PLOT ஐ விமர்சிக்காமல் சிறீயின் போக்குடன் 1983வரையில் இழுபட்டார். விசு நபர்களின் பிழையான இயல்புகளையும், அவர்களின் பிழையான அடிப்படைக்கருத்துக்களையும், விமர்சிக்காமல் இசைந்து போகும் வழியை கடைப்பிடித்தார். நபர்களின் பலவீனங்களை கண்டிக்க தவறினார். தான் சொல்வதை ஏற்றுக்கொள்பவர்கள் பிழையான கருத்தைக்கொண்டிருந்தும் அவர்களை அரவணைத்துக்கொண்டார். ஒரு சரியான அரசியல் அடிப்படையை விட தனது கருத்துக்கு மதிப்பு கொடுப்பவர்களை எப்பொழுதும் முன்னுக்கு கொண்டுவர முயன்றார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1981 இல் சிறீ என்பவரின் தொடர்பும், அதன் பின் சிறீ ஒரு தீவிர இயங்கு சக்தியாக மாறினார். பல புதிய தொடர்புகளை வேகமாகவே பெற்றுக்கொண்டார். 1983இன் ஆரம்பத்தில் புதிதாக ரமணி என்ற ஒரு புதிய இயங்கு சக்தியை NLFT பெற்றுக்கொண்டது. மொத்தத்தில் தீவிர இயங்கு சக்தியாக குமரன், ஜோச், விசு, சிறீ, ரமணி ஆகியோர் செயற்பட்டனர். ரமணி என்பவர் யாழ் மருத்துவக்கல்லூரி படிப்பை விட்டுவிட்டு முழுமையாக இயங்கினார். இவ்வியங்கு சக்திகளின் வளர்ச்சியால் சிறீயின் புதிய தொடர்புகள் இயக்கத்தை 1983இல் பெரும் எண்ணிக்கையாக மாற்றியது. LTTE இன் அன்றைய உறுப்பினர்கள் 57 பேர் மட்டுமே. மற்றைய இயக்கங்களில் அதைவிடக்குறைவு. ஆனால் NLFT உறுப்பினர்கள் தீர்மானமாக வரையறுக்காமலேயே 200 பேர் மட்டில் இருந்தனர். இதை விட பல புதிய ஆதரவாளர்களை இவர்கள் கொண்டிருந்தனர்.

1983க்கு முன் NLFT ஆரசியல் செயற்பாட்டால் இரு லட்சம் கடன் இருந்தது. இக்கடன்கள் விசு, ஆடுவின் நம்பிக்கையாலும் அவர்களின் பெற்றோர்களின் சொத்துக்களை அடைவு வைத்து பெறப்பட்டது. இத்தொகையை கொடுப்பது மிக அவசியமாக இருந்தது. இதை விட வருங்கால ஆரசியல் செயற்பாட்டுக்கு பணம் மிக அவசியமாக இருந்தது. இதைத்தொடர்ந்து நிதி சேகரிப்பதென முடிவு எடுக்கப்பட்டது. 5, 10, 50,100, 1000 ரூபா டிக்கற்றுக்கள் சகிதம் 1983இன் மத்திய பகுதியில் மக்களிடம் NLFT சென்றது. வீடுகள் தோறும் 5, 10 ரூபா வாக சேகரிக்கப்பட்டது. இந்நடவடிக்கையில் சிறீ, குமரன், ஜோச், ரமணி, மகேஸ்வரன் (இவர் LTTE உளவாளியாக NLFT இல் இருந்தவர். பின் LTTE இணைந்தார்), ஜெயா (இவர் பின் PLOT இணைந்தார்), ரூபன் (கட்டுரையாளர்கள் கொடுத்த பெயர்), தேவன் ஆகியோர் முன்னணியில் செயற்பட்டனர். இச்செயற்பாடு இரு மாதங்களாக ஒவ்வொரு நாளும் முப்பதுக்கும் மேற்பட்டோர் மக்களிடம் சென்றனர். இந்நடவடிக்கையில் சிறீயுடன் இருந்த குழு 60 ஆயிரம் ரூபாவும், ரமணியும் வடமாராட்சியிலிருந்தோர் 24 ஆயிரம் ரூபாவும், மொத்தமாக 84 ஆயிரம் ரூபா சேர்க்கப்பட்டது. 1983இல் LTTE திருநெல்வேலித்தாக்கதலைத்தொடர்ந்து நிதி சேகரிப்பு நிறுத்தப்பட்டது.

ஒரு பக்கத்தில் சிலர் தீவிர இயங்கு சக்தியாக இயங்கிய நிலையில், சிலர் இரகசியமாக எந்த செயற்பாட்டையும் செய்யாது இருந்ததுடன் இயக்கத்தின் திசை வழியை மாற்றும் நிலையில் இருந்தனர். இது 1983க்கு முன் மட்டுமல்ல பின்னால் கூட தொடர்ச்சியாக இருந்தது. இந்நபர்கள் பிரதேசக்கமிட்டியிலும், மத்திய குழுவிலும் பின்னால் இராணுவக்குழுவிலும் முழுமையாக நிரப்பப்பட்டிருந்தனர். அமைப்பு இரகசியமாக இருக்க வேண்டும், எல்லோரையும் இனம் காட்டக்கூடாது எனச்சொல்லி லெனின், மாவோ காலத்து சம்பவங்கள் சிலதும் உதாரணத்துக்கு வைக்கப்பட்டது. அன்டன், இராகவன் 1983க்கு முன் பிரதேசக்கமிட்டியில் இருந்த பொழுது எந்த ஆரசியல் செயற்பாட்டிலும் ஈடுபடவில்லை. மாறாக இவர்கள் சிலரை மட்டும் சந்திக்கும் நிலையில் இருந்தனர். இது தொடர்பாக பின் விரிவாக ஆராய்வோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1983க்கு முன் தமிழ் மக்கள் ஜனநாயக முன்னனி அரசியல் திட்டம் ஒன்றைக்கொண்டிருந்தது. இத்திட்டம் கடந்த காலத்தின் அரசியல் நிலைமைகளை சுட்டிக்காட்டியிருந்தது. நிகழ்காலத்திலான வேலை முறைகளை தெளிவாக வகுத்திருக்கவில்லை. இத்திட்டம் தமிழீழத்தை தனது தீர்வாக கொண்டிருக்கவில்லை. ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களின் பிரச்சனையை தீர்வாக சுட்டிக்காட்டியிருந்தது. இத்திட்டம் சோசலிச அமைப்பை வழிவகுத்திருந்தது. ஆனால் எதிரிகளை தீர்க்கமாக வரையறுக்கவில்லை. தேசிய பிரச்சனையையும் அதற்கான தீர்வையும் திட்டம் கொண்டிருக்கவில்லை. ஒரு பொதுபோக்காக கடந்த காலம் நிகழ்காலம் பற்றி குறிப்பாக திட்டம் கொண்டிருந்தது. எப்படி வேலை செய்வது, எந்த வர்க்கத்தை அணிதிரட்டுவது, நேசசக்திகள் யார் !, எதிரிகள் யார் ! , எங்கு எமது பிரதான இலக்கு! இவை எதையும் திட்டம் வரையறுத்திருக்க வில்லை. ஆனால் நடைமுறை அனுபவத்தில் திட்டத்துக்கு வெளியில் இவை தொடர்பாக தீவிரமாக வேலை செய்தவர்கள் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதில் அளித்துள்ளனர். அவை கூட முழுமையாகவன்றி அனுபவத்தின் அடிப்படையாக வைக்கப்பட்டவையே.

1982இன் இறுதியில் பிரபா என்ற தீவிர இயங்கு சக்தி அமைப்புக்குள் அறிமுகமானார். இவர் முன்பு புரட்சிகம்யூனிஸ்ட் கட்சியின் (ரொட்ஸ்கி) மத்திய குழு உறுப்பினராக அவர் கொழும்பில் வேலை செய்தவர். இவர் பின் காங்கேசன் துறை சீமெந்து தொழிற்சாலையில் போமனாக கடமையாற்றினார். 1983க்கு அரசியல் வகுப்புக்களை பலர் எடுத்தனர். அவர்களில் பிரபா, ரமணி, இராகவன், விசு, நிமால், சபேசன், சோரன், கண்டிபாலன், ஜோச், வாத்தி, மாஸ்டர் என்போர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் புதிய தொடர்புகளுக்கு வகுப்புக்களை எடுத்தனர். இவர்களில் பலதரப்பட்ட கருத்துள்ளவர்களும் இருந்தனர். இது தான் என்ற ஒரு கருத்தின் மீது பெரும்பான்மைக்கு அப்பால் அவாவர்களின் கருத்துக்களை முன் வைத்தனர்.

பல புதிய தொடர்புகள் தோன்றிய நிலையில் அரசியலை மிக வேகமாக கிரகித்துக்கொண்டோ அரசியல் ரீதியில் செயற்படத்தொடங்கினர். அதே நேரம் அரசியலை கிரகிக்க முடியாதவர்கள் அல்லது எற்றுக்கொண்டு அரசியல் ரீதியில் செயற்படாதவர்கள் இராணுவத்துறையை வலியுறுத்தியவர்கள் அரசியலுடன் தொடர்பு இல்லாத வகையில் பிரிக்கப்பட்டு இரகசியமாக கையாளத்தொடங்கினர். அவர்கள் தொடர்பாக அரசியல் ரீதியில் வேலை செய்தவர்கள் தொடர்பு கொள்ளவோ, என்ன செய்கின்றார்கள் என அறிந்து கொள்ளவோ முடியாது. இது பிரதேசக்கமிட்டியில், மத்திய கமிட்டியில் வேலை செய்தவர்களுக்கும் பொருந்தும். அவர்களின் அரசியல் நடைமுறை ரீதியில் மக்களிடம் செல்வதன் ஊடாக சோதிக்கப்படவில்லை. இத்தொடர்புகளை அரசியலில் செயற்படாதவர்களே நேரடியாக கையாண்டனர்.

1981இன் இறுதியில் விசு, சிறீ ஆகியோர் சீமெந்து தொழிற்சாலையில் வேலை செய்த காலத்தில் அங்கு நடந்த ஊழல், தொழிலாளரை வேலை நீக்கம் செய்தல் என்பவற்றுக்கு எதிராக இரகசியமாக வேலை செய்தனர். அங்கு பல தொடர்புகள் பெறப்பட்டு இருந்தன. இதைத்தொடர்ந்து ஐயமான் என்ற சிங்கள

www.tamilarangam.net

அதிகாரியும், சில தமிழ் அதிகாரிகளும் இணைந்து செய்து வந்த அடக்கு முறை ஊழலுக்கு எதிராக, இரு மாத இடைவெளிக்குள் இரு பிரசுரங்கள் வெளியிடப்பட்டது. இது பலத்த பாதிப்பை ஏற்படுத்தியது. இத்துண்டுப்பிரசுரம் அரசியல் ரீதியில் எதையும் சொல்லவில்லை. மாறாக சம்பவத்தை மட்டும் அம்பலப்படுத்துவதாகவே இருந்தது. இதைத்தொடர்ந்து அனேகமாக விசு தான் வெளியிட்டிருக்கலாம் எனக்கருதி வேலை நீக்கம் செய்யப்பட்டார். அதே நேரம் விசுவுடன் வேலை செய்த பாலனும் வேலை நீக்கம் செய்யப்பட்டார். அதே நேரம் பொலிஸ் தீவிர விசாரணையிலும் ஈடுபட்டது. 1982இல் மகாஜனக்கல்லூரியில் நடைபெற்று வந்த ஊழலை அம்பலப்படுத்தி ஒரு துண்டுப்பிரசுரம் விசு, சபேசன் ஆகியோரால் வெளியிடப்பட்டது. இதைத்தொடர்ந்து ஒருவர் கைது செய்யப்பட்டார். மூவர் தேடப்பட்டனர்.

1982இல் விசுவும், சிறீயும் கட்டுப்பொத்தை பல்கலைகழகத்திற்கு சென்றனர். அங்கு நாபா ( EPRLF ) வை சந்தித்தனர். அவர் ஒரு அழுக்கடைந்த சாரத்துடனும், பழைய சேட்டுடனும் திரிந்தார். இக்காலத்தில் இலங்கை இராணுவத்தினால் தேடப்பட்டார். அவரின் படமும் வெளியிடப்பட்டு, சன்மானத்தொகையும் அறிவிக்கப்பட்டிருந்தது. அவரின் எளிய வாழ்க்கை அவரின் அரசியலுக்கு அப்பால் பாராட்டத்திற்குறியது. பழக இனிமையானவராகவும், மற்றவர்களின் உணர்வுக்கு மதிப்பு கொடுக்கக்கூடியவராகவும், தான் சாப்பிடா விட்டாலும் இருக்கும் பணத்தில் மற்றவர்களுக்கு சாப்பாடு வாங்கிக்கொடுக்கக்கூடிய சிறந்த மனிதர். நல்ல மனிதர்களையும் பிழையானவர்களுக்கு உடந்தையாக மாற்றுவது அரசியலே. எந்த நல்ல மனிதனும் நடுநிலையாக இருக்க முடியாது என்பதற்கு நாபா ஒரு உதாரணம். விசுவும், சிறீயும் அங்கிருந்து கொழும்பு பல்கலைக்கழகத்திற்கும் சென்றனர். அங்கு தீபனை (பின் RELO பொறுப்பாளர்) சந்தித்தனர். தீபன் (கட்டுரையாளர்கள் கொடுத்த பெயர்) நாபா போன்று நேசிக்கப்படக்கூடிய ஒரு மனிதன். இவர் 1983இல் NLFT யில் இணையும் நிலையிலிருந்தார். அப்படி இணைந்திருப்பின் NLFT யின் பக்கங்கள் சில வேறுபாடு கொண்டதாகவும் பல சரி பிழைக்கப்பால் பலமான அமைப்பாக மாறியிருக்க வாய்ப்பிருந்திருக்கும். தீபனை இணையவிடாது சக்தி என்பவர் (இவர் முன் ஜே.வி.பி இல் இருந்தவர்) செய்த முயற்சியும் தனிதான இயக்கமொன்றை ஸ்தாபிக்கவும் செய்தார். இவர்களின் பிழையான அரசியல் இவர்களை இன்று கூட ஒரு சரியான அரசியல் சக்தியாக கணிப்பிட முடியாத நிலைக்கு இட்டுச்சென்றது.

1983இல் குறிப்பாக தீவிரமாக செயற்பட்ட உறுப்பினருக்கு அப்பால் பல புதிய ஊர்மட்டங்களில் தீவிரசெயற்பாடுகளுடன் உறுப்பினர்கள் இயங்கினர். இயக்கத்தை நோக்கி வந்த பல சக்திகளின் கோரிக்கைகள் பல தீர்க்கப்படாமல் எதுவும் முடிவுக்கு இட்டுச்செல்ல முடியவில்லை. நாம் என்ன செய்வது: வெறும் கதைப்பதா? ஆயுதப்பயிற்சி தாருங்கள்? ஆயுதம் எப்படிப்பெறப்போகின்றீர்கள்! இயக்கங்களுடன் ஐக்கிய முன்னனி கட்டலாமே! இப்படி எழுப்பப்பட்ட கேள்விக்கு இயக்கம் பதிலளிக்கவில்லை. நடைமுறை ரீதியில் ஊர்களில் வேலை செய்தவர்கள் நெருக்கடிக்குள்ளாகினர். இதைவிட தொடர்புகளை இழுத்து பிடிக்கும் நிலைக்கு இட்டுச்சென்றது.

(தொடரும்)

www.tamilarangam.net

## தாய்

எனது மகள் இறந்து போனாள்
எனக்குக்கவலை இல்லை
வேறு எதுவும் சொல்ல உண்டா ?
இல்லை, இது வீரமாணம்

பீரங்கி வேட்டுக்கள்
அஞ்சலிப்பாட்டுக்கள்
கஞ்சி போட்டுத்துவைத்து
விறைத்த சீருடை மனிதர்கள்

செல்லும் வழி தனிமை
பக்கம் வர யாருமில்லை
உண்மை உருகும்
என்ட குஞ்சு ஏன் போனாய் ?

பனி பெய்யும் போதினிலே
குளிர் இல்லை, கூதல் இல்லை
மப்பாகி மழை பெய்ய
பனி கரையும், குளிர் பெருகும்.

*** *சித்தார்த்தன்* ***

< மகள் இறந்தது கவலைப்பட வேண்டிய விடயமல்ல என்று, சூழ்நிலைகளின் கைதியாக பி.பி.சி க்கு பேட்டியளித்த தாய் குறித்து....>

www.tamilarangam.net

# கவிஞர் கட்டை தாசனுடன்.....

## கதை எழுதிப்பரிசு வாங்கும் புலவர்கள்

''ஒவ்ரா'' ஒரு அரசியல் மையம் என்பதும், அது பிரான்ஸின் அரசியல், பொருளாதார நிலைமைகளிற்கு ஏற்பவே, தஞ்சம் கோருபவர்களிற்கு அகதி அந்தஸ்து வழங்குகின்றது என்பதும் வியட்நாமியர்களிற்கு அன்றிருந்த வரவேற்பையும், இன்று அவர்கள் வேண்டாத விருந்தாளிகளாகுவதை கவனிக்கும் சின்னப்பிள்ளைக்கும் விளங்கக்கூடிய விடயம்.

ஆனால் இதை ''ஒவ்ரா'' கேஸ் எழுதி பரிசு பெறும் புலவர்கள் ஒத்துக்கொள்வதில்லை. தமது திறமைகளிற்கே ''ஒவ்ரா'' காட் கொடுப்பதாக அவர்கள் கதையளப்பர். இக்கதைகளில் எதிர்பாராத, திடுக்கிடும் சம்பவங்கள் பல வருவதுண்டு.

அகில உலக ஆனைப்பந்தியடி தமிழ் காங்கிரசின் (உபயம் கொண்டோடி சுப்பர்) பெருத்த தூண் ஒன்று பல ஆயிரத்தை வாங்கிய பின் எழுதிய கதையில் மாசி மாதம் முப்பதாம் திகதி இராணுவத்திடம் பிடிபட்டதாக திடுக்கிடும் சம்பவம் ஒன்று வந்தது.

யாழ் கோட்டைக்கு பின்னால் உள்ள வல்லைவெளியில் தாக்குதல் நடந்ததாக மயிர்கூச்செறியும் கதை ஒன்றை, பண நிகழ்சிகளிற்கு வரும் தமிழ் நடிகைகளுடன் படமெடுத்துக்கொள்வதில் முதலிடம் பிடிக்கும் கதாசிரியர் எழுதியிருந்தார்.

அவர், வீரமறவர் ஒருவருக்கு எழுதிய கதையொன்றில் அச்செந்தமிழன் வேம்படி மகளிர் கல்லூரியில் படித்ததாக வரும் சோகமான கட்டத்தை வாசித்த ''ஒவ்ரா'' கண்ணீர் விட்டு கதறியதாகவும் உருக்கமான செய்திகள் உள்ளன.

ஏதோ ஈழவரின் நல்ல காலம், இங்கு இப்படிக்கதை எழுதி பரிசு பெறலாம் என்பது நமது தமிழ் சினிமா கதாசிரியர்களிற்கு இன்னும் எட்டவில்லை. இல்லையேல் இராணுவ தளபதிகள் கவர்ச்சி நடனம் பார்த்துக்கொண்டிருக்கையில் இராணுவமுகாம் முற்றுகையிடப்பட்டதாகவும், சுப்பிரமணியம் பூங்காவில் காதலியோடு டூயட் பாடிய பொழுது பொலிஸில் பிடிபட்டார் எனவும் கதைகளைக்கேட்க வேண்டி வந்திருக்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஒலிபெருக்கியுடன் பிறந்தவர்கள்

வெள்ளிக்காண்டியுடன் பிறந்தவன் என்ற ஆங்கிலத்தொடரை கண்டுபிடித்தவன், இரண்டு தமிழ்மறவர்கள் பேசிக்கொள்வதை காணாமல் போய்விட்டானோ என்ற கவலை கவிஞருக்கு வருவதுண்டு. அவன் இல்லாததால், ''லவுஸ்பீக்கரை'' விழுங்கியபடி பிறந்தவர்கள் என்ற தொடரை தமிழ் மறவர்கள் பெற முடியாமல் போய்விட்டது. கவிஞரின் ஆபிரிக்க நண்பரான லுமும்பா ஒரு முறை ''இரண்டு தமிழர்கள், வேண்டாம் ஒரு தமிழன் கொஞ்சம் தண்ணியிலே போனால் போதும், அங்கு நல்ல தமிழ் கேட்கலாம்'' என்று சந்தோசப்பட்டார்.

ஒரு முறை, மெற்றோ பின்பெட்டியில் எறிய இரு தாய்க்குலம் வட்டி வீதம், பவுண் விலை, தமிழ் கடை தூளின் தரம் (சத்தியமா மிளகாய் தூள் தான்) ஞாயிற்றுக்கிழமை பார்த்த டி.இராசேந்திரத்தின் படம், இன்ன பிற சமுதாயப்பிரச்சனைகளை அலசிய சத்தத்தை கேட்ட றைவர் பின் பெட்டியில் யாரோ சண்டை பிடிக்கின்றார்கள் என்று பொலிசுக்கு போன் பண்ணியதால் தாய்க்குலம் பொலிஸ் ஸ்ரேசன் வரை போய் வந்ததாகவும் ஒரு செவிவழிச்செய்தி உலாவுகின்றது.

### கடிதத்தின் மூலம் அறியப்பட்ட இலங்கை நிலைமைகள்

**அரிசி 1 கிலோ - 50 ரூபாய்;**
**சீனி 1 கிலோ - 100 ரூபாய்;**
**ம.எண்ணை 1 லிட்டர் - 250 ரூ;**
**1 சோப் - 50 ரூபாய்.**

உற்பத்திக்கான அடித்தளமே நொறுக்கப்பட்ட பிறகு அத்தியாவசிய பொருட்கள் வருவதற்கான தடயமே இல்லை. தேங்காய் எண்ணெயில்தான விளக்கு எரிக்கின்றனர் மின்சாரமே இல்லை.

சோப் இல்லாததால், தலைக்கு பனம்பழத்தின் களியை எடுத்து தலைக்கு தேயத்து குளிக்கிறார்கள். குளித்து விட்டு வரும் போது பனங்களி வாசனைக்கு மாடு விட்டு விரட்டுமாம். அங்கால ஓடினா ஆர்மிக்காரன் துரத்துறான். இங்கால ஓடினா மாடு. எதற்கு தப்புவதென்றே தெரியவில்லையென்று கண்ணீரோடு எழுதுகின்றனர்.

இன்னும் சாம்பல், கறையான் புற்று மண் இவையே அவர்களின் சோப்பாகவும் பயன்படுகிறது

குறிப்பு: இவ்விலை உயர்விலும் இலங்கை மக்கள் ஏன் வாழ்கிறார்களென்றால் செஞ்சிலுவை சங்கங்கள் போன்ற சில, குறைந்த விலையில் சாமான்கள் கொடுக்கிறது.

www.tamilarangam.net

களை வானளாவப் புகழ்கிறார்கள். இந்த குறிப்பிடத்தக்க சம்பவங்களுக்கிடையிலான உறவு, மார்க்சிய-லெனினியத்திற்கு துரோகமிழைத்ததன் தவிர்க்க முடியாத பின்விளைவாகத் தோன்றியது என்பதன்றி, தற்செயலாக நிகழ்ந்தது என்று கருத ஏதேனும் வாய்ப்பு உண்டா?

குருச்சேவின் நினைவு குறுகியதாக இல்லாவிட்டால், அவர் 1937 ஜனவரியில் மாஸ்கோவில் நடந்த ஒரு மக்கள் அணிவகுப்பை நினைத்து பார்க்கட்டும். அந்த அணிவகுப்பில் ஸ்டாலினைத் தாக்கியவர்களை குருச்சேவ் மிகச் சரியாகவே கண்டனம் செய்து கீழ்கண்டவாறு பேசினார்; ''தோழர் ஸ்டாலினுக்கு எதிராகக் கரம் உயர்த்துபவர்கள் நம் அனைவருக்கும் எதிராக உயர்த்துபவர்கள், உழைக்கும் வர்க்கத்துக்கும் மக்களுக்கும் எதிராக கரம் உயர்த்துபவர்கள். தோழர் ஸ்டாலினுக்கு எதிராக கரம் உயர்த்துவதன் மூலம் அவர்கள் மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோரது போதனைகளுக்கு எதிராகக் கரம் உயர்த்துகிறார்கள்!'' குருச்சேவ் தானே ஸ்டாலினை ''மாபெரும் தோழர் லெனின் அவர்களின் நெருங்கிய நண்பர், போராட்டத் தோழன்''[1] என்றும் ஒரு ''மாபெரும் மேதை, ஆசான், மனிதகுலத்தின் தலைவர்''[2] என்றும் ''எப்பொழுதும் வெற்றியீட்டும் மாபெரும்இராணுவத்தளபதி''[3] என்றும் ''மக்களின் உண்மையான நண்பன்''[4] என்றும் தனது ''சொந்த தந்தை''[5] என்றும் திரும்பத் திரும்ப பலவிதமாக புகழ்ந்துள்ளார்.

ஸ்டாலின் உயிரோடு இருந்தபோது குருச்சேவ் கூறிய கருத்துக்களையும் ஸ்டாலின் இறந்த பிறகு குருச்சேவ் கூறிய கருத்துக்களையும் ஒருவர் ஒப்பிட்டுப் பார்த்தால் ஸ்டாலினைப் பற்றிய மதிப்பீட்டில் 180

---

1. *என். எஸ். குருச்சேவ். ''ஸ்டாலினும் சோவியத் யூனியன் மக்களின் மாபெரும் நட்புறவும்'' பிராவ்தா, டிசம்பர் 21 1939.*
2. *என். எஸ் குருச்சேவ்,ரசிய கம்யூனிஸ்ட் கட்சி(போல்ஷ்விக்)யின் 18 வது காங்கிரசில் ஆற்றிய உரை,பிராவ்தா, மார்ச் 15, 1939.*
3. *என். எஸ். குருச்சேவ் மற்றும் பிறர், சோவியத் செம்படையின் அனைத்து வீரர்கள் மற்றும் அதிகாரிகள் ஆகியோருக்கு எழுதிய கடிதம், பிராவ்தா. மே 13, 1945.*
4. *என். எஸ். குருச்சேவ், ''ஸ்டாலினும் சோவியத் யூனியன் மக்களின் மாபெரும் நட்புறவும்'' பிராவ்தா, டிசம்பர் 21, 1939,*
5. *என். எஸ். குருச்சேவ், ''மக்களிடையே ஸ்டாலினிய நட்புறவு-நமது தாயகத்தின் வெல்ல முடியாத தன்மைக்கு உத்தரவாதம்'' பிராவ்தா, டிசம்பர் 21, 1949.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டிகிரி தலைகீழாக அவர் மாறியிருப்பதை ஒருவர் காணாமலிருக்க முடியாது.

குருச்சேவ் ஞாபகசக்தி மிகவும் குறைவாக இல்லாதிருந்தால் அவர் நினைவுபடுத்திப் பார்க்கட்டும். ஸ்டாலின் தலைமைக் காலத்தில் எதிர்ப்புரட்சியாளர்களை நசுக்குவதற்கு நடைமுறையிலிருந்த கொள்கையை கடைப்பிடிப்பதிலும், ஆதரிப்பதிலும் குறிப்பாக குருச்சேவ் தானே மிகுந்த சுறுசுறுப்புடன் செயல்பட்டார்.

1937 ஜூன் 6-ம் நாள் மாஸ்கோ பிராந்தியத்தின் அய்ந்தாவது கட்சி மாநாட்டில் குருச்சேவ் பிரகடனம் செய்தார்: ''நமது கட்சி, துரோகிகளையும் காட்டிக்கொடுக்கும் கும்பலையும் ஈவு இரக்கமின்றி நசுக்கும். டிராட்ஸ்கிய வலது கழிச்சடைகள் அனைத்தையும் துடைத்தெறியும்......இதற்கான உத்தரவாதம் நமது மத்திய கமிட்டியின் அசைக்க முடியாத தலைமையாகும்; நமது தலைவர் தோழர் ஸ்டாலின் அவர்களின் அசைக்க முடியாத தலைமையாகும். நாம் எதிரிகளை முழுவதுமாக கடைசி மனிதன்வரை அழித்தொழித்து அவர்களுடைய சாம்பலை காற்றில் தூவிவிடுவோம்.''

1938-ம் ஆண்டு ஜூன் 8-ம் தேதி கீவ் பிராந்தியத்தின் நான்காவது கட்சி மாநாட்டில் குருச்சேவ் அறிவித்தார்:

''யாகிர்கள், பலிட்ஸ்கியர்கள், லியுப்செங்கியர்கள், ஜாதோனஸ்கியர்கள் மற்றும் பிற கழிசடைகளும் போலந்து நில உடமையாளர்களை உக்ரெய்னுக்குள் கொண்டுவர விரும்பினர். ஜெர்மன் பாசிஸ்ட்டுகளையும், நிலப் பிரபுக்களையும், முதலாளிகளையும் இங்கே கொண்டுவர விரும்பின. கணிசமான எண்ணிக்கையில் எதிரிகளை நாம் ஒழித்துக் கட்டியுள்ளோம். ஆயினும் இன்னும் எதிரிகள் அனைவரையும் ஒழித்துக்கட்டவில்லை, எனவே நாம் விழிப்புடன் இருப்பது அவசியம். முதலாளித்துவ முற்றுகை இருக்கும்வரை உளவாளிகளும், அழிவு வேலைக்காரர்களும் நமது நாட்டுக்குள் திருட்டுத்தனமாக அனுப்பப்படுவார்கள் என்ற தோழர் ஸ்டாலினுடைய வார்த்தைகளை நாம் நெஞ்சில் உறுதியாக நிறுத்திக்கொள்ளவேண்டும்.

ஸ்டாலின் காலத்தில் கட்சி மற்றும் அரசின் தலைமையில் இருந்த குருச்சேவ், எதிர்ப்புரட்சியாளர்களை நசுக்கும் கொள்கையை ஆதரித்து உறுதியாக நிறைவேற்றிய குருச்சேவ், அந்தக் காலத்தில் நடைபெற்ற எல்லாவற்றையும் ஏன் மறுத்துரைக்க வேண்டும்? தன்னை மட்டும் முற்ற முழுக்க தூய்மையாக்கி காட்டிக்கொண்டு எல்லாத் தவறுகளுக்கும் ஸ்டாலின் மீது மட்டும் ஏன் பழியைச் சுமத்த வேண்டும்?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஸ்டாலின் தவறான ஒன்றைச் செய்தபோது, அவர் தன்னைத் தானே விமர்சித்துக் கொள்ளும் தகுதியுடையவராக இருந்தார். உதாரணமாக, சீனப் புரட்சிக்கு வழிகாட்டும் வகையில் சில தவறான அறிவுரைகளை அவர் வழங்கியிருந்தார். சீனப் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு அவர் தனது தவறை ஒப்புக்கொண்டார். 1939-ல் நடந்த ரசிய கம்யூனிஸ்ட் கட்சி (போல்ஷ்விக்)யின் 18-வது காங்கிரசில் அவர் முன் வைத்த அறிக்கையில் கட்சி அணிகளை தூய்மைப்படுத்தும் பணியில் தான் செய்த தவறுகளில் சிலவற்றை ஒப்புக்கொண்டுள்ளார். ஆனால் குருச்சேவ் என்ன செய்தார்? சுய விமர்சனம் என்றால் என்ன என்பதையே அவர் கொஞ்சமும் அறியமாட்டார். அவர் செய்தது எல்லாம் அனைத்துப் பழியையும் மற்றவர்கள் மீது போட்டுவிட்டு சாதனைகள் அனைத்துக்கும் தானே சொந்தம் கொண்டாடியதுதான்.

நவீன திருத்தல்வாதம் வெறிகொண்டு திரியும் சமயத்தில் குருச்சேவின் இந்த அசிங்கமான நடவடிக்கைகள் நடந்ததில் ஆச்சரியம் இல்லை. மார்க்சியத்துக்கு துரோகமிழைத்ததற்காக இரண்டாம் அகிலத்தின் சந்தர்ப்பவாதிகளை விமர்சித்து 1915-ல் லெனின் சொன்னதைப்போன்று; ''வார்த்தைகள் மறக்கப்பட்டுவிடும், கொள்கைகள் இழக்கப்பட்டுவிடும், தத்துவங்கள் தூக்கியெறியப்பட்டுவிடும். அனைத்து தீர்மானங்களும் முறைப்படியான வாக்குறுதிகளும் கைவிடப்பட்டுவிடும். இந்தக் காலத்தில் இது ஆச்சரியமளிப்பதாகவே இல்லை'' [1]

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை ஸ்டாலினை முழுமையாக மறுதலித்ததின் மிகக் கடுமையான பின்விளைவுகளை ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரசுக்குப் பிறகு நடந்த தொடர்ச்சியான நிகழ்ச்சிகள் முழுமையாகக் காட்டுகின்றன.

அது ஏகாதிபத்தியவாதிகளுக்கும், அனைத்து நாடுகளின் பிற்போக்காளர்களுக்கும் மிதமிஞ்சி வரவேற்கத்தக்க ரசிய எதிர்ப்பு, கம்யூனிச எதிர்ப்பு தோட்டாக்களை வழங்கியுள்ளது. ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரசுக்குப் பிறகு வெகு குறுகியகாலத்திலேயே குருச்சேவின், ஸ்டாலின்—எதிர்ப்பு ரகசிய அறிக்கையை ரசிய நாட்டிற்கும் கம்யூனிசத்திற்கும் எதிராக ஒரு உலகு தழுவிய பேரலையை உசுப்பிவிட ஏகாதிபத்தியவாதிகள் பயன்படுத்திக் கொண்டார்கள். ஏகாதிபத்தியவாதிகளும் அனைத்து நாடுகளின் பிற்போக்காளர்களும், டிட்டோ கும்பலும்,

1. *வி. இ. லெனின் ''ஏகாதிபத்தியமும் உலகப் பொருளாதாரமும்'' என்ற என். புகாரினுடைய பிரசுரத்திற்கான முன்னுரை, தொகுப்பு நூல்கள், ஆங்கிலப் பதிப்பு, முன்னேற்ற பதிப்பகம், மாஸ்கோ 1964, தொகுதி 22, பக்கம் 104.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பல்வேறு ரகமான சந்தர்ப்பவாதிகளும் ரசிய நாட்டை தாக்குவதற்கும், சோசலிச முகாமைத் தாக்குவதற்கும், கம்யூனிஸ்ட் கட்சிகளைத் தாக்குவதற்கும் இந்த வாய்ப்பை தாவிப்பிடித்துக் கொண்டார்கள்; இவ்வாறு பல சகோதரக் கட்சிகளும், நாடுகளும் கடும் சங்கடங்களில் தள்ளப்பட்டன.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களால் ஸ்டாலினுக்கு எதிராக செய்யப்பட்ட வெறித்தனமான பிரச்சாரத்தினால் நீண்ட காலமாக அரசியல் சவங்களாகக் கிடந்த டிராட்ஸ்கியவாதிகள் மீண்டும் உயிர்பெற்று டிராட்ஸ்கிக்கு ''புனர்வாழ்வு'' கொடுக்கக் கூக்குரலிடுகின்றனர். 1961 நவம்பரில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 22-வது பேராயத்தின் முடிவில் சொல்லிக் கொள்ளப்படும் நான்காவது அகிலத்தின் சர்வதேச செயலகம் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 22-வது பேராயத்திற்கும் அதன் புதிய மத்திய கமிட்டிக்கும் எழுதிய கடிதத்தில் ஸ்டாலினால் கொலை செய்யப்பட்டவர்களை கௌரவித்து ஒரு நினைவு சின்னம் எழுப்பப்படும் என்று 1937-ல் டிராட்ஸ்கி சொன்னார் என்று குறிப்பிட்டிருந்தது. அது மேலும் தொடர்ந்து ''இன்று இந்த தீர்க்க தரிசனம் உண்மையாகியிருக்கிறது. உங்களது பேராயத்தின் முன்பு உங்கள் கட்சியின் முதல் செயலாளர் அந்த நினைவுச் சின்னத்தை நிறுவுவதாக உறுதியளித்துள்ளார்'' என்றும் குறிப்பிட்டது. இந்தக் கடிதத்தில், ஸ்டாலினால் பலி கொள்ளப்பட்டவர்களுக்கு மதிப்பளிக்கும் வகையில் நிறுவப்படும் நினைவுச் சின்னத்தின் மீது டிராட்ஸ்கியினுடைய பெயர் ''பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டும்'' என்று குறிப்பாகவே கோரப்பட்டுள்ளது. டிராட்ஸ்கியவாதிகள் தங்கள் மகிழ்ச்சியை மறைக்கவில்லை. ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையால் துவங்கப்பட்டுள்ள ஸ்டாலின் எதிர்ப்புப் பிரச்சாரம் ''டிராட்ஸ்கியிசத்துக்கு கதவு திறந்து விட்டுள்ளது'' என்றும் ''டிராட்ஸ்கியத்தையும் அதன் நிறுவனமான நான்காவது அகிலத்தையும் முன்னெடுத்துச் செல்வதற்கு மாபெரும் உதவியைச் செய்திருக்கிறது'' என்றும் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள், ஸ்டாலினை முழுவதுமாக மறுத்ததற்கு வெளியில் சொல்ல முடியாத உள்நோக்கம் இருக்கிறது.

ஸ்டாலின் 1953-ல் இறந்தார். மூன்றாண்டுகளுக்குப் பிறகு 20-வது பேராயத்தில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் அவரை மூர்க்கத்தனமாகத் தாக்கினார்கள். அவர் மறைந்து எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு 22-வது பேராயத்தில் மீண்டும் அதே போல் செய்தனர். அவரது பூத உடலை எடுத்து எரித்தனர். ஸ்டாலின் மீதான மூர்க்கத்தனமான தாக்குதலை திரும்பவும் தொடங்குவதன் மூலம் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் உலகெங்கிலுமுள்ள மக்கள் மத்தியிலும் ரசிய நாட்டிலுள்ள மக்கள் மத்தியிலும் அந்த மாபெரும் பாட்டாளிவர்க்க புரட்சியாளன் பெற்றுள்ள



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அழிக்கமுடியாத செல்வாக்கினைத் துடைத்தெறிய முனைகிறார்கள். இதன் மூலம் திருத்தல்வாதப் பாதையை நடைமுறைப்படுத்துவதற்காக, ஸ்டாலின் பாதுகாத்து வளர்த்த மார்க்சிய—லெனினியத்தை மறுத்துவிட முனைகிறார்கள். அவர்களுடைய திருத்தல்வாதப் பாதை குறிப்பாக 20-வது பேராயத்தில் தொடங்கி 22-வது பேராயத்தில் முழுமையாக முறைப்படுத்தப்பட்டு விட்டது. ஏகாதிபத்தியம், யுத்தம் மற்றும் சமாதானம், பாட்டாளிவர்க்கப்புரட்சி, பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம், காலனி, அரைக் காலனி நாடுகளில் புரட்சி, பாட்டாளிவர்க்கக் கட்சி இன்ன பிற வற்றின் மீதான மார்க்சிய-லெனினியக் கொள்கைகளை அவர்கள் திருத்தியது ஸ்டாலினை அவர்கள் முழுவதுமாக மறுதலித்ததுடன் பிரிக்க முடியாதபடி பிணைக்கப்பட்டிருப்பதை நிகழ்ச்சிகள் மேலும் தெளிவாகக் காட்டுகின்றன.

''தனிநபர் வழிபாட்டை எதிர்ப்பது'' என்ற போர்வையில்தான் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை ஸ்டாலினை முழுவதுமாக மறுக்க முயற்சிக்கிறது.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள், தலைமை பற்றிய கொள்கைகளிலும், கட்சி வாழ்க்கையிலும் லெனினிய மரபுகளை மீட்பதற்காக ''தனிநபர் வழிபாட்டை எதிர்த்த போராட்டத்தை'' தொடுக்கவில்லை. மாறாக அவர்கள் தலைவர்கள், கட்சி, வர்க்கம் மற்றும் மக்களுக்கிடையேயான பரஸ்பர உறவுகள் பற்றிய லெனினிய போதனைகளை மீறுகிறார்கள், கட்சியில் ஜனநாயக மத்தியத்துவக் கொள்கைகளுக்கு எதிராக செயல்படுகிறார்கள்.

பாட்டாளிவர்க்கத்தின் புரட்சிகரக் கட்சி புரட்சிகரப் போராட்டத்தில் பாட்டாளிவர்க்கத்தின் தலைமையகமாக உண்மையிலேயே பணியாற்ற வேண்டுமெனில், அது தலைவர்கள், கட்சி, வர்க்கம், மக்கள் ஆகியோருக்கிடையேயான பரஸ்பர உறவுகளைச் சரியாகக் கையாளவேண்டும். மேலும், ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாட்டின் அடிப்படையில் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்று மார்க்சிய—லெனினியவாதிகள் வலியுறுத்தி வருகிறார்கள். அத்தகைய ஒரு கட்சி கிட்டத்தட்ட ஒரு ஸ்திரமான தலைமைக் கருக்குழுவை பெற்றிருக்க வேண்டும். அத்தலைமை மார்க்சிய—லெனினிய சர்வ வியாபக உண்மையை புரட்சியின் பருண்மையான நடைமுறையுடன் இணைப்பதில் சிறந்தவர்களாக விளங்கும் புடம் போட்ட தலைவர்களடங்கிய ஒரு குழுவை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

பாட்டாளி வர்க்கக் கட்சியின் தலைவர்கள் அவர்கள் உள்ளூர் கமிட்டியைச் சார்ந்தவர்களாயினும் சரி, மத்திய கமிட்டியைச் சார்ந்தவர்களா

www.tamilarangam.net

யினும் சரி வாக்கப் போராட்டம் மற்றும் புரட்சிகர வெகுஜன இயக்கங்களின் போக்கில் மக்களிடமிருந்து தோன்றுகிறார்கள். அவர்கள் மக்களிடம் எல்லையற்ற விசுவாசம் கொண்டவர்கள், மக்களுடன் நெருக்கமான உறவு வைத்திருப்பவர்கள், மக்களின் எண்ணங்களை சரியான முறையில் ஒருமுனைப்படுத்தி அவற்றை செயல்படுத்துவதில் வல்லவர்கள். அத்தகைய தலைவர்கள் பாட்டாளிவர்க்கத்தின் உண்மையான பிரதிநிதிகள், மக்களால் அங்கீகரிக்கப்பட்டவர்கள். அத்தகைய தலைவர்களைப் பெற்றிருப்பது ஒரு பாட்டாளிவர்க்கக் கட்சியின் அரசியல் முதிர்ச்சியின் அடையாளமாகும். பாட்டாளி வர்க்க இலட்சியத்தின் வெற்றிக்கான நம்பிக்கை இதில்தான் இருக்கிறது.

லெனின் மிகச் சரியாகச் சொன்னார்: ''வரலாற்றில் எந்த ஒரு வர்க்கமும் தனது அரசியல் தலைவர்களை—ஒரு இயக்கத்தைக் கட்டி அதற்கு தலைமை தாங்கி வழி நடத்திச் செல்லக்கூடிய புகழ்பெற்றுச் சிறந்த தனது பிரதிநிதிகளை—உருவாக்காமல் அரசியல் அதிகாரத்தை வென்றதில்லை.''[1] அவர் மேலும் சொன்னார்: ''அனுபவமிக்க பெரும் செல்வாக்கு பெற்ற கட்சித் தலைவர்களை பயிற்றுவிப்பது என்பது நீண்டகாலம் பிடிக்கக்கூடிய கடினமான பணியாகும். ஆனால் இதில்லாமல் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற அதன் ''ஒன்றுபட்ட விருப்பம்''[2] என்பது ஒரு வெற்றுச் சொல்லாகவே இருக்கும்.

வரலாற்றில் மக்கள், தனிநபர் ஆகியோரது பாத்திரம் மற்றும் தலைவர்கள், கட்சி, வர்க்கம், மக்கள் ஆகியவற்றின் பரஸ்பர உறவு பற்றிய மார்க்சிய—லெனினிய போதனைகளை எப்போதும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி பின்பற்றி வந்திருக்கிறது; கட்சியின் ஜனநாயக மத்தியத்துவத்தை உயர்த்திப்பிடித்திருக்கிறது. நாங்கள் எப்போதும் கூட்டுத் தலைமையை கடைப்பிடித்து வந்திருக்கிறோம். அதே சமயத்தில் தலைவர்களின் பாத்திரத்தை சிறுமைப்படுத்துவதை எதிர்க்கிறோம். தலைவர்களின் பாத்திரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் அதேவேளையில் தனி நபர்கள் நேர்மையற்ற முறையில் அளவுக்கதிகமாகப் புகழப்படுவதையும், அவர்களின் பாத்திரம் மிகைப்படுத்தப்படுவதையும் எதிர்க்கிறோம். 1949 லேயே சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி, தோழர் மாசேதுங்கின் ஆலோசனைப்படி, கட்சித் தலைவர்களின் பிறந்த நாட்களில் எந்த விதமான பொது விழாக்கள் எடுப்பதையும், இடங்கள், தெருக்கள், நிறு

1. *வி. இ. லெனின் ''நமது இயக்கத்தின் அவசரக் கடமைகள்'' தேர்வு நூல்கள், ஆங்கிலப் பதிப்பு, இண்டர் நேசனல் பப்ளிசர்ஸ், நியூயார்க், 1943, தொகுதி 2, பக் 13.*

2. *வி. இ. லெனின் ''ஜெர்மன் கம்யூனிஸ்டுகளுக்கு ஒரு கடிதம்'' தொகுப்பு நூல்கள், ரசியப் பதிப்பு எஸ். பி. பி. எல். மாஸ்கோ 1950, தொகுதி 32, பக்கம் 492.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வனங்களுக்கு அவர்கள் பெயர் சூட்டப்படுவதையும், தடைசெய்யும் ஒரு முடிவை எடுத்துள்ளது.

இந்த முரண்பாடற்ற சரியான எங்களுடைய அணுகுமுறை, ரசிய கம்யூனிஸ்ட் கட்சி தலைமையால் முன்வைக்கப்பட்ட ''தனிநபர் வழிபாட்டை எதிர்த்த போராட்டத்திலிருந்து'' அடிப்படையிலேயே மாறுபட்டதாகும்.

'தனிநபர் வழிபாட்டை எதிர்த்த போராட்டத்தை' முன்வைக்கும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களது நோக்கம் அவர்கள் கூறு வதைப் போல, ஜனநாயகத்தை வளர்ப்பதோ, கூட்டுத் தலைமையை நடைமுறைப்படுத்துவதோ தனிநபர் பாத்திரம் மிகைப்படுத்தப்படு வதை எதிர்ப்பதோ அல்ல. மாறாக அவர்களுக்கு வேறு உள்நோக்கங் கள் இருக்கின்றன. அவர்களின் 'தனிநபர் வழிபாட்டை எதிர்த்த போராட்டத்தின்' உண்மையான சாராம்சம் என்ன?

ஒளிவுமறைவின்றிச் சொல்ல வேண்டுமானால் கீழ்க்கண்டவற்றைத் தவிர வேறொன்றுமில்லை:

1. ''தனிநபர் வழிபாட்டை எதிர்ப்பது'' என்ற பெயரில் கட்சியின் தலைவரான ஸ்டாலினை கட்சி அமைப்புக்கும், பாட்டாளி வர்க்கத்திற் கும் பரந்துபட்ட மக்களுக்கும் எதிராக நிறுத்துவது.

2. ''தனிநபர் வழிபாட்டை எதிர்ப்பது'' என்ற பெயரில் பாட் டாளி வர்க்க கட்சியையும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும், சோசலிச அமைப்பு முறையையும் களங்கப்படுத்துவது.

3. ''தனிநபர் வழிபாட்டை எதிர்ப்பது''என்ற பெயரில் தங்களைத் தாங்களே உயர்த்திக் கொள்வது, மார்க்சிய-லெனினியத்திற்கு விசுவாச மாக இருக்கும் புரட்சியாளர்களைத் தாக்குவது, அதன் மூலம் திரிபு வாத சூழ்ச்சியாளர்களுக்கு கட்சி மற்றும் அரசு தலைமையைக் கைப்பற்ற பாதையமைத்து தருவது.

4. ''தனிநபர் வழிபாட்டை எதிர்ப்பது'' என்ற பெயரில் தோழமைக் கட்சிகள் மற்றும் நாடுகளது உள்விவகாரங்களில் தலையிடுவது, அவற் றின் தலைமையைத் தமது வசதிக்கேற்ப கவிழ்க்க முயல்வது.

5. ''தனிநபர் வழிபாட்டை எதிர்ப்பது'' என்ற பெயரில் மார்க்சிய லெனினியத்தைப் பின்பற்றும் சகோதரக் கட்சிகளைத் தாக்குவது, சர்வதேச கம்யூனிச இயக்கத்தை பிளவுபடுத்துவது.

குருச்சேவினால் தொடுக்கப்பட்டுள்ள ''தனிநபர் வழிபாட்டுக்கெதி ரான போராட்டமானது'' ஒரு வெறுக்கத்தக்க அரசியல் சதிச்செயலாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மார்க்ஸால் வர்ணிக்கப்பட்ட ஒருவரைப் போல் ''அவர் தன் இயல்பில் ஒரு சதிகாரர், அதே வேளையில் கோட்பாட்டாளன் என்ற முறையில் ஒரு அனாமதேயம்'' [1]

ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பகிரங்கக் கடிதம், ''தனிநபர் வழிபாட்டை நிராகரித்து அதன் பின் விளைவுகளை எதிர்த்து போராடும் வேளையில்'' அவர்கள் ''தகுதி வாய்ந்த பெருமைக்குரிய தலைவர்கள் மீது உயர்ந்த மதிப்பை வைத்திருப்பதாகவும்'' குறிப்பிடுகிறது. இதன் பொருள் என்ன? இதன் பொருள், ஸ்டாலினைக் காலில் போட்டு மிதிக்கும் வேளையில் ரசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் குருச்சேவை வானளாவப் புகழ்கிறார்கள் என்பதாகும்.

அக்டோபர் புரட்சியின்போது இன்னும் ஒரு கம்யூனிஸ்ட்ஆகாமலும், உள்நாட்டுப் போரின்போது ஒரு கீழ்மட்ட அரசியல் பணியாளராகவும் இருந்த குருச்சேவை, அவர்கள் ''செயலூக்கத்துடன் செம்படையை உருவாக்கியவர்'' என்று வர்ணிக்கிறார்கள். [2]

ஸ்டாலின் கிராடு போர்க்களத்தில் ''குருச்சேவின் குரலே அடிக்கடி கேட்டது'' [3] என்றும், அவர் ''ஸ்டாலின் கிராடு வாசிகளின் ஆன்மாவாக'' [4] திகழ்ந்தார் என்றும் சொல்லி அவர்கள் சோவியத் தேச பக்த யுத்தத்தின் தீர்மானகரமான மாபெரும் வெற்றிக்கு முழுவதுமாகக் குருச்சேவ்தான் காரணம் என்று குறிப்பிடுகிறார்கள்.

ஏவுகணை மற்றும் அணு ஆயுத தளவாடங்களில் ஈட்டிய மாபெரும் சாதனைகளுக்கு குருச்சேவ்தான் காரணம் என்று கூறும் அவர்கள் குருச்சேவை ''விண்வெளித் தந்தை'' [5] என்று அழைக்கிறார்கள். ஆனால் அணு மற்றும் ஹைட்ரஜன் குண்டுகள் தயாரிப்பதில் ரசியா

1. ''எப். போல்டேக்கு மார்க்ஸ்'', காரல் மார்க்ஸ், பிரடெரிக் எங்கெல்ஸ் ஆகியோரின் தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகள், ஜெர்மன் பதிப்பு, அயல்மொழிப் பதிப்பகம், மாஸ்கோ 1950, தொகுதி 2, பக் 438.
2. ''மக்களுக்கான வாழ்க்கை'' ஜாரியா வோஸ்டோகா, டிசம்பர் 17, 1961.
3. ''கட்சியால் உருவாக்கப்பட்டு வளர்க்கப்பட்டது'' கிளர்ச்சியாளன் எண் 2, 1963.
4. வி.அய். சுலிகோவ், சோவியத் யூனியனின் மாபெரும் தேசபக்த யுத்தத்தின் 20-வது ஆண்டு விழாவைக் குறிக்கும் பேரணியில் ஆற்றிய உரை, பிராவ்தா, ஜூன் 22, 1961.
5. ஜி. எஸ். டிடோவ், ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 22-வது பேராயத்தில் ஆற்றிய உரை, அக்டோபர் 26, 1961.

மீதி அடுத்த இதழில்...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மார்க்ஸிம் கோர்க்கியின் "தாய்" என்ற நாவலில் இருந்து

மனிதாபிமானம் என்பது பாழ்ந்துபட்டது. ஆனால் மக்களுக்கானது! மக்களுடைய நலனுக்கு அப்பால் மனிதாபிமானமென்பது சமூகவிரோதமானது.
*மார்க்ஸிம் கோர்க்கியின் ''தாய்'' என்ற நாவலிலிருந்து*

''நாம் உணவுக்காகக் கால்நடைகளைக் கொல்கிறோம். அதுவே மோசம். காட்டு மிருகங்களால் ஆபத்து வருமென்று தெரிந்தால் அவற்றையும் நாம் கொன்று தீர்க்கிறோம். அது சரிதான். அது எனக்குப் புரிகிறது. ஒரு மனிதன் தன்னுடைய சகமனிதர்கள் மீது காட்டு மிருகத்தைப்போல் பாய்ந்து கடித்துத் தின்ன முனைந்தால், அவனை நான் மிருகத்தைக் கொல்வதைப்போல் கொன்று தீர்க்கத் தான் செய்வேன். ஆனால் இவனை மாதிரி அனுதாபத்துக்குரிய ஒரு ஜந்துவைத் தீர்த்துக் கட்டுவதென்றால்? இவனை எப்படித்தான் ஒருவன் தாக்க நினைப்பான்?''

ஹஹோல் தன் தோள்களைக் குலுக்கிக் கொண்டான்.

''இவனும் ஒரு காட்டு மிருகத்தைப் போல மோசமானவன்தான்'' என்றான் ஹஹோல். ''நாம் கொசுவை எதற்காகக் கொல்கிறோம்? நம்முடைய உடம்பிலிருந்து அது ஒரு துளி ரத்தத்தை உறிஞ்சிவிட்டது என்பதற்குத் தானே!''

''அது உண்மைதான். நான் அதைச் சொல்லவில்லை. அது எவ்வளவு அருவருப்புத் தரும் விஷயம் என்பதைத்தான் குறிப்பிட்டேன்.''

''வேறு வழியில்லை'' என்று அந்திரேய் மீண்டும் தன் தோளைக் குலுக்கிவிட்டுச் சொன்னான்.

''அந்த மாதிரி ஜந்துவை நீ கொல்லுவாயா?'' என்று சிறிது நேரம் கழித்துக் கேட்டான் பாவெல்.

www.tamilarangam.net

ஹஹோல் தனது அகன்ற கண்களால் பாவெலையே வெறித்துப் பார்த்தான். பிறகு தாயின் பக்கம் திடீரெனத் தன் பார்வையைத் திருப்பினான்.

''நம்முடைய கொள்கையின் நலத்துக்காகவும், என்னுடைய தோழர்களின் நலத்துக்காகவும் நான் எதையுமே செய்வேன்'' என்று துக்கமும் உறுதியும் தோய்ந்த குரலில் சொன்னான் அந்திரேய்; ''அதற்காக, நான் என் சொந்த மகனைக்கூடக் கொல்லுவேன்!''

''ஆ! அந்திரியூஷா!'' என்று திகைத்துப் போய் வாய்க்குள் முணுமுணுத்தாள் தாய்.

''வேறு வழியில்லை, அம்மா'' என்று கூறி அவன் புன்னகை புரிந்தான்; ''நமது வாழ்க்கை அப்படிப்பட்டது!''

''நீ சொல்வது சரி. நம் வாழ்க்கை அப்படிப்பட்டது தான்!'' என்றான் பாவெல்.

இதயத்துக்குள்ளே ஏதோ ஒன்று தட்டியெழுப்பிய மாதிரித் திடீரென உத்வேக ஆவேசத்தோடு துள்ளியெழுந்தான் ஹஹோல்.

''அதற்கு நாமென்ன செய்ய முடியும்?'' என்று கைகளை ஆட்டிக் கொண்டே சத்தமிட்டான் ஹஹோல். ''மக்கள் இனத்தை நாம் அனைவரும் மனப்பூர்வமாக ஒருவருக்கொருவர் நேசிக்கப்போகும் காலத்தைத் துரிதப்படுத்துவதற்காக, நாம் சிலரைப் பகைத்துத் தான் ஆகவேண்டியிருக்கிறது. நம்முடைய முன்னேற்றப் பாதையில் முட்டுக்கட்டை போடுபவர்களை நாம் துடைத்துத் தீர்த்துவிடத்தான் வேண்டும். தனக்குச் சுகவாழ்வும் பெயரும் கிட்டவேண்டும் என்பதற்காக, எவனொருவன் பணத்தை வாங்கிக்கொண்டு, மக்களை விலைக்குக் காட்டிக் கொடுக்கிறானோ, அவனை நாம் அழித்துத் தான் தீர வேண்டும். நேர்மையான மனிதர்களின் மார்க்கத்தை எவனாவது ஒரு யூதாஸ்* வழிமறித்தால், அவர்களைக் காட்டிக் கொடுப்பதாகச் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கிக் காத்திருந்தால், அவனை ஒழித்துக் கட்டத்தான் நான் முனைவேன்! அவனை ஒழித்துக் கட்டாவிட்டால், நானும் ஒரு யூதாஸ் மாதிரியே ஆகிவிடுவேன்! அப்படிச் செய்ய எனக்கு உரிமை கிடையாது என்கிறாயா? ஆனால் நம்மை அடக்கியாள்கிறார்களே, நமது முதலாளிகள்,—அவர்களுக்கு மட்டும்

---

* யூதாஸ்—ஏசு கிறிஸ்துவைக் காட்டிக்கொடுத்தவன். அவரோடு கூடவே இருந்து துரோகம் செய்தவன்.—மொ-ர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

உரிமை இருக்கிறதா? படை பலத்தையும் கொலையாளிகளையும் வைத்திருக்க, சிறைக் கூடங்களையும் விபசார விடுதிகளையும் நாடு கடத்தும் இடங்களையும் வைத்திருக்க, தங்களது சுக போகத்தையும் பாதுகாப்பையும் அரணிட்டுப் பாதுகாக்கும் சகல விதமான கொலைச் சாதனங்களையும் வைத்துக்கொண்டிருக்க அவர்களுக்கு மட்டும் என்ன உரிமை இருக்கிறது? சில சமயங்களில் அவர்களது ஆயுதத்தையே பிரயோகிக்க வேண்டிய நிர்ப்பந்தச் சங்கடத்துக்கு நான் ஆளானேன் என்றால் அது என்னுடைய தவறு? என்னுடைய குற்றமா? இல்லை. நானும் அதை உபயோகிப்பேன். அவர்கள் நம்மை நூற்றுக் கணக்கில், ஆயிரக் கணக்கில் கொன்று குவித்தால் நானும் சும்மாயிருக்க மாட்டேன். நானும் என் கையை ஓங்குவேன். அந்த உரிமை எனக்கு உண்டு. அவர்களில் ஒருவரையேனும் நான் ஒரே போடாய்ப் போட்டுக் கொல்லுவேன். எனக்குச் சமீபமாக வரும் பகைவனின் தலையை நான் நொறுக்கத்தான் செய்வேன். மற்றவர்களைவிட, எனது வாழ்க்கை லட்சியத்துக்கு அதிகமான தீங்கிழைக்க முனையும் அந்தப் பகைவனை நான் அறையத்தான் செய்வேன். வாழ்க்கை அப்படி அமைந்து கிடக்கிறது. ஆனால் அந்த மாதிரி வாழ்க்கையை நான் விரோதிக்கத்தான் செய்கிறேன்; அந்த மாதிரி இருப்பதற்கு நான் விரும்பவும்தான் இல்லை. அவர்களது ரத்தத்தால் எந்த விதப் பயனும் விளைந்துவிடப் போவதில்லை; அது வெறும் விருதா ரத்தம்,விளைவற்ற ரத்தம் என்பது எனக்குத் தெரியும். ஆனால் நமது ரத்தமட்டும் பூமியில் மழை மாதிரி பொழிந்து கொட்டுமேயானால், நாம் சிந்திய ரத்தத்திலிருந்து உண்மை பிறக்கும்; சத்தியம் அவதாரம் செய்யும்! ஆனால் அவர்களது நாற்றம் பிடித்த ரத்தமோ எந்தவித மச்ச அடையாள மருக்கள் ஏதுமின்றி மண்ணோடு மண்ணாய் மறைந்து மக்கிப் போய்விடும்! எனக்கு அது தெரியும். இருந்தாலும் இந்தப் பாபத்தை நான் என் தலையில் ஏற்றுக் கொள்கிறேன். கொலை செய்துதான் ஆக வேண்டுமென்றிருந்தால், நான் கொல்லத் தான் செய்வேன். ஞாபகம் இருக்கட்டும்! நான் எனக்காகத் தான் பேசிக்கொள்கிறேன். எனதுபாபம் என்னுடனேயே சாகும். அந்தப் பாபம் எதிர்காலத்தில் கறைபடியச் செய்யாமல் தொலையும்! அந்தப் பாபம் என்னைத் தவிர, வேறு எவரையும், வேறு எந்த ஆத்மாவையும் கறைப்படுத்தாது மறைந்து மாயும்!''

www.tamilarangam.net

நிகழ்கால நிகழ்வுகளுடன் கைகுலுக்கிக்
கொண்டே எதிர்காலத்தின் குரல்வளைக்குத்
துப்பாக்கி வைக்கின்றார்கள் !

தொடர்பு முகவரி :-

SAMAR

BOITE - 188
BAT E
150, RUE LEOPOLD RECHOSSIERE
93300 AUBERVILLIERS
FRANCE

சந்தா அனுப்பவேண்டிய தபாற்கணக்கு :-

2.674.73 M
CENTRE DE CHEQUEES POSTAUX
75900 PARIS CHEQUES
FRANCE

சந்தா விபரங்கள் :-

| | | |
|---|---|---|
| பிரான்ஸ்...................... | 6 பிரதிகள்....... | 60 F |
| | 12 பிரதிகள்....... | 120 F |
| ஐரோப்பியநாடுகள்........ | 6 பிரதிகள்....... | 100 F |
| | 12 பிரதிகள்....... | 200 F |
| ஏனைய நாடுகள்......... | 12 பிரதிகள்....... | 225 F |

**வாசகர்களே ! உங்களிடமிருந்து ஆக்கங்களையும், ஆரோக்கியமான விமர்சனங்களையும் எதிர்பார்க்கின்றோம்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வெளியீடு - தமிழ் அகதிகள் இலக்கிய வட்டம்
( பதிவு செய்யப்பட்டது-3/16956 )

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்